வருடாந்த அறிக்கை

2021

இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை

பொருளடக்கம்	பக்க இல.
தலைவரின் செய்தி	1-2
பணிப்பாளர் நாயகத்தின் செய்தி	3-4
தூரநோக்கு மற்றும் செயற்பணி	5
அறிமுகம்	6
முகாமைத்துவச் சபை	6-7
நிறைவேற்றுப் பொழிப்பு	8-10
கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு மீளாய்வு 2021	10-13
இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையை நிறுவுதல்	13
இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையின் செயற்பாடுகள்	13-15
அங்கீகாரம் (உரிமம் மற்றும் ஒப்புதல்கள்)	15-17
இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாடு	17-18
பாதுகாப்பு களப்பரிசோதனைகள் மற்றும் அமுலாக்கம்	18-21
அணு மற்றும் பிற கதிரியக்கப் பொருட்களின் பாதுகாப்பு	21-24
கதிரியக்கப் பொருட்களின் போக்குவரத்தில் பாதுகாப்பு	24
அவசரகால எதிர்கொள்ளல்	24-26
SRL - 9011 TC செயற்திட்ட நடைமுறைப்படுத்தல்	26-27
IAEA ஆல் நடாத்தப்பட்ட பாதுகாப்புச் செயற்பாடுகள் மற்றும் பாதுகாப்பு பரிசோதனைகளை நடைமுறைப்படுத்துதல	27-28
ஒழுங்குபடுத்தல் செயற்பாட்டை பலப்படுத்துவதற்கான ஆவணங்களைத் தயாரித்தல்	28
2021 இல் திட்டமிடப்படாது நடத்தப்பட்ட முக்கியமான செயல்பாடுகள	29-32
நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின் (SDG) அடைவுகள் மீதான செயலாற்றல்	33-35
மனித வள அபிவிருத்தி	36-40
லங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையின் நிதிக்கூற்றுக்கள் (பேரவை) 2021	41-67
கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை	68-78
கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை மீதான கருத்துரைகள்	79-94
செயலாற்றல் அறிக்கை – 2021	95-138

தலைவரின் செய்தி



இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை (பேரவை) அதன் ஏழாவது ஆண்டை நிறைவு செய்யும் நேரத்தில் இந்தச் செய்தியை நான் மிகவும் மகிழ்ச்சியுடன் பதிவு செய்கிறேன். கதிரியக்க பாதுகாப்பு மற்றும் அணுசக்தி பாதுகாப்புக்கான ஒழுங்குபடுத்தல் உட்கட்டமைப்பை வலுப்படுத்துவதற்காக பல்வேறு அத்தியாவசிய ஆவணங்களைத் தயாரித்து பூரணப்படுத்துவதற்கும் உரிமம் வழங்குதல், களப்பதிசோதனை, இறக்குமதி / ஏற்றுமதி கட்டுப்பாடு, கழிவு பாதுகாப்பு மற்றும் கதிரியக்க அவசரநிலை தொடர்பான செயல்பாடுகளைச் செய்வதன் மூலம் பயனுள்ள ஒழுங்குபடுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தை செயல்படுத்துவதற்கும் பேரவைக்கு முடிந்திருந்தமையால் 2021 ஆம் ஆண்டு பேரவைக்கு குறிப்பிடத்தக்க ஆண்டாக இருந்தது.

IAEA கதிர்வீச்சு பாதுகாப்பு தகவல் முகாமைத்துவ முறைமை (RASIMS) இன் திரவ கதிரியக்க கழிவு வெளியேற்ற அளவுகள் மற்றும் தேவைகளை ஒருங்கிணைப்பதற்காக, அயனாக்கல் கதிர்வீச்சு பாதுகாப்பு மற்றும் மூலங்களின் பாதுகாப்பிற்கான ஒழுங்குவிதிகளின் இறுதிப் பதிப்பு பேரவையின் சிரேஷ்ட ஒழுங்குபடுத்தல் அதிகாரிகளால் மேலும் மீளாய்வு செய்யப்பட்டது. தொழில்சார் கதிர்வீச்சு பாதுகாப்பு மதிப்பீட்டு சேவை (ORPAS) அறிக்கை பரிந்துரைகள். திருத்தப்பட்ட விதிமுறைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

உற்பத்தி, பயன்பாடு மற்றும் களஞ்சியப்படுத்தலின் போது கதிரியக்க மூலங்களின் பாதுகாப்பிற்கான ஒழுங்குவிதிகள் பூரணப்படுத்தப்பட்டு, சட்ட வரையுநர் திணைக்களத்தின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. சட்ட வரையுநர் திணைக்களத்தின் ஒப்புதல் பெறப்பட்டு, மூன்று மொழிகளில் தயாரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் வர்த்தமானியில் வெளியிடுவதற்காக அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இந்த ஒழுங்குவிதிகள் இயற்றப்பட்ட பின்னர், கதிரியக்க மூலங்களின் பாதுகாப்பிற்கான தேவைகளைச் செயற்படுத்துவதற்கான சட்டப்பூர்வ அதிகாரங்கள் பேரவைக்கு கிடைக்கும்.

பேரவை, கதிரியக்கத் தொழிலாளர்களின் தகுதிக்கான அளவுகோல்களின் விதியை வரைந்துள்ளதுடன் விதியில் பட்டியலிடப்பட்டுள்ள தகுதிகள் இல்லாத, முன்னர் அங்கீகரிக்கப்பட்ட தொழிலாளர்களைச் சேர்ப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்வதற்காக ஒரு குழுவால் இந்த வரைவு மீளாய்வு செய்யப்பட்டு வருகின்கிறது.

2021 பெப்ரவரி 24 ஆந் திகதி அனர்த்த முகாமைத்துவ மன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய அணு அல்லது கதிரியக்க அவசரகால முகாமைத்துவத் திட்டம், சாத்தியமான அணு அல்லது கதிரியக்க அவசரநிலையை எதிர்கொள்வதற்கான உட்கட்டமைப்பை உருவாக்குவதற்காக பேரவையால் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

அணுசக்தி பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தொடர்பான பல ஒப்பந்தங்கள், சாசனங்கள் மற்றும் உடன்படிக்கைகளில் இலங்கை ஒரு பங்காளியாக மாறியுள்ளது. 2014 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்திச் சட்டத்தின் பிரிவு 12(உ) இன் படி மேற்கூறிய உடன்படிக்கைகள் மற்றும் சாசனங்களிலுள்ள இலங்கையின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு பேரவை பொறுப்பாக உள்ளது. அதன்படி, அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தம் (INFCIRC/320) தொடர்பாக இலங்கை கையெழுத்திட்டுள்ள விரிவான பாதுகாப்பு ஒப்பந்தத்திலுள்ள இலங்கைக்கான கடமைகளை நிறைவேற்றுவதற்கு பேரவை முழுமையான அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது. பேரவை 2021 இல் அணுசக்தி பொருள் கணக்கெடுப்பு தரவுகளின் தேவையான அனைத்து அறிக்கைகளையும் IAEA க்கு அனுப்பியுள்ளது. மேற்கூறிய பிரகடனத்தின்படி, IAEA இன் பாதுகாப்பு பரிசோதகர்கள் பெதீகரீதியான பொருள் கணக்கெடுப்பு மற்றும் ஆதார ஆவண பரிசோதனைக்காக 2021 டிசம்பர் 2- 3 வரை குறைக்கப்பட்ட யுரேனியம் சேமித்து வைக்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்ற இலங்கையிலுள்ள 05 நிறுவனங்களுக்கு விஜயம் செய்தனர்.

AEA இன் சர்வதேச அவசரநிலை மையத்தால் (IAEA-IEC) 2021 மே 27 மற்றும் 2021 ஒக்தோபர் 26 மற்றும் 27 ஆகிய தேதிகளில் நடத்தப்பட்ட முறையே IAEA ConvEx-2a மற்றும் ConvEx-3 சர்வதேச அவசரகால எதிர்கொள்ளல் பயிற்சிகளில் பேரவை மீளாய்வாண்டில் பங்கேற்றது. உண்மையான அணுசக்தி அல்லது கதிரியக்க அவசரநிலையின் போது IAEA அவசர தகவல் தொடர்பு வானலைகளை பயன்படுத்துவதற்கும் தகவல் பரிமாற்றம் செய்வதற்கும் எமது உத்தியோகத்தர்களிற்கு இந்தப் பயிற்சிகள் பயனுள்ளதாக அமைந்திருந்தன.

விஞ்ஞான மற்றும் நிர்வாகப் பணிகளுக்கு பயிற்சி பெற்ற மற்றும் போதுமான எண்ணிக்கையிலான நபர்கள் இல்லாமல் பேரவைக்கு வினைத்திறனாக செயல்படுவதற்கு முடியாதிருப்பதனால், பேரவையின் முகாமைத்துவச் சபையானது ஆட்சேர்ப்பு மற்றும் மனித வள அபிவிருத்திக்கு இந்த ஆண்டும் முன்னுரிமை அளித்துள்ளது. 2021 யூலை 01 முதல் பேரவைக்கு 03 விஞ்ஞான உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டதுடன் ஆட்சேர்ப்பு கட்டுப்பாடுகள் காரணமாக ஏனைய வெற்றிடங்களிற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு முடியவில்லை. 2021 ஆம் ஆண்டில் ஒரு பிரதிப் பணிப்பாளர் பணிப்பாளர் (களப்பரிசோதனை) பதவிக்கு பதிவி உயர்த்தப்பட்டதுடன் ஒரு சிரேஷ்ட விஞ்ஞான உத்தியோகத்தர் பிரதிப் பணிப்பாளர் பதவிக்கு பதவி உயர்த்தப்பட்டார்.

2021 ஆம் ஆண்டில் அணுசக்தி ஒழுங்குபடுத்தல் விடயங்களில் விஞ்ஞான அறிவை அதிகரித்துக் கொள்வதற்காக சர்வதேச அணுசக்தி முகவர் நிறுவனம் மற்றும் ஏனைய சர்வதேச அமைப்புகளால் நடத்தப்பட்ட மெய்நிகர் ஒழுங்குபடுத்தல் பயிற்சிகள் மற்றும் செயலமர்வகளில் விஞ்ஞான உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். இந்தப் பயிற்சி நெறிகளில் கலந்துகொண்ட விஞ்ஞான உத்தியோகத்தர்கள் பெற்றுக்கொண்ட அறிவு மற்றும் அனுபவங்களின் வாயிலாக பேரவை அதன் ஒழுங்குபடுத்தல் பணிகளை மேம்படுத்துவதற்கு பெரிதும் பயனுள்ளதாக இது காணப்பட்டது.

02/2008 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் தேவைப்பாட்டிற்கு அமைய மனித வள அபிவிருத்திக்கான (HRD) வரைவுத் திட்டத்தை பேரவை தயாரித்துள்ளது. பேரவை இந்த ஆவணத்தை பூரணப்படுத்தி, மனித வள அபிவிருத்தித் துறையை 2022 ஆம் ஆண்டில் அமுல்படுத்த எதிர்பார்க்கின்றது. ஒவ்வொரு பரிசோதகராலும் மேற்கொள்ளப்படுகின்ற பரிசோதனைகளில் ஒத்த தன்மையைப் பராமரிப்பதற்காக ஒரு உள்ளக பரிசோதனை நடைமுறை (SLAERC/Ins.Pro/2021) தயாரிக்கப்பட்டு, அதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவிய கோவிட் 19 நிலைமைக்கு மத்தியிலும் 2021 ஆம் ஆண்டில் பேரவையின் அணுசக்தி ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகளை செயல்படுத்துவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைவதில் முகாமைத்துவச் சபை, பணிப்பாளர் நாயகம் மற்றும் பேரவையின் ஊழியர்கள் முக்கிய பங்காற்றியுள்ளனர்.

முடிவில், பேரவையின் பணிகளை முன்னெடுப்பதற்கு விலைமதிப்பற்ற கொள்கைத் தீர்மானங்களை எடுப்பதற்காக எனக்கும் பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்கும் வழிகாட்டுதல்களையும் ஆதரவையும் வழங்கிய மாண்புமிகு அமைச்சர் மற்றும் மின்வலு அமைச்சின் செயலாளர் மற்றும் சூரிய, காற்றாலை மற்றும் நீர் மின் உற்பத்தி திட்டங்கள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் மாண்புமிகு அமைச்சர் மற்றும் அந்த அமைச்சின் செயலாளர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்.

இறுதியாக, பேரவையின் ஒழுங்குமுறைப்படுத்தல் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதில் ஆண்டு முழுவதும் விடாமுயற்சி, அர்ப்பணிப்பு மற்றும் அசைக்க முடியாத ஒத்துழைப்பை வழங்கிய பணிப்பாளர் நாயகம் தலைமையிலான பேரவையின் அனைத்து உறுப்பினர்களுக்கும், பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அனைவருக்கும் எனது நன்றி மற்றும் நல்வாழ்த்துக்கள்.



சிட்னி கஜநாயக்க
தலைவர்
இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை

பணிப்பாளர் நாயகத்தின் செய்தி



தொடர்ச்சியாக 7 ஆவது முறையாக பேரவையின் வருடாந்த அறிக்கைக்கு செய்தி ஒன்றை எழுதுவதில் மகிழ்ச்சி அடைகின்றேன். இலங்கை அணுசக்தி ஒழுங்குமுறைப் பேரவையின் (பேரவை) ஏழாவது வருடாந்த அறிக்கையானது 2021 ஆம் ஆண்டுக்கான செயற்பாடுகளை முன்வைக்கின்றது. பேரவையின் பணிப்பாளர் நாயகம் என்ற வகையில் நாட்டின் கதிர்வீச்சுப் பாதுகாப்பு மற்றும் அணுப் பாதுகாப்பு உட்கட்டமைப்பினை அபிவிருத்தி செய்வதற்கும் பேரவையினது ஒழுங்குபடுத்துதல் நிகழ்ச்சித்திட்டத்தினை பலப்படுத்துவதற்கும் தேவையான தேசிய மற்றும் சர்வதேச ரீதியிலான ஒத்துழைப்பினைப் பெற்றுக் கொள்வதற்கு எனக்கு முடிந்திருந்தது.

மீளாய்வாண்டின் போது 421 அனுமதிப்பத்திரங்களையும், 606 ஏற்றுமதி இறக்குமதி அங்கீகாரங்களையும், கதிர்வீச்சற்ற அறைகளிற்காக 99 அங்கீகாரங்களையும் வழங்குவதற்கு பேரவைக்கு முடிந்திருந்தது. அத்துடன், பால் உணவுகளின் விடுவித்தல்களிற்காக இலங்கை அணுசக்தி சபையின் ஆய்வுகூட பரிசோதனை அறிக்கைகளின் மீது 919 விடுவிப்புச் சான்றிதழ்களையும் பேரவை வழங்கியது. பிரமாணங்களிலுள்ள தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துவதற்காக வசதிகளின் நிலைமையினை மெய்மையாய்வு செய்வதற்கும் அனுமதியற்ற கதிர்வீச்சு மூலங்கள் பயன்படுத்தும் இடங்களை கண்டறிவதற்கும் முன்னறிவுப்புச் செய்யப்பட்ட மற்றும் முன்னறிவிப்புச் செய்யப்படாத களப்பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. மொத்தமாக 164 களப்பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்தக் களப்பரிசோதனைகள் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பினை உள்ளடக்கிய வகையில் நடாத்தப்பட்டன.

விசேட அதிரடிப்படை மற்றும் ஸ்ரீ லங்கா பொலிசுடன் இணைந்து உயர் வீரியம் கொண்ட கதிரியக்க மூலங்களின் (வகை 1 மூலங்கள்) போக்குவரத்தினை பேரவை ஒருங்கிணைத்தது. உயர் வீரியம் கொண்ட வகை 1 கோபல்ட் - 60 கதிர்வீச்சு சிகிச்சையளிப்பு மூலங்கள் பேரவையின் கண்காணிப்பின் கீழ் கொழும்பு துறைமுகத்திலிருந்து பியகம ஏற்றுமதி பதணிடல் வலயத்திலுள்ள இலங்கை கெம்மா நிலையத்திற்கு போக்குவரத்துச் செய்யப்பட்டது.

கதிரியக்க பாதுகாப்பு மற்றும் அணுசக்தி பாதுகாப்பு பற்றிய அறிவை மேம்படுத்துவதற்காக அனுமதிப்பத்திரம் பெற்ற வசதிகளின் கதிர்வீச்சு பணியாளர்களுக்கு பேரவை இந்த ஆண்டில் 02 பயிற்சி வகுப்புகளை நடத்தியது.

"கதிர்வீச்சு மூலங்களின் பாதுகாப்பிற்கான ஒழுங்குமுறை உள்கட்டமைப்பை வலுப்படுத்துதல்" மற்றும் "அணு அல்லது கதிரியக்க அவசரநிலைகளுக்கு பதிலளிப்பதற்கான தேசிய திறன்களை வலுப்படுத்துதல்" என்ற தலைப்பில் சர்வதேச அணுசக்தி முகவர் நிலையத்தின் (IAEA) இரண்டு தொழில்நுட்ப ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டங்களில் பேரவை பங்கேற்கிறது. இரண்டு செயற்திட்ட நடவடிக்கைகள் பேரவையால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ஒரு மென்பொருள் முறைமையின் ஊடாக அனுமதிப்பத்திரங்கள் மற்றும் அங்கீகாரங்களை நிகழ்நிலை (Online) மூலம் வழங்குவதற்கான முறைமை ஒன்றை தாபிப்பதற்கு பேரவை நடவடிக்கை எடுத்துள்ளது. இந்த நிகழ்நிலை முறைமையை அறிமுகப்படுத்துவதன் மூலம் பேரவையின் ஒழுங்குபடுத்தல் முறைமையை வினைத்திறனாகவும் பயனுறுதியாகவும் மேம்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. 2022 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இந்த முறைமையை நடைமுறைப்படுத்த பேரவை எதிர்பார்க்கின்றது.

பாதுகாப்பு அமைச்சு மற்றும் அமெரிக்க எரிசக்தி திணைக்களத்தின் உதவியுடன் பௌதீக பாதுகாப்பு முறைமைகள் நிறுவப்பட்டுள்ள உயர் வீரியம் கொண்ட கதிரியக்க மூலங்களின் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக பேரவை பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்பட்ட குழுவுடன் இணைந்து, பௌதீக பாதுகாப்பு நிறுவப்பட்டுள்ள அனைத்து 14 தளங்களிலும் முழுமையான பாதுகாப்பு பகுப்பாய்வு செய்யப்பட்டு, குறித்த அறிக்கை பாதுகாப்பு அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

கோவிட்-19 சூழ்நிலைக்கு மத்தியிலும் கூட, அயனாக்கல் கதிர்வீச்சைப் பயன்படுத்துகையில் தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பைப் பேணுவதற்காக அரசாங்க மற்றும் தனியார் துறை நிறுவனங்களுக்கு கதிரியக்க பாதுகாப்பு மற்றும் ஒழுங்குபடுத்தல் நடவடிக்கை சேவைகளை பேரவை வழங்கியது.

ஒட்டுமொத்தமாக, 2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அடையப்பட்ட முன்னேற்றங்களின் வாயிலாக, சட்டத்தால் வழங்கப்பட்ட தேவைகள் மற்றும் கட்டளைகளை திருப்திப்படுத்தும் ஒழுங்குமுறை நடவடிக்கைகளை செயல்படுத்துவதற்கு 2021 ஆம் ஆண்டு, மிகவும் வெற்றிகரமான ஆண்டாக அமைந்திருந்தது.

2021 ஆம் ஆண்டுக்கான நடவடிக்கைகளை செயல்படுத்துவதற்கு உதவிய மின்வலு அமைச்சு மற்றும் சூரிய, காற்றாலை மற்றும் நீர் மின்வலு உற்பத்திச் செயற்திட்டங்களுக்கான இராஜாங்க அமைச்சின் பதவியணியினர் மற்றும் பேரவையின் தலைவர் மற்றும் முகாமைத்துவச் சபைக்கும் மேற்படி செயன் முன்னேற்றத்தை அடைந்து கொள்வதற்கு உதவிய எனது ஊழியர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.




எச்.எல். அனில் ரன்ஜித்
பணிப்பாளர் நாயகம்/பிரதான நிறைவேற்று அதிகாரி
இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை

தூரநோக்கு

சாத்தியமான தீங்குவிளைவிக்கும் அயனாக்கல் கதிர்வீச்சிலிருந்து பாதுகாக்கப்பட்டதோர் நாடு

இலட்சியநோக்கு

வினைத்திறனும் பயனுறுதியும் மிக்க ஒழுங்கமைத்தல் ஆளுகையை அமுல்படுத்துவதன் மூலம் சாத்தியமான தீங்குவிளைவிக்கும் அயனாக்கல் கதிர்வீச்சிலிருந்து பொதுமக்கள், நோயாளிகள், கதிர்வீச்சுத் தொழிலாளர்கள், மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல்



அறிமுகம்

எம்மைப் பற்றி

அயனாக்கல் கதிர்வீச்சின் சாத்தியமிக்க பாதகமான தாக்கங்களிருந்து பொதுமக்கள், நோயாளிகள், கதிர்வீச்சு தொழிலாளர்கள் மற்றும் சுற்றாடலை பாதுகாப்பதற்கும் கதிரியக்க மூலங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவதற்கும் தேவையான பிரமாண சட்டக்கோவையினை உருவாக்கி அமுல்படுத்தும் அதிகாரத்துடன் 2015 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்குவரும் வகையில் 2014 இன் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்தி அதிகாரச்சட்டத்தினால் இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை (பேரவை) தாபிக்கப்பட்டது. அதிகாரச்சட்டத்தலுள்ள பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக சகல கதிர்வீச்சு மற்றும் கதிரியக்க பாவனையாளர்களிற்காக அனுமதிப்பத்திரமளித்தல் களப்பரிசோதனை, கதிரியக்க பொருட்களின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதியைக் கட்டுப்படுத்தல், கதிரியக்க கழிவு முகாமைத்துவம், கதிரியக்க பொருட்களின் பௌதீக பாதுகாப்பை உறுதிப்படுத்துதல், அணு அல்லது கதிர்வீச்சு அவசர நிலமைகளை எதிர்கொள்வதற்கான இயலுமை அபிவிருத்தி, சர்வதேச அணுசக்தி முகவராண்மையுடனான (ஐஏஈஏ) பாதுகாப்பு உடன்படிக்கையிலுள்ள இலங்கையின் கடப்பாடுகளை நிறைவேற்றுதல் என்பவற்றிற்காக முறைமையொன்றை தாபித்தல் வேண்டுமெனவும் மேற்படி விடயங்களிற்குத் தேவையான சட்டரீதியானதும் பிரமாண ரீதியானதுமான கட்டமைப்பொன்றை தாபித்தல் வேண்டுமெனவும் இந்த அதிகாரச்சட்டம் பேரவையினை வேண்டுகிறது. அத்துடன் அணுசக்தி பராமரித்தல் மற்றும் பாதுகாப்பு தொடர்பில் இலங்கையினால் கைச்சாத்திடப்பட்டுள்ள உடன்படிக்கைகள் மற்றும் சாசனங்களிற்கான மத்திய நிலையமாகவும் தொழிற்படுதல் வேண்டுமென்ற உத்தியோகபூர்வ கடப்பாடு பேரவைக்கு உள்ளது.

முகாமைத்துவச் சபை

சட்டத்தின் 14(1) ஆம் பிரிவின் கீழ் பேரவைக்கு தலைவரொருவரையும் 05 உறுப்பினர்களையும் நியமிப்பதற்கு அணுசக்தி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன் சுற்றாடல் என்ற விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் ஒரு அங்கத்தவரை நியமிக்கின்றார். பின்வரும் உறுப்பினர்களை பேரவை கொண்டிருக்கும்.

(அ) கதிர்வீச்சியல் மற்றும் தொழில்நுட்பத்துறை அல்லது கதிர்வீச்சு பாதுகாப்பு தொடர்பில் நிபுணத்துவமுடைய மூன்று நபர்கள்

(ஆ) பேரவையின் குறிக்கோள்களுடன் தொடர்புடைய அல்லது சம்பந்தப்பட்ட சட்ட அனுபவமுள்ள நபரொருவர்

(இ) மேலதிகச் செயலாளர் என்ற பதவிக்குக் குறையாத சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவர் அல்லது சுற்றாடல் என்ற விடயத்திற்கு பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சிலிருந்து அந்த அமைச்சரால் நியமிக்கப்பட்ட பனிப்பாளர் ஒருவர்

2021 ஆகஸ்ட் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நியமிக்கப்பட்டிருந்த சபை அங்கத்தவர்கள் வருமாறு.

பெயர்	பதவி	நியமனத் திகதி
கலாநிதி டி.எம்.எஸ்.திசாநாயக்க	தலைவர்	2020-01-29
கலாநிதி லோஹித சமரவிக்ரம	உறுப்பினர்	2020-01-29
திரு. தாரக விக்கிரமதுங்க	உறுப்பினர்	2020-01-29
திரு. சம்பத் சந்திரசேன	உறுப்பினர்	2020-06-20
திரு. எம்.ஜி.டபிள்யூ.டி.பி. திசாநாயக்க	உறுப்பினர்	2020-02-26
திரு. டி.பி. விக்கிரமசிங்ஹ	அவதானிப்பாளர், மின்வலு அமைச்சு	2020-03-02
திரு. கே.ஏ.டி. களுபோகொட	அவதானிப்பாளர், பொதுத் திறைசேரி	2020-06-21

2021 செம்தெம்பர் 01 முதல் 2021 திசெம்பர் 31 வரையிலான காலத்திற்கு நியமிக்கப்பட்ட சபை அங்கத்தவர்கள் கீழே தரப்பட்டுள்ளன.

பெயர்	பதவி	நியமனத் திகதி
திரு. சிட்னி கஜநாயக்க	தலைவர்	2021-09-01
கலாநிதி லோஹித சமரவிக்ரம	உறுப்பினர்	2020-01-29
திரு. சன்ஜெய் சேனாநாயக்க	உறுப்பினர்	2021-09-01
திரு. எம்.ஜி.டபிள்யூ.டி.பி. திசாநாயக்க	உறுப்பினர்	2020-02-26
திரு. டி.பி. விக்கிரமசிங்ஹ	அவதானிப்பாளர், மின்வலு அமைச்சு	2020-03-02
திரு. கே.ஏ.டி. களுபோகொட	அவதானிப்பாளர், பொதுத் திறைசேரி	2020-06-21

2021 ஆம் ஆண்டில், கொவிட் நோய்த்தொற்று காரணமாக அவ்வப்போது ஏறத்தாழ மூன்று மாதங்களிற்கு நாடு மூடப்பட்டிருந்த போதிலும், 10 பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. இயக்கச் செயற்பாடுகள், பதவியணியினர் விடயங்கள், நிதி மற்றும் நிர்வாகம் போன்ற முக்கிய விடயங்கள் கொள்கைத் தீர்மானங்களிற்காக சபைக்கு பிரேரணைகள் முன்வைக்கப்பட்டன. அத்துடன் பேரவையின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றங்களை சபை மீளாய்வு செய்தது.

பேரவையின் சிரேஷ்ட முகாமைத்துவக் குழு

பெயர்	பதவி	கல்வித் தகைமை
திரு. எச்.எல். அனில் ரன்ஜித்	பணிப்பாளர் நாயகம்	பி.எஸ்சி (இரண்டாம் வகுப்பு கீழ் பிரிவு) அணு அறிவியலில் எம்.எஸ்சி
திரு. ரீ.எச்.எஸ். சாந்த	பணிப்பாளர் (அதிகாரமளித்தல்)	பி.எஸ்சி (இரண்டாம் வகுப்பு மேல் பிரிவு) அணு அறிவியலில் எம்.எஸ்சி
திரு. கபில தி சில்வா	பணிப்பாளர் (களப்பரிசோதனை)	பி.எஸ்சி (சிறப்பு) இரசாயனவியல் அணு அறிவியலில் எம்.எஸ்சி கதிர்வீச்சு பாதுகாப்பில் முதுகலை டிப்ளமோ (மலேசியா)
திரு. கே.என்.ஆர். பர்ணாந்து	பிரதிப் பணிப்பாளர்	பி.எஸ்சி (இரண்டாம் வகுப்பு மேல் பிரிவு) அணு அறிவியலில் எம்.எஸ்சி கதிர்வீச்சு பாதுகாப்பில் முதுகலை டிப்ளமோ (மலேசியா)
திரு. கே.பி.ஐ.கே. கடதுன்ன	பிரதிப் பணிப்பாளர்	பி.எஸ்சி (இரண்டாம் வகுப்பு கீழ் பிரிவு) அணு அறிவியலில் எம்.எஸ்சி கதிர்வீச்சு பாதுகாப்பில் முதுகலை டிப்ளமோ (மலேசியா)
திரு. எஸ்.எஸ். கொலம்பகே	பிரதிப் பணிப்பாளர்	பி.எஸ்சி – (சிறப்பு) பௌதிகவியல் - (இரண்டாம் வகுப்பு கீழ் பிரிவு) அணு அறிவியலில் எம்.எஸ்சி கதிர்வீச்சு பாதுகாப்பில் முதுகலை டிப்ளமோ (மலேசியா)
செல்வி. சீ.எஸ். ஹேரத்	பிரதிப் பணிப்பாளர்	பி.எஸ்சி – (சிறப்பு) பௌதீகவியல் -(முதலாம் வகுப்பு) எம்.எஸ்சி. பௌதீகவியல் (ஐக்கிய அமெரிக்கா)
திருமதி. பி.டீ.என். மதுஷா குமாரி	கணக்காளர்	நிதி முகாமைத்துவத்தில் பி.எஸ்சி. விசேட பட்டம்
திரு. டபிள்யூ.ஏ.கே. லக்ஷ்மன்	உள்ளக கணக்காய்வாளர்	க.பொ.த. (உ/த) பரீட்சை

நிறைவேற்றுப் பொழிப்பு

அணுசக்தி சட்டத்தின் கீழ் சபை தொடங்கப்பட்டதிலிருந்து 2021 ஆம் ஆண்டு அதற்கு ஏழாவது ஆண்டாகும். பேரவையானது தற்போது சூரிய சக்தி, காற்றாலை, நீர் மின்வலு உற்பத்தி செயற்திட்டங்கள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் கீழ் செயல்படுகிறது.

ஒழுங்குபடுத்தல் கட்டுப்பாட்டு முறைமை ஒன்றை தாபித்து பராமரிப்பதன் மூலம் அயனியாக்கும் கதிர்வீச்சின் சாத்தியமான தீங்கு விளைவிக்கும் விளைவுகளிலிருந்து பொதுமக்கள், நோயாளிகள், கதிர்வீச்சு தொழிலாளர்கள் மற்றும் சுற்றுச்சூழலின் பாதுகாப்பிற்கான பொறுப்பை உறுதி செய்வதற்கான ஆணையை இந்த சட்டம் பேரவைக்கு வழங்கியுள்ளது. மேலும், கதிர்வீச்சு மூலங்களின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பை உறுதி செய்வதற்கான பொறுப்பும் நீடிக்கப்பட்டுள்ளது. மூலங்களின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்புக்கான நியமங்களை உருவாக்கும் பொறுப்பும் பேரவைக்கு உள்ளது.

சட்டத்தின் நோக்கங்களை அடைவதற்காக, அயனியாக்கும் கதிர்வீச்சு மற்றும் கதிரியக்க கருவிகளைப் பயன்படுத்துபவர்களுக்கு உரிமம் வழங்குதல், கதிரியக்க வசதிகளை களப்பரிசேதனைக்கு உட்படுத்துதல், கதிர்வீச்சு மூலங்களின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாடு, மூலப் பதிவேட்டைப் பராமரித்தல், கதிரியக்கக் கழிவுப் பாதுகாப்புத் திட்டம், ஒப்புதல்கள், கதிரியக்கப் பொருட்களின் பாதுகாப்பான போக்குவரத்து, பாதுகாப்புகள் மற்றும் அமுலாக்கல் முறைமைகளை செயல்படுத்துதல் ஆகியவற்றை பேரவை மேற்கொள்கின்றது.

2021 ஆம் ஆண்டில், பேரவையானது அணு அல்லது கதிரியக்க அவசரகால முகாமைத்துவ திட்டத்திற்கான ஒப்புதல்களை சம்பந்தப்பட்ட தரப்பினரிடமிருந்து பெற்றுக் கொள்ளல் மற்றும் அயனியாக்கும் கதிர்வீச்சு பாதுகாப்பு மற்றும் கதிரியக்க மூலங்களின் பாதுகாப்பு குறித்த பாதுகாப்பு விதிமுறைகளை பூரணப்படுத்துதல் என்பவற்றிற்கு முக்கியத்துவம் அளித்து செயற்பட்டிருந்தது. இலங்கையில் அணுசக்தி அல்லது கதிரியக்க அவசரநிலைகளுக்கு பதிலளிப்பதற்கான உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்குத் தேவையான ஐஏஈஏ இன் உதவியைப் பெறுவதற்காக ஐஏஈஏ இற்கு தொழில்நுட்ப ஒத்துழைப்பு திட்டத்தை சமர்ப்பிப்பதற்கும் பேரவை அதிக முக்கியத்துவம் கொடுத்தது.

மூலங்களின் உரிமத்திற்குத் தேவையான ஒழுங்குபடுத்தல் உட்கட்டமைப்பை வலுப்படுத்துவதற்காக, பேரவை பின்வரும் ஒழுங்குபடுத்தல் ஆவணங்களைத் தயாரித்தது.

- அயனியாக்கும் கதிர்வீச்சு பாதுகாப்பு மற்றும் மூலங்களின் பாதுகாப்பு விதிமுறைகள்
- கதிர்வீச்சு தொழிலாளர்களின் தகுதிக்கான அளவுகோல்களின் விதிகள்
- உற்பத்தி, பயன்பாடு மற்றும் களஞ்சியப்படுத்தலின் போது கதிரியக்க மூலங்களின் பாதுகாப்பிற்கான விதிமுறைகள்

ஐஏஈஏ பாதுகாப்பு மதிப்பீட்டு சேவை (ORPAS) அறிக்கையின் பரிந்துரைகள மற்றும் ஐஏஈஏ கதிர்வீச்சு பாதுகாப்பு தகவல் முகாமைத்துவ முறைமை (RASIMS) இன் தேவைப்பாடுகளை ஐஏஈஏ தொழில்சார் கதிர்வீச்சு திரவ கதிரியக்க கழிவு வெளியேற்ற அளவுகளுடன் ஒருங்கிணைப்பதற்காக, அயனியாக்கும் கதிர்வீச்சு பாதுகாப்பு மற்றும் மூலங்களின் பாதுகாப்பிற்கான விதிமுறைகளின் இறுதி பதிப்பு பேரவையின் சிரேஷ்ட ஒழுங்குபடுத்தல் ஊழியர்களால் மேலும் மீளாய்வு செய்யப்பட்டதுடன் மீளாய்வுக்கு உட்படுத்திய விதிமுறைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

கதிரியக்க ஊழியர்களின் தகுதிக்கான விதிமுறைகள் குறித்த விதிமுறைகளுக்கு வாரியத்தின் ஒப்புதல் பெறப்பட்டு, அவர்களின் கருத்துகள் மற்றும் மதிப்பாய்வுக்காக அமைச்சகம் மூலம் சட்ட வரைவுத் துறைக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதே நேரத்தில், சுகாதார அமைச்சகம் மற்றும் மருத்துவ இயற்பியலாளர்கள் மற்றும் கதிரியக்க தொழில்நுட்ப வல்லுநர்களின் சங்கங்களுடனான கலந்துரையாடலின் படி வரைவு விதிகளில் சில திருத்தங்களைச் செய்ய கவுன்சில் முடிவு செய்தது. தற்போது வரைவு விதி, மேற்கண்ட தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் திருத்தம் செய்ய பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

கதிரியக்க மூலங்களின் உற்பத்தி, பயன்பாடு மற்றும் ஸ்டோராக்வேயாக்களின் பாதுகாப்பிற்கான விதிமுறைகள் பூர்த்தி செய்யப்பட்டு, சட்ட வரைவாளர் திணைக்களத்தின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டது. சட்ட வரைவாளர் திணைக்களத்தின் இணக்கம் பெறப்பட்டு ஒழுங்குமுறைகள்

சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டன. மூன்று மொழிகளிலும் உள்ள விதிமுறைகள் வர்த்தமானியில் வெளியிடுவதற்காக அமைச்சகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

கதிரியக்க ஊழியர்களின் தகுதிக்கான விதிமுறைகளுக்கு பணிப்பாளர் சபையின் ஒப்புதல் பெறப்பட்டு, குறித்த விதிமுறைகள் தொடர்பில் அபிப்பிராயம் மற்றும் மீளாய்வுக்காக அமைச்சின் ஊடாக அவை சட்ட வரைவுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. அதேவேளை, சுகாதார அமைச்சு, மருத்துவ இயற்பியலாளர்கள் மற்றும் கதிரியக்க தொழில்நுட்ப வல்லுநர்களின் சங்கங்களுடனான கலந்துரையாடலின் படி வரைவு விதிகளில் சில திருத்தங்களைச் செய்வதற்கு பேரவை முடிவு செய்தது. தற்போது வரைவு விதிகளை, மேற்கண்ட தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் திருத்தம் செய்வதற்காக பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

கதிரியக்க மூலங்களின் உற்பத்தி, பயன்பாடு மற்றும் களஞ்சியப்படுத்தலின் போதான பாதுகாப்பிற்கான ஒழுங்குமுறைகள் பூர்த்தி செய்யப்பட்டு சட்ட வரைவாளர் திணைக்களத்தின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டது. சட்ட வரைவாளர் திணைக்களத்தின் இணக்கம் பெறப்பட்டு ஒழுங்குமுறைகள் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டன. மூன்று மொழிகளிலும் தயாரிக்கப்பட்டுள்ள விதிமுறைகளை வர்த்தமானியில் வெளியிடுவதற்காக அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

தேசிய அணு அல்லது கதிரியக்க அவசரநிலை முகாமைத்துவத் திட்டம் 2021 பெப்ரவரி 24 அன்று அனர்த்த முகாமைத்துவ மன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டதுடன் பேரவை அதன் தேசிய அணு அல்லது கதிரியக்க அவசரநிலை முகாமைத்துவத் திட்டத்தின் தேவைப்பாடுகளை செயல்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளது.

2021 யூலை 01 முதல் அமுலுக்கு வரும் வகையில் பேரவைக்கு 03 விஞ்ஞான உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டதுடன் ஆட்சேர்ப்பு கட்டுப்பாடுகள் காரணமாக ஏனைய வெற்றிடங்களிற்கு ஆட்சேர்ப்பு செய்ய முடியவில்லை. 2021 மார்ச் 01 முதல் அமுலுக்கு வரும் வகையில் 01 பிரதிப் பணிப்பாளர், பணிப்பாளர் (களப்பரிசோதனை) பதவிக்கு பதிவி உயர்த்தப்பட்டதுடன் 2021 ஏப்ரல் 02 முதல் அமுலுக்கு வரும் வகையில் 01 சிரேஷ்ட விஞ்ஞான உத்தியோகத்தர் பிரதிப் பணிப்பாளர் (அங்கீகாரம்: கைத்தொழில் பயன்பாடுகள் மற்றும் இறக்குமதி/ஏற்றுமதி) பதவிக்கு பதவி உயர்த்தப்பட்டார்.

கொவிட் 19 சூழ்நிலை காணப்பட்ட போதிலும், கதிரியக்க மூலங்கள் மற்றும் கதிரியக்க ஐசோடோப்புகளைப் பயன்படுத்தும் இடங்களில் ஒழுங்குபடுத்தல் களப் பரிசோதனைகளை மேற்கொள்வதன் மூலம் பாதுகாப்பு நெறிமுறைகளை அடைவதற்காக அரசாங்க மற்றும் தனியார் துறை நிறுவனங்களுக்கு பல கதிர்வீச்சு பாதுகாப்பு மற்றும் ஒழுங்குபடுத்தல் நடவடிக்கை சேவைகளை பேரவை வழங்கியது. ரேடியோஐசோடோப்புகள் அல்லது கதிர்வீச்சு கருவிகளை (மருத்துவ எக்ஸ்-கதிர்கள் உட்பட) வைத்திருப்பதற்கும் பயன்படுத்துவதற்கும் உரிமம் கோரி விண்ணப்பித்த அனைத்து நிறுவனங்களுக்கும் சட்டம் மற்றும் விதிமுறைகளின் தேவைகளுக்கு இணங்குவதற்கான சரியான மதிப்பீட்டிற்குப் பின்னர் உரிமம் வழங்கப்பட்டது.

கதிரியக்கப் பொருட்களின் இறக்குமதி/ஏற்றுமதிக்கான அங்கீகாரங்கள் மீளாய்வாண்டிலும் மேற்கொள்ளப்பட்டதுடன் பேரவையின் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கான பரிந்துரைகளுடன் கதிர்வீச்சு அறைத் திட்டங்களுக்கு ஒப்புதல்கள் வழங்கப்பட்டன.

கொவிட் - 19 சூழ்நிலையின் கீழ், அவசர விடயங்களின் நிமித்தம் இறக்குமதி/ஏற்றுமதி மற்றும் கட்டிடத் திட்டங்களுக்காக நிகழ்நிலை (ஆன்லைன்) மூலம் அனுமதி வழங்கப்பட்டது.

மென்பொருளைப் பயன்படுத்தி உரிமம் மற்றும் தொடர்புடைய ஒப்புதல்களை வழங்குவதற்கான ஆன்லைன் உரிமம் மற்றும் ஒப்புதல் வழங்குதல் முறையை நிறுவதற்கு பேரவை நடவடிக்கை எடுத்துள்ளது. இந்த நிகழ்நிலை முறைமையை அறிமுகப்படுத்துவதன் மூலம் பேரவையின் ஒழுங்குபடுத்தல் முறைமையை வினைத்திறனாகவும் பயனுறுதியாகவும் மேம்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்காக அரசாங் போட்டி கூறுவிலை கோரல் கொள்வனவு வழிகாட்டல்களைப் பின்பற்றி ஒரு ஒப்பந்தகாரர் தெரிவுசெய்யப்படார். 2022 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இந்த முறைமையை நடைமுறைப்படுத்த பேரவை எதிர்பார்க்கின்றது.

பேரவையிலும் நாட்டிற்குள்ளும் போதிய எண்ணிக்கையில் பயிற்சி பெற்ற தொழில்நுட்ப வல்லுநர்கள் இல்லாததால், சர்வதேச தரத்திற்கு ஏற்ப ஒழுங்குபடுத்தல் கட்டமைப்பை நிறுவுவதற்கு தேவையான தொழில்நுட்ப ஆவணங்களை தயாரிப்பது பேரவைக்கு பெரும் சவாலாக இருந்தது.

போதுமான எண்ணிக்கையிலான விஞ்ஞான உத்தியோகத்தர்கள் இல்லாமையால், திட்டமிட்ட செயல்பாடுகளை சரியான நேரத்தில் நிறைவேற்றுவதற்கும், கோரப்பட்ட சில களப் பரிசோதனைகளில் நியாயமான காலத்திற்குள் கலந்துகொள்வதற்கும் சவாலாக இருந்தது.

எவ்வாறாயினும், சபையின் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதில் ஊழியர்களின் அர்ப்பணிப்பு மற்றும் அசைக்க முடியாத ஆதரவின் காரணமாக மேற்கூறிய தடைகளுக்கு மத்தியிலும் பேரவையின் ஒழுங்குபடுத்தல் மற்றும் நிர்வாகப் பணிகளை சர்வதேச தரத்திற்கு ஏற்றவாறு மேம்படுத்துவதற்கு பேரவை தனது அதிகபட்ச முயற்சியை எடுத்துள்ளது.

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு மீளாய்வு – 2021

பேரவையின் 2021 ஆம் அண்டிற்கான கணக்காய்வு மற்றம் முகாமைத்துவக் குழுவானது நிதி அமைச்சின் அரசாங்க முயற்சிகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட நல்லாளுகைக்கான வழிகாட்டல்களின் பிரகாரம் கட்டமைக்கப்பட்டு, பின்வரும் உறுப்பினர்களை உள்ளடக்கியிருந்ததுடன் ஆண்டின் போது மூன்று (03) கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

திரு. கே.ஏ.டீ. களுபோகொட (திறைசேரிப் பிரதிநிதி)	2020.07.07 முதல் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் தலைவர்
கலாநிதி லோஹித சமரவிக்ரம, (சபை உறுப்பினர்)	கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் உறுப்பினர்
திரு. தாரக விக்ரமதுங்க (சபை உறுப்பினர்)	கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் உறுப்பினர்
திருமதி பீ.ஏ.டீ.ஏ. அபயவர்தன	குழுவின் அவதானிப்பாளர், பிரதான உள்ளகக் கணக்காய்வாளர், மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சு
திரு. எம்.டபிள்யூ. குணவர்தன	2021.03.01 முதல் குழுவின் அவதானிப்பாளர், தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் கணக்காய்வு அத்தியட்சகர்
திரு. ஆர். கருணாரத்ன	2021.02.26 வரை குழுவின் அவதானிப்பாளர், தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் கணக்காய்வு அத்தியட்சகர்
செல்வி. என்.பி.என். கருணாரத்ன	சபை செயலாளர் மற்றும் 2020.07.07 முதல் பீஈடீ/55 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் செயலாளராக செயற்படுகின்றார்.
திரு. டபிள்யூ.ஏ.கே. லக்ஸ்மன்	உள்ளகக் கணக்காய்வாளர், (கணக்காய்வு மற்றும் முகாமைத்துக் குழுவினை கூட்டுபவர்)

குழுவின் குறிக்கோள்கள்

அரசாங்க முயற்சிகள் திணைக்களத்தின் நல்லாளுகைக்கான வழிகாட்டல்களில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பின்வரும் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக கணக்காய்வுக் குழுவானது முடியுமானளவு முயற்சியினை மேற்கொண்டிருந்தது.

- உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் நோக்கெல்லையை நிர்ணயித்தல் மற்றும் வருடாந்த கணக்காய்வுத் திட்டத்தினை மீளாய்வு செய்தல்
- தேவையான நடவடிக்கைகளிற்கான பரிந்துரைகளுடன் தனது அவதானிப்புக்களை சபைக்குச் சமர்ப்பித்து ஒப்படைக்கப்பட்ட பொறுப்புக்களை நிர்வகிப்பதற்கு பணிப்பாளர் சபைக்கு உதவுதல்.
- குழுவின் பரிந்துரைகள் மீதான பின்தொடர் நடவடிக்கைகளை கண்காணித்தல்
- உள்ளகக/வெளிவாரி கணக்காய்வு அறிக்கைகளை மீளாய்வு செய்து பொருத்தமான நடவடிக்கைக்காக முகாமைத்துவத்திற்கு பரிந்துரைகளை மேற்கொள்தல்.
- நியதிச்சட்ட தேவைப்பாடுகளுடன் பேரவை இணங்கியொழுகுவதனையும் பிரமாணத் தேவைப்பாடுகளிற்கு அமைவாக செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதனையும் உறுதி செய்தல்.
- பேரவையின் அனைத்துத் தொழிற்பாடுகளிற்குமான உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறைகளை மீளாய்வு செய்து அவ்வறான நடைமுறைகளின் சீரான செயற்பாட்டினை உறுதி செய்தல்.
- கிரய பயனுறுதிக்காகவும் சிக்கனமற்ற செலவினங்களை குறைப்பதற்காகவும் பாதீட்டு அறிக்கைகள் உள்ளடங்கலான காலாண்டு செயலாற்றல்களை மீளாய்வு செய்தல்.
- பாராளுமன்ற பொது முயற்சிகள் குழுவின் (COPE) பரிந்துரைகள் அமுல்படுத்தப்படுவதனை மீளாய்வு செய்தல்.

2021 ஆம் ஆண்டில் கணக்காய்வு குழுவின் செயற்பாடுகள்

- 2022 ஆம் ஆண்டிற்கான வரைபு வருடாந்த உள்ளகக் கணக்காய்வுத் திட்டங்கள் மீளாய்வுக்குட்படுத்தப்பட்டு திருத்தங்களுடன் இறுதிக் கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டது.
- உள்ளக மற்றும் அரசாங்க கணக்காய்வு அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு முன்னைய குழுக் கூட்டங்களில் வழங்கப்பட்ட பரிந்துரைகளின் அமுலாக்கலை மீளாய்வுசெய்து முன்னேற்றுவதற்கு தேவையாகக் காணப்பட்ட மேலதிக பரிந்துரைகள் வழங்கப்பட்டன.
- பூச்சியப் பெறுமதியுடைய அலுவலக மற்றும் விஞ்ஞான உபகரணங்களை மீளவிலைமதித்தல் மீதான அறிக்கையிலுள்ள பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கு சிபார்சு செய்யப்பட்டமை.
- 2021 ஆம் ஆண்டிற்காக உள்ளகக் கணக்காய்வாளரால் சமர்ப்பிக்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளை கணக்காய்வுக் குழு கலந்துரையாடியதுடன் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பில் முகாமைத்துவம் எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து வினவப்பட்டது. அத்துடன் கீழே பட்டியலிடப்பட்டுள்ள நடவடிக்கைகளை பரிந்துரைத்திருந்தது.

  - கணக்காய்வு உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட இணக்கமின்மைக்கான திருத்தங்களை செய்வதற்கு கதிர்வீச்சு உரிமம் வைத்திருப்பவர்களுக்கு அதனைத் தெரிவிப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுப்பதற்காக ஆலோசனை வழங்குதல்.

  - 2020 இற்கான இறுதிக் கணக்குகளை பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பிக்கும் முன்னர் அவற்றை மீளாய்வு செய்து அவதானிப்புகள் வழங்கப்பட்டன.

  - முன்னைய சந்தர்ப்பங்களில் வைப்புச் செய்தவர்களை அடையாளம் காண்பதில் சிரமங்கள் காணப்பட்டமையால், கணக்குப் பிரிவின் ஊழியர்களுடன் இணைந்து மட்டுமே பேரவையின் கணக்கில் பணத்தை வைப்புச் செய்யும்படி பணத்தை வைப்புச் செய்பவர்களை அறிவுறுத்துமாறு ஊழியர்களுக்குத் தெரிவிக்க பரிந்துரைக்கப்பட்டது. கணக்கில் உள்ள கொடுக்கல் வாங்கல்களை அறிந்து கொள்ள மட்டுமே ஆன்லைன் வங்கி வசதியை ஏற்படுத்தவும் குழு பரிந்துரைத்தது.

- கதிரியக்க இயந்திரங்களை அடையாளம் காண்பதற்காக தொடர் இலக்கங்களை வழங்குவதற்கான வழிமுறையை உருவாக்குதல் மற்றும் அதைச் செயல்படுத்த குழுவின் ஒப்புதலைப் பரிந்துரைத்தல்.

- 2020 ஆண்டின் அறிக்கையை உடனடியாக தயாரிக்க ஆலோசனை வழங்குதல்.

- களஞ்சியப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக நிர்வாக அதிகாரியின் மேற்பார்வையின் கீழ் முகாமைத்துவ உதவியாளருக்கு பயிற்சிகள் பரிந்துரைக்கப்பட்டு களஞ்சியத்திற்கு அவற்றை ஒப்படைக்க அறிவுறுத்தப்பட்டது.

- 2020 ஆம் ஆண்டில் அப்புறப்படுத்தப்பட வேண்டிய பொருட்கள் மீதான குழுவின் பரிந்துரைகள் வழங்கப்பட்டு நிதிப்பிரமாணம் மற்றும் சுற்றறிக்கைகளின்படி அவற்றை அகற்றுதல்.
- ஊழியர்களுக்கு வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு பயிற்சி அளிக்கப்படும்போது விஞ்ஞான மற்றும் நிர்வாகப் பிரிவுகளில் புதிய அதிகாரிகளுக்கு முன்னுரிமை அளித்தல்.

- 2021 ஆம் ஆண்டிற்கான மெய்மையாய்வுச் சபை ஆவணங்களைச் சரிபார்த்து ஆலோசனை வழங்குதல்.

- எக்ஸ்ரே இயந்திரங்கள் போன்றவற்றுக்காக புதிய அமைச்சின் பெயருடன் உயர்தர உரிமம் வழங்க பரிந்துரைத்தல்.

- 30/2016 சுற்றறிக்கையின்படி வாகனங்களின் எரிபொருள் சமப்படுத்தலுக்கான முறையைப் பிரயோகித்தல் மற்றும் வாகன ஓட்டப் பதிவேடுகளை சரிபார்த்து ஆவணங்களை நாளதுவரைப்படுத்துதல்.

- பணம் செலுத்துவதற்கான அலகுகளின் விவரங்களுடன் தண்ணீர் மற்றும் மின்சார கட்டணங்களுக்கான பட்டியல்களை பெறுவதற்கு பரிந்துரைத்தல்.

- பேரவையின் பதவியணி தேவைகளுக்கான புதிய முன்மொழிவை மீளாய்வு செய்து பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பிக்க பரிந்துரைத்தல்.

- தேர்தல் திணைக்களத்திடமிருந்து பெறப்படாத தேர்தல் செலவினங்களை விரைவாக மீளப்பெறுவதற்கு ஆலோசனை வழங்குதல்.

- அனைத்து குழு உறுப்பினர்களும் கையொப்பமிடுவதற்கு வசதியாக தொடர்புடைய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு ஆவணங்களை புதுப்பிப்பதற்கான ஆலோசனை வழங்குதல்.

- உறுதிச்சீட்டுக்கள் மற்றும் பற்றுச்சீட்டுக்களில் தொடர்புடைய பேரேட்டு இலக்கத்தை குறிப்பிடுவதற்கு ஆலோசனை வழங்குதல்

- வாகன பராமரிப்பு செலவுகள் பதிவேட்டை புதுப்பிக்க ஆலோசனை வழங்குதல்.

- அவசியமான மதிப்பீட்டுக் குழுவின் வெற்றிடமான இடங்களிற்கு உறுப்பினர்களை நியமனம் செய்ய ஆலோசனை வழங்குதல்.

- கழிவுப் பொருட்களுக்கான பதிவேட்டை நாளதுவரையாக பராமரிக்கவும், உதிரி பாகங்களை மாற்றிய பின், அகற்றிய பொருட்களை களஞ்சியத்திற்கு ஒப்படைக்கவும் ஆலோசனை வழங்குதல்.

- தினசரி அடிப்படையில் புதுப்பித்த விலைப்பட்டியல் பதிவேட்டை பேணுவதற்கு ஆலோசனை வழங்குதல்.

- இலக்கம் 01/2020 சுற்றறிக்கையின்படி பின்வரும் தகவல்களை வருடாந்த அறிக்கையில் குறிப்பிடுவதற்கான ஆலோசனை வழங்குதல்.

- நிலைபேறான அபிவிருத்தி நடவடிக்கைகளை செயல்படுத்துதல்
- மனித வள அபிவிருத்தி நடவடிக்கைகள்
- 01/2020 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கையின்படி தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல்

- அங்கீகரிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பத்துடன் தினசரி உரிமப் பதிவேட்டை பராமரிக்க அறிவுரை வழங்குதல்.

- 2021 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தை உருவாக்கும் போது கடந்த ஆண்டின் செயல் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல்.

- உரிமங்களின் நிபந்தனைகளுடன் இணங்கப்பட்டுள்ளதா என்பதைக் கண்டறிந்து, நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாத நிறுவனங்களின் மீது நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்பாடுகளை செய்தல்.

இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்துதல் பேரவையினைத் தாபித்தல்

அமைச்சரினால் 2015 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலுக்கமைய பேரவை தொழிற்பட்டு வருகின்றது.

பேரவையின் அமைவிடம்

பேரவை அதனது செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக கண்டி வீதி, புலுகஹ சந்தி, களனிய இல் அமைந்துள்ள வெடிப்புறாத பரிசோதனைக்கான தேசிய நிலையக் (என்சீஎன்டீரீ) கட்டிடத்தினை (மூன்றாம் மாடியிலுள்ள ஏறத்தாழ 6500 சதுர அடிகள் விஸ்தீரணமுடைய நிலப்பரப்பு) வாடகைக்குப் பெற்றுக்கொண்டது.

வளங்கள்

2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பேரவையில் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட 20 விஞ்ஞான உத்தியோகத்தர்களும் 19 நிர்வாகப் பதவியணியினரும் காணப்பட்டனர். அதிகாரச்சட்டத்தினால் பேரவைக்கு வழங்கப்பட்டுள்ள கடமைப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பேரவைக்கான இடப்பரப்பு, விஞ்ஞான மற்றும் நிர்வாக உத்தியோகத்தர்கள் போதுமானதாக இல்லாதிருந்த போதிலும், பேரவையின் தொழிற்பாடுகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு போதியளவு அலுவலக உபகரணங்களை பேரவை கொண்டுள்ளது.

இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையின் செயற்பாடுகள்

சட்டங்கள் மற்றும் பிரமாணங்கள்

அவசியமான சட்டரீதியான அதிகாரங்களை பேரவைக்குப் பெற்றுக்கொள்வதற்காக பல்வேறு பிரமாணங்கள், விதிகள் மற்றும் கட்டளைகளை வரைந்து சேர்த்துக்கொள்ளல் அதிகாரச்சட்டத்தினை அமுல்படுத்தவதற்கான தேவையாக உள்ளது. 2021 ஆம் ஆண்டில் சட்டங்கள் மற்றும் பிரமாணங்கள் தொடர்பில் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

அயனாக்கல் கதிர்வீச்சு பாதுகாப்பு மற்றும் மூலங்களை பராமரித்தல் பிரமாணங்கள்

பணிப்பாளர் நாயகத்தால் தயாரிக்கப்பட்ட அயனாக்கல் கதிர்வீச்சு பாதுகாப்பு மற்றும் மூலங்களின் பராமரிப்பு குறித்த வரைவு பிரமாணங்கள் சர்வதேச அணுசக்தி முகவர் நிலையத்தின் நிபுணர் ஒருவரால் (திரு. மம்து யாசீன் ஒஸ்மான், பணிப்பாளர், திட்டமிடல், கொள்கை மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புச் சேயலகம், சுடான் அனுவியல் மற்றும் கதிரியக்க ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை) மீளாய்வு செய்யப்பட்டதுடன் பேரவையின் சிரேஷ்ட ஒழுங்குபடுத்துனர்கள் வரைவு பிரமாணங்களில் மேலும் மேம்படுத்தப்பட வேண்டிய பகுதிகள் மற்றும் கதிர்வீச்சு பாதுகாப்பு குறித்த IAEA வெளியீடுகளுடன் இணக்கத்தன்மையைக் காண்பதற்கு நடவடிக்கைகளை எடுத்தனர்.

பிரமாணங்களில் உள்ளடக்குவதற்காக சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் பகுதிகளை வரைவுப் பிரமாணங்கள் கொண்டிருந்தன.

- கதிரியக்கப் பொருள் அல்லது கதிரியக்க மூலங்களை ஏற்றுமதி செய்தல், இறக்குமதி செய்தல், மறுஏற்றுமதி செய்தல், களஞ்சியப்படுத்தல், சுரங்கமறுத்தல், செயலாக்கம், வடிவமைத்தல், உற்பத்தி செய்தல், கட்டுமானம், இணைத்தல், கையகப்படுத்துதல், விநியோகம் செய்தல், விற்பனை செய்தல், குத்தகைக்கு விடுதல், பணியமர்த்துதல், பெறுதல், களப்படுத்துதல், வைத்திருத்தல், முடிவுறுத்துதல், வைத்திருத்தல், அகற்றுதல், பிரித்தல், பயன்படுத்துதல் அல்லது அகற்றுதல் மற்றும் கதிர்வீச்சு நீக்கும் கருவிகளை வடிவமைத்தல், உற்பத்தி செய்தல், விற்பனை செய்தல். வைத்திருத்தல், பயன்படுத்துதல், ஏற்றுமதி செய்தல் அல்லது இறக்குமதி செய்தல் மீதான பிரமாணம்.
- கதிர்வீச்சு நிறுவல்களை நீக்குதல்;
- அயனாக்கல் கதிர்வீச்சின் தொழில்சார் வெளியீடுகள் உள்ளிட்ட அயனாக்கல் கதிர்வீச்சின் தீங்கு விளைவிக்கும் தாக்கங்களிலிருந்து கதிர்வீச்சு பணியாளர்களை பாதுகாத்தல்;
- அயனாக்கல் கதிர்வீச்சின் தீங்கு விளைவிக்கும் பாதிப்புகளிலிருந்து பொதுமக்கள் மற்றும் சுற்றுச்சூழலை பாதுகாத்தல்;
- நோயாளிகளின் பாதுகாப்பு உள்ளிட்ட அயனாக்கல் கதிர்வீச்சுடன் சம்பந்தப்பட்ட மருத்துவ நடைமுறைகளின் பிரமாணங்கள்.
- சுற்றுச்சூழலில் கழிவுகளை வெளியிடுதல் உள்ளிட்ட கதிரியக்க கழிவு முகாமைத்துவ கட்டுப்பாடு, மற்றும் பொது சுகாதாரம் மற்றும் பாதுகாப்பை பாதிக்கக்கூடிய எந்தவொரு நடைமுறையையும் உள்ளடக்கிய பிரமாணம்.

IAEA இன் கதிர்வீச்சு பாதுகாப்பு தகவல் முகாமைத்துவ முறைமையின் (RASIMS) கழிவு அகற்றல் வரம்புகள் மற்றும் தேவைப்பாடுகளுடனும் IAEA இன் தொழில்சார் கதிர்வீச்சு பாதுகாப்பு மதிப்பீட்டு சேவையின் (ORPAS) பரிந்துரைகளுடனும் கூட்டிணைப்பதற்காக அயனாக்கல் கதிர்வீச்சுக்கான பாதுகாப்பு பிரமாணங்களின் இறுதிப் பதிப்பு தயாரிக்கப்பட்டு வருகின்றது. இந்த வரைவு பிரமாணத்தை 2022 மே இல் பூரணப்படுத்த எதிர்பார்ப்பதுடன் 2022 யூன் மாதத்தில் பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பித்து, சட்ட வரைவுத் திணைக்களத்தின் ஒப்புதலுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டு அதற்கான ஒப்புதலைப் பெற எதிர்பார்க்கப்படுகிறது. அதன்பிறகு, பிரமாணங்களின் இறுதிப் பதிப்பு அமைச்சரவையின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படும்.

கதிரியக்க மூலங்களின் பாதுகாப்பு பிரமாணங்கள்

அனுமதிக்கப்படாத செயல்பாட்டிற்கு பயன்படுத்தப்படாமல் இருப்பதற்காக கதிரியக்க மூலங்களுக்கான பாதுகாப்பை வழங்குவது மிகவும் முக்கியமானதாகும். பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு மூலங்களை பயன்படுத்துதல், மனிதர்களுக்கும் சுற்றுச்சூழலுக்கும் கேடு விளைவிக்கின்ற அனுமதியளிக்கப்படாத செயற்பாடுகளிற்கு பயன்படுத்துதல் என்பன இதில் அடங்கும். எனவே, கதிரியக்க மூலங்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான பிரமாணங்களை பிரகடனப்படுத்தி அவற்றை செயல்படுத்துதல் அவசியமாகும். சட்டத்தின் 86(எ) பிரிவின் கீழ், கதிரியக்க மூலங்கள் மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட பொருட்களின் பாதுகாப்பு குறித்த விதிமுறைகளை உருவாக்க அமைச்சருக்கு அதிகாரங்களை வழங்குகிறது. கதிர்வீச்சு மூலங்களின் பாதுகாப்பு குறித்த பிரமாணங்கள் பணிப்பாளர் நாயகத்தால் வரைவு செய்யப்பட்டு, அவை அமெரிக்காவின் எரிசக்தி திணைக்களத்தின் உலகளாவிய பொருள் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அமெரிக்க நிபுணரால் மதிப்பாய்வு செய்யப்பட்டன. மதிப்பாய்வு செய்யப்பட்ட விதிமுறைகள் ஆர்வமுள்ள தரப்பினர்களுடனான கூட்டங்களின் போது கலந்துரையாடப்பட்டு அவர்களது கருத்துக்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன. ஆர்வமுள்ள தரப்பினர்களின் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு இறுதி வரைபு தயாரிக்கப்பட்டது. இந்த மீளாய்வுசெய்யப்பட்ட பிரமாணம் அமைச்சின் ஊடாக சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அதன் அங்கீகாரத்திற்காக அனுப்பிவைக்கப்பட்டது.

இந்த பிரமாணங்கள் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு மூன்று மொழிகளுக்கும் சட்ட வரைவாளரின் ஒப்புதல் பெறப்பட்டது. இந்த பிரமாணங்களை வர்த்தமானியில் வெளியிடுவதற்காக அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

கதிர்வீச்சுத் தொழிலாளர்களின் தகைமைகளை அளவிடும் விதிகள்

தொழிலாளர்கள், நோயாளர்கள் மற்றும் பொதுமக்களின் கதிர்வீச்சுப் பாதுகாப்பிற்கு அவசியமான சில விடயங்கள் தொடர்பில் விதிகளைத் தயாரிப்பதற்கான அதிகாரத்தை அதிகாரச்சட்டத்தின் 87 ஆவது பிரிவு பேரவைக்கு வழங்குகின்றது.

87(1)(ஈ) பிரிவின் கீழ் பேரவையினால் நியமிக்கப்பட்ட குழுவொன்றினால் மேற்படி விதிகள் வரையப்பட்டன. அயனாக்கல் கதிர்வீச்சினை பயன்படுத்தி பணிகளை மேற்கொள்வதற்கு ஒவ்வொரு

தொழிலாளர் வகுப்பிற்கும் தேவையான ஆகக்குறைந்த தகுதிகள் மற்றும் அனுபவங்களை இந்த விதி உருவாக்குகின்றது.

கதிர்வீச்சுத் தொழிலாளர்களின் தகைமைகளிற்கான முதலாவது விதியின் வரைபு தயாரிக்கப்பட்டு 15 ஆர்வமுள்ள நிறுவனங்களின் அபிப்பிராயங்களையும் கருத்துக்களையும் பெற்றுக்கொள்வதற்காக அவர்களிற்கு அனுப்பிவைக்கப்பட்டது. அந்த தகவல்கள் கிடைத்ததன் பின்னர், ஆர்வமுள்ள தரப்பினர்களின் கருத்துக்களிற்கமைவாக இறுதி வரைபு தயாரிக்கப்பட்டது. அதன்பின்னர், இவ்வாறு தயாரிக்கப்பட்ட ஆவணம் பேரவையின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்டது. கதிர்வீச்சுக் கல்லூரியொன்றில் பாடநெறியொன்றை பயிலாது வெளிவாரி நிறுவனங்களிலிருந்து பெற்றுக்கொள்கின்ற தகைமைகளின் அடிப்படையில் எக்ஸ்-கதிர் இயந்திரங்களைச் செயற்படுத்துவதற்கு அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொண்டுள்ள அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள ஊழியர்களின் பட்டியலொன்றை தயாரிக்குமாறு பேரவையின் பணிப்பாளர் சபையினால் ஆலோசனை வழங்கப்பட்டது. பிரமாணத்திற்குத் தேவையான திருத்தங்களை மேற்கொள்வதற்காக இந்த பட்டியலைத் திருத்துவதற்குத் தேவையான தகவல்களைத் திரட்டும் பணியில் பேரவை ஈடுபட்டுள்ளது.

விதியில் கோரப்பட்ட தகுதிகள் இல்லாத எக்ஸ்ரே இயந்திரங்களை இயக்குவதற்கு முந்தைய உரிமத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொழிலாளர்களின் பட்டியலுடன் வரைவு விதியின் இறுதிப் பதிப்பு பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டு வரைவு விதிகள் 2021.03.30 அன்று அமைச்சின் பரிசீலனைக்காகவும், சட்ட வரைவுத் திணைக்களத்தின் ஒப்புதல் மற்றும் மதிப்பாய்வுக்காகவும் சமர்ப்பிக்கப்பட்டது.

சுகாதார அமைச்சின் செயலாளர் மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஆகியோருடன் அரசாங்க மருத்துவ இயற்பியலாளர் சங்கம் மற்றும் அரசாங்க கதிரியக்க தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கம் ஆகியோருடன் நடத்திய சந்திப்பில், கதிரியக்க ஊழியர்களின் தகுதிகள் குறித்து சில பிரச்சினைகள் எழுப்பப்பட்டன.

வரைவு விதிகளில் சில திருத்தங்கள் செய்வதற்கு கவுன்சில் முடிவு செய்ததுடன், பேரவையால் வழங்கப்பட்ட முந்தைய உரிமங்களில் காணப்பட்ட வேறு சில பெயர்களும் 2020.12.31 வரை வழங்கப்பட்ட உரிமத்தில் பேரவையால் அங்கீகரிக்கப்பட்டிருந்த நபர்களின் பெயர் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும் என்று கண்டறியப்பட்டது.

தற்போது வரைவு விதி, மேற்கண்ட திருத்தங்களை உள்ளடக்கி பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

கதிரியக்க கழிவு முகாமைத்துவ தேசிய கொள்கை

2014 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்திச் சட்டத்தின் 54 ஆவது பிரிவின்படி, சர்வதேச நியமங்களின் அடிப்படையில் கதிரியக்கக் கழிவு முகாமைத்துவம் தொடர்பான தேசியக் கொள்கையை பேரவை உருவாக்க வேண்டும். எனவே, இந்த கொள்கையை சர்வதேச அணுசக்தி முகவர் நிலையத்தின் (IAEA) வழிகாட்டுதலின்படியும் சர்வதேச நியமங்களிற்கு அமையவும் தயாரித்து, 2022 ஜனவரியில் பேரவையின் பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பிக்க எதிர்பார்க்கப்படுகின்றது. கதிரியக்கக் கழிவு முகாமைத்துவம் தொடர்பான தேசியக் கொள்கையை தயாரித்தல் என்பது 2021 இன் வேலை திட்டத்தில் பட்டியலிடப்பட்டுள்ளது.

அதிகாரமளித்தல் (அனுமதிப்பத்திரங்கள் மற்றும் அங்கீகாரங்கள்)

அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்

2015 இன் 1 ஆம் இலக்க அணுசக்தி (அனுமதிப்பத்திரம்) விதிகள் மற்றும் 2015 இன் 1 ஆம் இலக்க (தொழிலொன்றை நடாத்துவதற்கான விருப்பத்தை அறிவித்தல்) அணுசக்தி விதிகளின் தேவைப்பாடுகளை பூரணப்படுத்தியவர்களிற்கு அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் 2016 சனவரி 01 இல் ஆரம்பிக்கப்பட்டது. தொழிலில் காணப்படுகின்ற ஆபத்தினை அடிப்படையாகக் கொண்டு அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியாகும் காலம் 01, 02 மற்றும் 03 ஆண்டுகள் என குறிப்பிட்ட விதிகள் குறித்துரைக்கின்றன. பின்வரும் தொழில்களிற்கு புதிய அனுமதிப்பத்திரங்களும் ஏற்கனவே அனுமதிப்பத்திரம் பெற்றவர்களிற்கு புதுப்பித்தல்களும் வழங்கப்பட்டன.

- கதிர்வீச்சு சிகிச்சை (ஊடுகதிர் சிகிச்சை, தொண்டை சிகிச்சை, மற்றும் நேர்கோட்டு இசைவாக்கங்கள்)
- அணு மருத்துவம் (சிகிச்சை, நோய்க் கண்டுபிடிப்புக்கள்)
- மருத்துவ கதிர்வீச்சியல் (பொது, பற்சிகிச்சை மற்றும் சிகிச்சையளித்தல்கள்)
- கைத்தொழில் ஒளிப்பிரப்பி பொறிகள் (மருத்துவ உற்பத்திகள் மற்றும் உணவுக் கதிர்வீச்சகற்றல்)

- கெம்மா ஒளிப்பிரப்பி கூடங்கள் (ஆராய்ச்சி, இரத்த கதிர்வீச்சகற்றல்)
- கைத்தொழில் ஒளிப்பிரப்பி (கெம்மா மற்றும் எக்ஸ்-கதிர்கள்)
- நியூட்ரன் பிறப்பாக்கிகள், அணுவியல் பெட்டிகள், சிறப்பாக இணையும் மூலங்கள் மற்றும் இடி தாங்கிகள்
- பகுப்பாய்வு எக்ஸ்-கதிர் உபகரணங்கள், கதிர்வீச்சு மூலங்களைக் கொண்ட பகுப்பாய்வு உபகரணங்கள் மற்றும் பெட்டக எக்ஸ்-கதிர் பிரிவுகள்
- பொறியிடப்பட்ட மற்றும் பொறியிடப்படாத கதிரியக்க மூலங்கள்
- ஒளிப்பிறப்பி உபகரணங்களையும் கதிரியக்க பொருட்களையும் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்தல்.
- கதிரியக்க பொருட்களின் போக்குவரத்து
- ஒளிப்பிரப்பி உபகரணங்கள் மற்றும் கதிரியக்க மூலங்களைக் கொண்ட பகுப்பாய்வு உபகரணங்களை திருத்துதல் மற்றும் பராமரித்தல்
- கதிரியக்க கழிவு முகாமைத்துவம் மற்றும் களஞ்சியப்படுத்தல்
- கதிரியக்க மூலங்களை அகற்றுதலும் அப்புறப்படுத்தலும்
- கதிரியக்க மூலங்கள் மற்றும் ஒளிப்பிறப்பி உபகரணங்களை விற்பனை செய்தல்
- மானிடத் தோற்ற எக்ஸ்-கதிர் முறைமை

அனுமதிப்பத்திரங்களிற்கான புதுப்பித்தல் விண்ணப்பங்களை திருத்தியமைத்தல்

2021 செப்தெம்பர் 30 வரையான இறுதித் தினத்திற்கு முன்னர் அனுமதிப்பத்திரங்களின் புதுப்பித்தலுக்காக பேரவைக்குக் கிடைத்திருந்த அனைத்து விண்ணப்பங்களுக்கும் அனுமதிப்பத்திரத்திற்கான கட்டணத்தை செலுத்திய பின்னர் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன. நிதிப்பிரச்சினைகள் மற்றும் கொவிட்-19 நிலைமை காரணமாக இத் திகதிக்குப் பின்னர் கிடைத்திருந்த விண்ணப்பங்களிற்கு அனுமதிப்பத்திரக் கட்டணம் செலுத்தப்பட்ட பின்னர் இடைக்கால அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன.

2021 இற்கான அனுமதிப்பத்திர புதுப்பித்தலுக்கான விண்ணப்பங்களின் மீளாய்வுச் செயன்முறையின் போது, பேரவையின் கதிர்வீச்சுப் பாதுகாப்பு தேவைப்பாடுகளுடன் வசதியின் இணங்கியொழுகுதலை மதிப்பிடுவதற்காக முன்னைய பரிசோதனைகளின் கண்டுபிடிப்புக்களை பேரவை கருத்திற்கொண்டிருந்தது. அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படுவதற்கு முன்னர் அனைத்து வசதிகளும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

மீளாய்வுச் செயன்முறையுடன் இணைந்த வகையில், ஒவ்வொரு அனுமதிப்பத்திர மட்டத்திற்கும் உரித்தான விண்ணப்ப செயன்முறைப்படுத்தல் கட்டணம் மற்றும் தேவைப்படுமிடத்து மிகை அறவீடுகளுடன் அனுமதிப்பத்திரக் கட்டணத்தை சேகரிப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டன.

அனுமதிப்பத்திரங்ளை மாற்றியமைத்தல்

தொழிலொன்றை தொடர்வதற்கு அதிகாரச்சட்டத்தின் 27(1) ஆம் பிரிவில் இனங்காணப்பட்டுள்ள நிலமைகள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவை இடம்பெறுதல் மீது அனுமதிப்பத்தரங்களிற்கான நவீனப்படுத்தல்கள் தேவைப்படுத்தப்படுகின்றன. அதற்கமைய, நவீனப்படுத்தல்கள் தேவைப்பட்ட தொழில்களிற்கு நவீனப்படுத்தப்பட்ட அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன.

இடைக்கால அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்.

அதிகாரச்சட்டத்தின் 28(2) ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், நிதிப்பிரச்சினைகள் மற்றும் கொவிட்-19 நிலைமை காரணமாக தபாலிடுதலில் தாமதங்கள் காணப்பட்டமையால் 2021 **செப்தெம்பர் 30 ஆந் திகதி இறுதித் திகதிக்கு பின்னர் புதுப்பித்தலுக்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்திருந்த விண்ணப்பதாரிகளிற்கு ஏற்கனவேயுள்ள அனுமதிப்பத்திரங்கள் காலாவதியாவதற்கு முன்னர் இந்த விண்ணப்பங்களை மீளாய்வு செய்வதற்கு காலம் போதாமையால் புதுப்பித்தலை செய்வதற்கு உட்பட்டு இடைக்கால அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன.**

மீளாய்வுக் காலப்பகுதியில் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை

.

அனுமதிப்பத்திர வகை	வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை
வழங்கப்பட்ட புதிய மற்றும் புதுப்பித்தல் அனுமதிப்பத்திரங்கள்	421

மேற்குறிப்பிட்ட அனுமதிப்பத்திரங்களைத் தவிர்த்து, பேரவை 2021 ஆம் ஆண்டில் பின்வரும் அனுமதிப்பத்திரங்களை வழங்கியது.

- இடைக்கால அனுமதிப்பத்திரங்கள் - 280
- நீட்டிக்கப்பட்ட அனுமதிப்பத்திரங்கள் - 89
- மாற்றியமைத்தல் அனுமதிப்பத்திரங்கள் - 48
- இலங்கையிலுள்ள நிலத்தடி நீர் ஊடாக கதிரியக்கப் பொருட்களைக் கொண்டு செல்வதற்காக வெளியிடப்பட்ட திருத்தங்கள் - 05

கதிர்வீச்சற்ற அறைகளிற்கான அங்கீகாரம்

அறைகளிற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு விடயங்களை கவனமாக மதிப்பிட்ட பின்னர் புதிய வசதிகளின் கதிர்வீச்சற்ற அறைத் திட்டங்களிற்கு அங்கீகாரங்கள் வழங்கப்பட்டன. 2021 இல் பின்வரும் தொழில்களிலுள்ள 99 கதிர்வீச்சற்ற அறைத் திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டன.

தொழில்/மூலம்	அங்கீகரித்த அறைத் திட்டங்களின் எண்ணிக்கை
மருத்துவ வசதிகள் (X- கதிர்)	73
அணு மருத்துவ வசதிகள்	01
கைத்தொழில் வசதிகள் (X – கதிர்)	22
கைத்தொழில் ரேடியோகிரபி	02
களஞ்சியப்படுத்தல் அறை	01
மொத்தம்	99

உள்ளூர் சந்தைக்கு இறக்குமதி செய்யப்பட்ட பால் உணவுகளை விடுவிப்பதற்கு வழங்கப்பட்ட சான்றிதழ்கள்

பரிசோதிக்கப்பட்ட பால் உணவு மாதிரிகளிற்காக இலங்கை அணுசக்தி சபையினால் வழங்கப்பட்ட பரிசோதிக்கப்பட்ட பால் உணவு மாதிரிகளின் ஆய்வுகூட பரிசோதனை அறிக்கைகளின் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு உள்ளூர் சந்தைக்காக இறக்குமதி செய்யப்பட்ட பால் உணவுகளை விடுவிப்பதற்காக உணவு மற்றும் மருந்துகள் பரிசோதகர்களிற்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

வழங்கப்பட்ட சான்றிதழ்களின் எண்ணிக்கை 919 ஆகும்.

பதிவேடுகளின் பேணுகை

கதிரியக்க மூலங்கள் மற்றும் அனுமதிப்பத்திரங்களின் தரவடிப்படை பதிவேடொன்று பேணப்பட்டு நாளதுவரையாக்கப்பட்டது. அனுமதிப்பத்திர தாரர்களின் பெயர் மற்றும் ஏனைய தொடர்புடைய தகவல்கள் பேரவையின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் காட்சிப்படுத்தப்பட்டு பொதுமக்கள் தகவல்களிற்காக நாளதுவரையாக்கப்பட்டது.

தற்போது பரிசோதனைக்கு உட்படுத்தி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான தரவுகளை “ஒழுங்கமைத்தல் அதிகாரத் தகவல் முறைமை (Regulatory Authority Information System)” எனும் முறைமைக்கு உட்படுத்துதல் பயிலுனர் உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. கதிர்வீச்சு மூலங்கள் தொடர்பான தகவல்கள் பூரணப்படுத்தப்பட்டுள்ளதுடன், எக்ஸ்-கதிர் இயந்திரங்கள் தொடர்பான தகவல்கள் முறைமைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றது.

இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாடு

கதிரியக்க பொருட்கள் மற்றும் கதிரகற்றல் உபகரணங்களின் ஏற்றுமதி / இறக்குமதி செய்தல் அங்கீகாரம்

பிரமாணங்களுக்கு இணங்க சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களை மதிப்பீடு செய்த பின்னர் கதிரியக்க பொருட்கள் மற்றும் கதிரகற்றல் உபகரணங்களை ஏற்றுமதி செய்வதற்கும் இறக்குமதி செய்வதற்கும் பேரவை அதன் அங்கீகாரத்தை வழங்கியது. போக்குவரத்தின் போது மூலங்களின் பாதுகாப்பு மற்றும்

பராமரிப்புக்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் மெய்மையாய்வு செய்யப்பட்ட பின்னர் சுங்கத்திலிருந்து கதிரியக்க கொள்கலன்களை விடுவிப்பதற்கான அங்கீகாரங்களும் வழங்கப்பட்டன.

2021 இல் மூலங்களை ஏற்றுமதி செய்வதற்கும் இறக்குமதி செய்வதற்கும் வழங்கப்பட்ட அங்கீகாரங்களின் எண்ணிக்கை 606 ஆகும்.

சில வேளைகளில் ஏற்றுமதி அனுமதிப் படிவங்களில் தரப்பட்டுள்ள தகவல்களை மெய்மையாய்வு செய்வதற்காக களப்பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்படுவதுடன் சர்வதேச போக்குவரத்துப் பிரமாணங்களை பூர்த்திசெய்யும் விதத்தில் போக்குவரத்துப் பொதி வடிவமைக்கப்பட்டுள்ளதா என்பதனையும் பரிசோதிக்க வேண்டியுள்ளது. 2021 ஆம் ஆண்டில் மீள் ஏற்றுமதியுடன் தொடர்புடைய 05 பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

கதிரியக்க மூலங்களின் 1 அல்லது 2 ஆவது வகையினை இறக்குமதி செய்து கழிவுக் கதிரியக்க மூலங்களை மீள் ஏற்றுமதி செய்வதற்கான அங்கீகாரங்களை வழங்குதல், ஐஏஈஏ இன் கதிரியக்க மூலங்களின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு மீதான விதிகளிற்கும் ஐஏஈஏ இன் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வழிகாட்டல் ஆவணத்திற்கும் அமைவாக மேற்கொள்ளப்பட்டது.

கனிய மணல் ஏற்றுமதிக்கான ஒப்புதல்

பேரவையின் பணிப்பாளர் நாயகத்தின் வேண்டுகோளின் பேரில், கனிய மணல் ஏற்றுமதி மற்றும் இறக்குமதியாளர்களுக்கு கனிய மணல் ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்கு முன்னதாக கதிரியக்கப் பொருட்களுடன் கனிய மணலை இறக்குமதி செய்வது அல்லது ஏற்றுமதி செய்வதைத் தவிர்க்க பேரவையின் ஒப்புதலைப் பெறுமாறு புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகத்திற்கு பணிப்பாளர் நாயகத்தின் மூலம் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அதன்படி, பொதுமக்களினதும் போக்குவரத்து பணியாளர்களினதும் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், பேரவையின் ஆய்வகத்தில் கதிரியக்கத்தன்மைக்கான மாதிரிகளை பரிசோதித்த பின்னர், கதிரியக்க அளவுகள் மற்றும் செயல்பாடுகளிற்கான பரிந்துரைகளுடன் கனிய மணல்களுக்கான ஏற்றுமதி அனுமதிகளை வழங்க பேரவை தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.



மீள் ஏற்றுமதி அங்கீகாரத்திற்காக கதிர்வீச்சுப் பொதியொன்றை பரிசோதித்தல்

பாதுகாப்புக் களப்பரிசோதனைகள் மற்றும் அமுலாக்கம்

அதிகாரச்சட்டத்தின் 15 ஆம் பிரிவின் பிரகாரம் நியமிக்கப்பட்ட அதிகாரமுடைய பரிசோதகர்களால் களப்பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. அறிவித்தல் வழங்கப்பட்டு அல்லது வழங்கப்படாது களப்பரிசோதனைகளை மேற்கொள்வதற்கான அதிகாரத்தினை பேரவை கொண்டுள்ளது. களப்பரிசோதனைகளின் போது, வசதிகளிற்காகவும் மூலங்களிற்காகவும் ஏற்படுத்தப்பட்டுள்ள பாதுகாப்பு மற்றும் பராமரித்தல் ஒழுங்குகளை பரிசோதகர்கள் பரீட்சிப்பதுடன் அனுமதிப்பத்திர விண்ணப்பங்களில் வழங்கப்பட்டுள்ள தகவல்களுக்கு அமைவாக பாதுகாப்பு மற்றும் பராமரித்தல் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளனவா என்பது இதன்போது பரிசோதிக்கப்படுகின்றது. தொழிலில் காணப்படுகின்ற இடரின் அடிப்படையில் இடைக்கிடை அனுமதிப்பத்திர வசதிகள் பரிசோதிக்கப்படுவதுடன் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட வசதிகளின் பரிசோதனைக் காலமானது வசதிகளின் வகைக்கமைய அனுமதிப்பத்திரக் காலத்தினை (ஆண்டுதோரும், 1-3 ஆண்டுகள் மற்றும் 3-5 ஆண்டுகள்) ஒத்தாகக் காணப்படும். இருப்பினும், பொதுமக்கள் மற்றும் தொழிலாளர்களின் பாதுகாப்பிற்காக களப்பரிசோதனையொன்று தேவைப்படுகையில் மேலதிகக் களப்பரிசோதனைகள்

மேற்கொள்ளப்படுகின்றன. கதிர்வீச்சு பாதுகாப்பு களப்பரிசோதனையின் பின்னரே புதிய வசதிகளிற்காக அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படுகின்றன. மேற்கொள்ளப்பட்ட களப்பரிசோதனைகளின் தகவல்களை உள்ளடக்கிய தரவடிப்படை பேணப்படுவதுடன் அது காலரீதியாக நாளதுவரையாக்கப்படுகின்றது.

கைத்தொழில் பிரயோகங்களில் களப்பரிசோதனைகள்

களப்பரிசோதனைக் காலம் மற்றும் தொழில்கள்/மூலங்கள், கைத்தொழில் பிரயோகங்களில் மேற்கொள்ளப்பட்ட களப்பரிசோதனை எண்ணிக்கை என்பன கீழே தரப்படுகின்றன.

காலம்	தொழில் / மூலம்	பரிசோதனைகளின் எண்ணிக்கை
ஓராண்டு	- கைத்தொழில் பிரகாசிப்பானகள் (தடாக வகை பிரகாசிப்பான்) - கைத்தொழில் ரேடியோகிரபி வசதிகள்	07
1-3 ஆண்டுகள்	- சுய கவச கெம்மா பிரகாசிப்பான் / எக்ஸ்-கதிர் இயந்திரம் - நியுக்லோனிக் பெட்டிகள் மற்றும் வெல் லொஜிங் மூலங்கள் - துணிக்கை விசைகள் - ஒளிப்பிறப்பி கைதுசெய்தல் கருவிகள் - மொத்தமாக 37 இற்கு மேற்பட்ட ஜிகா பெக்யூரல் (1 கூரி) செயற்பாடுடைய பொறியிடப்பட்ட மற்றும் பொறியடப்படாத மூலங்கள்	07
3-5 ஆண்டுகள்	- கதிரியக்க மூலங்களைக் கொண்ட பகுப்பாய்வு உபகரணங்கள் - பகுப்பாய்வு எக்ஸ்-கதிர் உபகரணங்கள் - பெட்டக எக்ஸ்-கதிர் அலகுகள் - மொத்தமாக 37 இற்கு குறைவான ஜிகா பெக்யூரல் (1 கூரி) செயற்பாடுடைய பொறியிடப்பட்ட மற்றும் பொறியடப்படாத மூலங்கள	11

2021 இல் கைத்தொழில் பிரயோகங்களில் மேற்கொள்ளப்பட்ட மொத்தக் களப்பரிசோதனைகள் 25 ஆகும்.

மருத்துவப் பிரயோகங்களில் களப்பரிசோதனை

களப்பரிசோதனைக் காலம், தொழில்கள்/மூலங்கள், மருத்துவப் பிரயோகங்களில் மேற்கொள்ளப்பட்ட களப்பரிசோதனை எண்ணிக்கைகள் கீழே தரப்படுகின்றன.

காலம்	தொழில் / மூலம்	பரிசோதனை எண்ணிக்கை
ஓராண்டு	- தொலை கெம்மா வசதி - தொண்டை தெரபி வசதி - அணு மருத்துவ வசதிகள் (பொறியிடப்படாத மூலங்களை பயன்படுத்தும் தெரபி)	04
1-3 ஆண்டுகள்	- சீரீ ஸ்கேனர் - மெமோகிரபி இயந்திரம் - பொது ரேடியோகிரபி இயந்திரம் - இன்டர்வென்சனல் கதிரியல் எக்ஸ்-ரே கூறு/எங்கியோகிரபி கூறு - நேர்கோட்டு விசை வசதி - டோமோதெரபி வசதி - எக்ஸ்-ரே வசதி - தெரபிக்கான சீரீ சிமுலேடர்	51

	- அணு மருத்துவ வசதி (நோய் நிர்ணய கதிரோட்ட எஸ்ஸீ - ஆர்ஐஏ)	
3-5 ஆண்டுகள்	- பற்சிகிச்சை எக்ஸ்-கதிர் இயந்திரம் - மிருகவைத்திய எக்ஸ்-கதிர் இயந்திரம் - எலும்பு அடர்த்தி ஸ்கேனர்	20

2021 இல் மருத்துவ பிரயோகங்களில் மேற்கொள்ளப்பட்ட மொத்தக் களப்பரிசோதனைகள் 75 ஆகும்.

மேற்குறிப்பிடப்பட்ட திட்டமிட்ட / முன்னறிவிப்புச் செய்யப்படாத பரிசோதனைகளிற்கு மேலதிகமாக 2021 ஆம் ஆண்டில் பின்வரும் பரிசோதனைகளையும் பேரவை மேற்கொண்டது.

- கோரிக்கையின் மீதான பரிசோதனைகள் - 15
- முன்னறிவிப்புச் செய்யப்படாத பரிசோதனைகள் - 01
- அமுலாக்கல் பரிசோதனைகள் - 11
- மாற்றியமைத்தல் பரிசோதனைகள் - 22
- பின்தொடர் / மெய்மையாய்வுப் பரிசோதனைகள் - 15

பரிசோதனைகளிற்காக தொடர்புடைய வசதிகளிற்கு சரிபார்ப்புப் பட்டியல்களைத் தயாரித்தல்

தற்போதைய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, பேரவை பின்வரும் வசதிகளிற்கான சரிபார்ப்புப் பட்டியலைத் திருத்தத் தொடங்கியுள்ளது.

i) நேரியல் முடுக்கி வசதிகள்
ii) டோமோதெரபி வசதிகள்
iii) கதிரியக்க சிகிச்சை (டெலிதெரபி) வசதிகள்
iv) கதிரியக்க சிகிச்சை (பிராச்சிதெரபி) வசதிகள்
v) CT ஸ்கேனர் வசதிகள்
vi) கண்டறியும் எக்ஸ்ரே வசதிகள் (நிலையான / மொபைல் / மேமோகிராபி / மிருக மருத்துவம்)
vii) பல் / OPG / எலும்பு அடர்த்தி ஸ்கேனர் வசதிகள்
viii) C-Arm / ஆஞ்சியோகிராபி / ∴ப்ளோரோஸ்கோபி வசதிகள்
ix) PET ஸ்கேனர் / கெமா கேமரா இயந்திரங்கள்
x) அணு மருத்துவ வசதிகள் (அயோடின் நிர்வாகம்: 100 mCi க்கும் அதிகமான வீரியம்)
xi) அணு மருத்துவ வசதிகள் (அயோடின் நிர்வாகம்: 30 mCi க்கும் குறைந்த வீரியம்)

மெகா போர்ட் கண்டுபிடிப்பு முறைமைக் களப்பரிசோதனைகள்

கதிரியக்க மூலங்களை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கையாக (கதிரியக்க பொருட்களின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாடு) கதிரியக்க பொருட்களின் (சட்டவிரோத கடத்தல்) அங்கீகரிக்கப்படாத நகர்வுகளை கண்டறிவதற்காக கொழும்பு துறைமுகத்தில் ஒரு போர்டல் கண்காணிப்பு கண்டறியும் அமைப்பு (மெகா போர்ட் ஸ்கிரீனிங் சிஸ்டம்) நிறுவப்பட்டுள்ளது. இந்தக் கண்டறிதல் முறையானது 2015 ஆம் ஆண்டு வரை அமெரிக்க அரசாங்கத்தின் எரிசக்தித் திணைக்களத்தின் தேசிய பாதுகாப்பு நிர்வாகத்தின் தொழில்நுட்ப உதவியுடன் இலங்கை சுங்கத்தால் இயக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டது, அதன் பின்னர் சுங்க மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபை மற்றும் உள்வரும், தெரிவுசெய்யப்பட்ட வெளிச்செல்லும் மற்றும் டிரான்ஸ்ஷிப்மெண்ட் கொள்கலன்கள் திரையிடப்படுகின்றன. கெமா அல்லது நியூட்ரான் கதிர்வீச்சை வெளியிடும் கதிரியக்க பொருட்கள் அல்லது அசுத்தமான பொருட்களை இந்த அமைப்பால் கண்டறிய முடியும். பேரவையும் இலங்கை சுங்கமும் இந்த நடைமுறையின் முக்கிய பங்குதாரர்களாகும். ஸ்கேன் மூலம் அங்கீகரிக்கப்படாத கதிரியக்கத்தன்மை கண்டறியப்பட்டால், ஆய்வு மற்றும் தீர்வு நடவடிக்கைகள் குறித்த ஆலோசனைகளுக்கு பேரவைக்கு பொறுப்புள்ளது.

2021 ஆம் ஆண்டில் பேரவை 08 ஆய்வுகளை மேற்கொண்டதுடன் கண்டறியப்பட்ட கொள்கலன்களின் கதிரியக்க மாசுபாட்டைப் பொறுத்து தேவையான ஒழுங்குமுறை அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. உதாரணமாக, பொருட்கள் கதிரியக்கப் பொருட்களால் மாசுபட்டுள்ளன என்பதை உறுதிசெய்த பிறகு, தொடர்புடைய கொள்கலன்களை அவற்றின் உண்மையான வழங்குனர்களிற்கு அல்லது குறித்த நாட்டிற்கு திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டது. அனைத்து சம்பவங்களும் சட்டவிரோத கடத்தல் தரவுத்தள (ITDB) திட்டத்தின் மூலம் IAEA க்கு தெரிவிக்கப்பட்டது.



மருத்துவ C-Arm இயந்திர மொன்றை பரிசோதித்தல்



கைத்தொழில் X-ray இயந்திர மொன்றை பரிசோதித்தல்

அணு மற்றும் ஏனைய கதிரியக்கப் பொருட்களின் பாதுகாப்பு

கதிரியக்க மூலங்களின் பாதுகாப்பும் பராமரிப்பும் மீதான சர்வதேச அணுசக்தி முகவர் நிலையத்தின் (ஐஏஈஏ) ஒழுங்குவிதிகளையும் கதிரியக்க மூலங்களின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வழிகாட்டல்களையும் முழுமையாக கடைப்பிடித்து நடைமுறைப்படுத்துவதற்கு ஐஏஈஏ இற்கு இலங்கை அதன் அரசியல் ரீதியான கடப்பாட்டினை வழங்கியுள்ளது.

"கதிரியக்க மூலங்களின் பாதுகாப்பும் பராமரிப்பும் மீதான ஒழுங்குவிதிகள்" கதிரியக்க மூலங்களின் பாதுகாப்பை நோக்காகக் கொண்ட சட்டரீதியற்ற சர்வதேச ஆவணமொன்றாக காணப்படுவதுடன் குறிப்பாக ஐஏஈஏ இன் 1 மற்றும் 2 வகை கதிர்வீச்சு மூலங்களின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்காக அங்கீகாரங்களை வழங்குகையில் பின்பற்றவேண்டிய பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு வழிகாட்டல்களும் சட்டரீதியற்ற ஆவணமொன்றாகவே காணப்படுகின்றது.

ஒழுங்குவிதிகளிலுள்ள தேவைப்பாடுகளுடன் இணங்குவதற்காக, பேரவை பின்வரும் நடவடிக்கைகளை எடுத்திருந்தது.

- உயர் கதிரியக்க செயற்பாடுடைய மூலங்களை பயன்படுத்துகின்ற இடங்களிற்காக பௌதீக பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகப்படுத்தல். 13 இடங்களிற்காக பௌதீக பாதுகாப்பு வழங்கப்படுகின்றது.

- பராமரிப்பற்ற மூலங்களை வைத்திருப்பதற்கும் தொடர்ந்து பயன்படுத்த முடியாத மற்றும் பயன்படுத்தி முடித்த கதிரியக்க மூலங்களை சேகரிப்பதற்கும் மூலங்களை தேடும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.

- ஆர்வமுள்ள தரப்பினர்களிற்கு கதிரியக்க மூலங்களின் பாதுகாப்பு தொடர்பில் பயிற்சிகளை வழங்குதல் மற்றும் அணுப் பாதுகாப்பு நிகழ்வுகளின் போது அவற்றை எதிர்கொள்வதற்குப் விசேட அதிரடிப்படையினருக்கு பயிற்சியளித்தல்.

- அனுமதிப்பத்திரங்களை வழங்கவதற்கென ஐஏஈஏ வகை - 1 மூலங்களை பயன்படுத்தும் வசதிகளிற்காக ஆகக்குறைந்த கதிரியக்க பாதுகாப்புத் தேவைப்பாடுகளை அறிமுகம் செய்தல்.

- ஐஏஈஏ இன் 1 மற்றும் 2 வகை கதிர்வீச்சு மூலங்களை அங்கீகரிக்கையில் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி ஆவணத் தேவைப்பாடுகளை அமுல்படுத்ததல்.

- கதிரியக்க மூலங்களின் பாதுகாப்பிற்கான பிரமாணங்களை பூரணப்படுத்துதல்

பாதுகாப்பு ஒழுங்குபடுத்தல் முறைமையை பலப்படுத்துதல்

கதிரியக்க மூலங்களின் பாதுகாப்பு தொடர்பான இறுதிப் பிரமாணங்கள் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு மூன்று மொழிகளுக்கும் சட்ட வரைவாளர் திணைக்களத்தின் ஒப்புதல் பெறப்பட்டது.

மூன்று மொழிகள் கொண்ட பிரமாணங்களை வர்த்தமானியில் வெளியிடுவதற்கு பாராளுமன்றத்தின் ஒப்புதலுக்காக அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளன.

IAEA இன் வகை- I கதிர்வீச்சு வசதிகளுக்கு வழங்கப்பட்ட சர்வதேச நியமங்களின் தேவைப்பாடுகளிற்கு அமைவாக தயாரிக்கப்பட்ட சரிபார்ப்பு பட்டியலானது, நிறுவப்பட்ட பாதுகாப்பு அமைப்புகளின் இணக்கத்தன்மையை சரிபார்ப்பதற்காக ஆய்வுகளின் போது பயன்படுத்தப்பட்டது. மேற்கூறிய சரிபார்ப்புப் பட்டியலின் அடிப்படையில், வழங்கப்பட்ட பாதுகாப்பின் போதுமான தன்மையை சரிபார்க்கவும், மேம்பாடுகளுக்கான பரிந்துரைகளைச் செய்யவும் பேரவையின் கதிர்வீச்சு பாதுகாப்பு பரிசோதகர்களிற்கு பாதுகாப்பு பரிசோதனைகளை மேற்கொள்வதற்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

பௌதீக பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துதல்

வசதிகளிலும் உயர் கதிரியக்க மூலங்களை போக்குவரத்துச் செய்கையிலும் அணுப் பாதுகாப்பை பலப்படுத்துவதற்கான நிபுணத்துவமும் நிதியும் இலங்கையிடம் இல்லாமையால், உலகலாவிய அச்சுறுத்தல் குறைப்பு ஆரம்பித்தல் நிகழ்ச்சித்திட்டம் என அழைக்கப்படுகின்ற சர்வதேச அணுசக்தி முகவர் நிலையத்திடமிருந்தும் சக்திக்கான உலகலாவிய பொருள் பாதுகாப்பு (ஜீஎம்எஸ்) நிகழ்ச்சித்திட்டத்தின் ஐக்கிய அமெரிக்க திணைக்களத்திடமிருந்தும் அணுப் பாதுகாப்பை பலப்படுத்துவதற்கான சர்வதேச தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு உதவிகள் பெற்றுக்கொள்ளப்படுகின்றன. மீளாய்வாண்டில் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

கதிர்வீச்சகற்றல் வசதிகளிற்கு பௌதீக பாதுகாப்பை வழங்குதல்

ஐக்கிய அமெரிக்காவின் ஜீஎம்எஸ் நிகழ்ச்சித்திட்டத்தின் ஒத்துழைப்புடன் பேரவை உயர் கதிர்வீச்சு செயற்பாடுடைய மூலங்களை பயன்படுத்துகின்ற பின்வரும் வசதிகளிற்கு பௌதீக பாதுகாப்பை வழங்கியது.

வசதியின் பெயர்	வசதியின் வகை	பாதுகாப்புடைய அறைகளின் எண்ணிக்கை
அபேக்ஷா வைத்தியசாலை, மகரகம	கதிர்வீச்சு தெரபி அறைகள்	04
கதிர்வீச்சு தெரபி, போதனா வைத்தியசாலை, கண்டி	கதிர்வீச்சு தெரபி அறைகள்	02
கதிர்வீச்சு தெரபி பிரிவு, போதனா வைத்தியசாலை, கராபிடிய	கதிர்வீச்சு தெரபி அறைகள்	01
கதிர்வீச்சு தெரபி பிரிவு, பொது வைத்தியசாலை, அநுராதபுரம்	கதிர்வீச்சு தெரபி அறைகள்	01
கதிர்வீச்சு தெரபி பிரிவு, மாகாண பொது வைத்தியசாலை, பதுளை	கதிர்வீச்சு தெரபி அறைகள்	01
கதிர்வீச்சு தெரபி பிரிவு, ஆதார வைத்தியசாலை, தெள்ளிப்பலை, யாழ்ப்பாணம்	கதிர்வீச்சு தெரபி அறைகள்	01
இலங்கை கெம்மா நிலையம், பியகம	தடாக முறை கதிரகற்றல்	01
அன்சல் லங்கா (தனியார்) லிமிடட், பியகம	தடாக முறை கதிரகற்றல்	01
மனித மென்தோல் (திசு) வங்கி, கொழும்பு 7	தன்னிச்சை – கவச ஒளிப்பிறப்பி	01
விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம், பேராதெனிய	தன்னிச்சை – கவச கதிரகற்றல்	01
ஆசிரி சத்திரசிகிச்சை வைத்தியசாலை, கொழும்பு 05	குருதி கதிரகற்றல்	01
ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ், கட்டுநாயக்க	களஞ்சியப்படுத்தல் அறை	01
பயன்படுத்திய மூலங்கள் களஞ்சியப்படுத்தல் வசதி, இலங்கை அணுசக்தி சபை	பயன்படுத்திய மூலங்கள் களஞ்சியப்படுத்தல் அறை	04

உயர் வீரியம் கொண்ட மூலங்களின் பாதுகாப்பிற்கான போதுமான தன்மையை மதிப்பீடு செய்தல்

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல், நிலவும் உலகளாவிய அச்சுறுத்தல் மற்றும் உள்நாட்டு புலனாய்வுத் தகவல்களின் பகுப்பாய்வுக்குப் பிறகு, இந்த உயர் வீரியமுடைய கதிரியக்க மூலங்களின் பாதுகாப்பை மேம்படுத்த ஒரு சிறந்த பாதுகாப்பு முறைமை காணப்படுதல் வேண்டுமென அங்கீகரிக்கப்பட்டது. 2021 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் நடைபெற்ற பாதுகாப்பு பேரவையின் கூட்டங்களிலும் இந்த விடயம் விவாதிக்கப்பட்டதுடன் கதிரியக்க பாதுகாப்புக்கான உடனடி செயல் திட்டம் பாதுகாப்பு அமைச்சால் பேரவையுடன் இணைந்து தயாரிக்கப்பட்டது. இதனை செயல்படுத்தும் முதல் படியாக, தீங்கிழைக்கும் நோக்கத்துடன் அங்கீகரிக்கப்படாத நபர்களின் அணுகல் அல்லது கதிரியக்க மூலங்கள் அவர்களால் பெறுவதைத் தடுப்பதற்காக அனைத்துப் ஆர்வமுடைய அமைப்புகளாலும் செயல்படுத்தப்பட வேண்டிய பாதுகாப்புத் தேவையை அமைப்பது இதன் நோக்கமாக இருந்தது. அவசரநிலை செயல் திட்டத்தின் பரிந்துரைகளின்படி, ஆரம்ப கட்டமாக, ஒவ்வொரு இடத்தினதும் விரிவான கதிரியக்க பாதுகாப்பு அச்சுறுத்தல் மதிப்பீடு செய்யப்பட்டு பரிந்துரைக்கப்பட்டது. அதன்படி, 13 இடங்களையும் பார்வையிடுவதற்காக பாதுகாப்பு அமைச்சால் (MOD) பேரவையின் பணிப்பாளர் நாயகத்தின் தலைமையிலான குழு நியமிக்கப்பட்டு, சர்வதேச அளவில் பாதுகாப்பை மேலும் பலப்படுத்துவதற்கான பரிந்துரைகள் மற்றும் சர்வதேச நியமங்களிற்கு அமைய இடங்களின் பாதுகாப்பு நிலை குறித்த அறிக்கையை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

நாட்டில் கதிரியக்க பாதுகாப்பு அச்சுறுத்தலை நிவர்த்தி செய்வதற்காக நியமிக்கப்பட்ட குழு உறுப்பினர்களில் MOD, முப்படைகள், விசேட அதிரடிப்படை, சுகாதார அமைச்சு, மத்திய சுற்றாடல் அதிகாரசபை மற்றும் பேரவை ஆகியவற்றின் உறுப்பினர்கள் காணப்பட்டனர். அதன்படி, இந்தக் குழு 12 தளங்களுக்குச் சென்று அனைத்து பாதுகாப்பு அம்சங்களையும் உள்ளடக்கும் வகையில் நன்கு அபிவிருத்தி செய்யப்பட்ட சரிபார்ப்புப் பட்டியலைப் பயன்படுத்தி பாதுகாப்பு மதிப்பீட்டை நடத்தியது. எவ்வாறாயினும், தற்போதைய COVID-19 தொற்று நிலைமை காரணமாக தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையின் விஜயம் இரண்டு தடவைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. எனவே, "சூம்" முறையைப் பயன்படுத்தி ஆன்லைன் வழி மூலம் மதிப்பீட்டை நடத்த குழு முடிவு செய்தது.

இந்த அனைத்து தளங்களின் பாதுகாப்பையும் வலுப்படுத்துவதற்கான பரிந்துரைகள் அடங்கிய MOD இற்கான அறிக்கை குழுவால் தயாரிக்கப்பட்டது. தற்போது வகை 1 மூலங்களை களஞ்சியப்படுத்தி வைக்காததால், ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸைப் பொறுத்தவரை தற்காலிகமான மூலங்களின் சேமிப்பிடத்தைத் தவிர அனைத்து பௌதீக பாதுகாப்பு முறைமைகளையும் (பிபிஎஸ்) மத்திய கண்காணிப்பு நிலையத்துடன் (சிஎம்எஸ்) இணைக்குமாறு குழு கடுமையாக பரிந்துரைத்தது. எவ்வாறாயினும், எந்தவொரு பாதுகாப்பு நிகழ்வுகளின் போதும் மூலங்களிற்கான பாதுகாப்பை வழங்குவதற்கு ஸ்ரீலங்கா விமானப்படையுடன் தொடர்பு கொள்ளுமாறு ஸ்ரீலங்கா விமான சேவைக்கு பரிந்துரைக்கப்பட்டது.

ஆண்டின் நான்காவது காலாண்டில், அமெரிக்க எரிசக்தித் திணைக்களம் (USDOE) பிபிஎஸ்ஸின் தற்போதைய நிலைமை மற்றும் இந்தத் தளங்களின் எதிர்கால மேம்பாடு குறித்து விவாதிக்க பேரவையின் பிரதிநிதிகளுடன் ஒரு மெய்நிகர் சந்திப்பை நடத்தியது. இந்தக் கூட்டத்தில், நாட்டின் அணுசக்தி பாதுகாப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்துவதற்கான தற்போதைய தேவை மற்றும் சில தளங்களின் ஒப்பந்த காலத்தை நீடிப்பதன் முக்கியத்துவம் குறித்து பேரவையின் பணிப்பாளர் நாயகம் தனது கருத்தை தெரிவித்தார். எனவே, USDOE அனைத்து தளங்களின் இணைய பாதுகாப்பை மேம்படுத்தவும், பின்வரும் தளங்களின் ஒப்பந்த காலத்தை நீடிக்கவும் ஒப்புக்கொண்டுள்ளது. அனைத்து பராமரிப்பு ஒப்பந்தங்களும் 2023-24 வரை நீடிக்கப்பட்டன, இருப்பினும் அந்த தளங்களின் ஒப்பந்தங்கள் 2021 இன் இறுதியில் முடிவடைகின்றது. USDOE ஆசிரி அறுவை சிகிச்சை மருத்துவமனையில் உள்ள Cs-137 மூலத்தை X-ray கதிர்வீச்சற்ற அறைக்கு மாற்றுவதற்கு ஒப்புக்கொண்டது. இந்த மூலத்தை X-ray கதிர்வீச்சற்ற அறைக்கு மாற்றிய பிறகு, மூலத்தை அகற்றுவதற்காக வழங்குனருக்கு அதனை அனுப்பிவைத்து, இந்த வசதிக்கான பாதுகாப்புத் தேவையை நிவர்த்திக்க முடியும்.

இல.	நிறுவனத்தின் பெயரும் அமைவிடமும்
01	ஆசிரி அறுவை சிகிச்சை மருத்துவமனை, கொழும்பு 05: 2022 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் Cs-137 இனை X-ray க்கு மாற்ற ஒப்புக்கொண்டதுடன் PPS க்கான பராமரிப்பு ஒப்பந்தம் Cs-137 மூலத்தை X-ray க்கு மாற்றப்படும் வரை நீடிக்கப்பட்டது.
02	அபேக்ஷா வைத்தியசாலை, மஹரகம
03	போதனா வைத்தியசாலை, அனுராதபுரம்
04	போதனா வைத்தியசாலை, கண்டி
05	போதனா வைத்தியசாலை, கராபிட்டிய

06	மாகாண பொது வைத்தியசாலை, பதுளை
07	புற்றுநோய் சிகிச்சை பிரிவு, ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பழை , யாழ்ப்பாணம்

ஆனைத்து PPS களையும் கட்டுகுருந்தவில் உள்ள CMS இற்கு மாற்றுவதற்கும் அனைத்து இணைக்கப்பட்ட தளங்களிலும் இருக்கின்ற சமிக்கைளை தொடர்ச்சியாக CMS இற்கு மாற்றுவதற்கும் பேரவை பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

கதிரியக்க பொருட்களின் போக்குவரத்தின் போது பாதுகாப்பளித்தல்

உயர் வீரியம் கொண்ட கதிர்வீச்சு மூலங்களின் (வகை 1 மூலங்கள்) போக்குவரத்தின் போது தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளை பேரவை ஒருங்கிணைப்புச் செய்தது.

2021 ஆம் ஆண்டில் "கொபல்ட் - 60" வகை 1 ஐச் சார்ந்த உயர் கதிர்வீச்சு மூலங்களை உள்ளடக்கிய கொள்கலன் பேரவையின் கண்காணிப்பின் கீழ் கொழும்பு துறைமுகத்திலிருந்து பியகம ஏற்றுமதி பதணிடல் வலயத்திலுள்ள இலங்கை கெமா நிலையத்திற்கு போக்குவரத்துச் செய்யப்பட்டது.

இறக்குமதியாளரால் வழங்கப்பட்ட பாதுகாப்பு மற்றும் பராமரித்தல் தகவல்கள், இதற்காக போக்குவரத்துக் கம்பனியின் போக்குவரத்தில் ஈடுபடுகின்ற ஆட்கள் மற்றும் வாகனங்களின் பாதுகாப்புத் தன்மை அத்துடன் போக்குவரத்தின் போது மூலங்களிற்காக வழங்கப்படுகின்ற பாதுகாப்பு என்பவற்றை மதிப்பிட்ட பின்னர் மேற்படி போக்குவரத்தினை மேற்கொள்வதற்கு முன்னர் அதற்காக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டது.

பியகம ஏற்றுமதி பதணிடல் வலயத்தில் அமைந்துள்ள என்சல் லங்கை (பிரைவட்) லிமிடட் இற்கு I Co-60 உயர் வீரியமுடைய மூலங்களின் 01 கொள்கலனை இறக்குமதி செய்வதற்கும் கொண்டு செல்வதற்கும் 2021 ஆம் ஆண்டில் அனைத்து ஆரம்ப நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. கடல் வழித் தடங்கல் காரணமாக, கப்பல் வருகைதரும் திகதி 2022 சனவரி இற்கு மாற்றப்பட்டது.

இந்த நடவடிக்கையில் ஈடுபடும் அனைத்து பங்குதாரர்களுடன் என்சல் லங்கை (பிரைவட்) லிமிடட் இற்கு கொண்டு செல்லப்படும் கோபால்ட்-60 மூலங்களின் போக்குவரத்தின் பாதுகாப்பு அம்சங்களை விவாதிக்க பேரவை ஒரு நேர்காணல் கூட்டத்தை நடத்தியது.

அவசர நிலையை எதிர்கொள்ளல்

அணு அல்லது கதிரியக்க அவசரநிலை முகாமைத்துவம் மற்றும் அதனை எதிர்கொள்வதற்கான அதிகாரம்

அதிகாரச்சட்டத்தின் 58 ஆம் பிரிவின் பிரகாரம், எதிர்கால அணு அல்லது கதிர்வீச்சு அவசர நிலைமையினை எதிர்கொள்வதற்காக தேசிய அணு அல்லது கதிர்வீச்சு அவசர நிலைமை எதிர்கொள்ளல் திட்டமொன்றை உருவாக்குவதற்கும் அவசரநிலை முகாமைத்துவ திட்டத்தினை அமுல்படுத்துவதற்காக அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கு உதவியினையும் ஆலோசனையும் வழங்குதற்குமான பொறுப்பு பேரவைக்கு உள்ளது. அத்துடன், அணு ஆபத்தினை முன்கூட்டியே அறிவிப்புச் செய்யும் நிலையம் என்ற வகையில் தேசிய அபாய அறிவிப்பு நிலையமாகவும் (என்டபிள்யூபி) ஐஏஈஏ உடன் தொடர்பாடல் செய்வதற்கான தேசிய தகைமைகொண்ட அதிகாரியாகவும் அதற்காக உதவிகளை பெற்றுக் கொள்ளக்கூடிய அமைப்பாகவும் பேரவை காணப்படுகின்றது.

அணு அல்லது கதிர்வீச்சு அவசர தயாரிப்புக்கள் மற்றும் பேரவையினதும் ஆர்வமுள்ள தரப்பினர்களினதும் எதிர்கொள்ளல் இயலளவை அபிவிருத்தி செய்வதற்காக பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

தேசிய அணு அல்லது கதிரியக்க அவசர மேலாண்மை திட்டம் (EMP) மற்றும் அதை செயல்படுத்துதல்

சட்டத்தின் 58வது பிரிவின் கீழ், ஐஏஈஏ இன் வழிகாட்டல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் (DMC) ஆலோசனையின்படி, அணுசக்தி அல்லது கதிரியக்க அவசரநிலைகளின் போது தயார்படுத்தல், எதிர்கொள்ளல் மற்றும் முகாமைத்துவத்துக்கான திட்டத்தை (EMP) பேரவை

தயாரித்தது. DMC இன் இடைக்கால நிர்வாகக் குழு இந்த EMP இனை 2021 பெப்ரவரி 24 அன்று அங்கீகரித்துள்ளது. 2020 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் அணுசக்தி அல்லது கதிரியக்க அவசரநிலைகளுக்குப் பதிலளிப்பதற்கான தேசிய திறன்களை மேம்படுத்துவதன் மூலம் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த பேரவைக்கு பொறுப்பு உள்ளது. இது தொடர்பாக அனைத்து ஆர்வமுள்ள தரப்பினர்களிற்கும் தெரிவிக்கப்பட்டதுடன் ஆரம்ப நடவடிக்கைகள் மீதான அவர்களின் பொறுப்புகள் குறித்து அவர்களுக்குத் தெரியப்படுத்த ஆர்வமுள்ள தரப்பினர்களிற்கான கூட்டம் நடத்தப்பட்டது. இந்த நிகழ்வுக்கான நிதி சுகாதார அமைச்சின் ஊடாக உலக சுகாதார ஸ்தாபனத்திடமிருந்து (WHO) கோரப்பட்டுள்ளது.

அவசரகால எதிர்கொள்ளல் திறன்களை வலுப்படுத்துவதற்கான IAEA இன் தொழில்நுட்ப ஒத்துழைப்புத் (TC) திட்டம்.

அணு அல்லது கதிரியக்க அவசரநிலைகளை எதிர்கொள்வதற்கான தேசிய திறன்களை வலுப்படுத்தி மனித வள மேம்பாட்டிற்குத் தேவையான IAEA இன் உதவியைப் பெறுவதற்காக, 2022-23 TC திட்டத்தின் சுழற்சிக்கான செயற்திட்ட முன்மொழிவு IAEA இற்குச் சமர்ப்பிக்கப்பட்டது. பேரவையின் ஊழியர்களுக்கான கூட்டுப் பயிற்சிகள் மற்றும் விஞ்ஞான ரீதியான வருகைகள் உள்ளிட்ட முதல் பதிலளிப்பவர்கள், மருத்துவ பதிலளிப்பவர்கள் போன்ற ஆர்வமுள்ள தரப்பு நிறுவனங்களில் முக்கிய பணியாளர்களிற்கான பயிற்சிகள் போன்றவற்றை இத்திட்டம் உள்ளடக்குவதுடன் நாட்டின் தற்போதைய அவசரகால எதிர்கொள்ளல் திறன்களை வலுப்படுத்துவதற்கான உபகரணங்களை கொள்வனவு செய்தல் மற்றும் ஆர்வமுள்ள தரப்பு நிறுவனங்களின் அவசரகால எதிர்கொள்ளல் இயலுமைகளை மேம்படுத்துவதற்கான பயிற்சிகளையும் இத்திட்டம் உள்ளடக்குகின்றது.

2022/2023 செயற்திட்ட சுழற்சியின் போது இந்த செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு 2021 வியன்னாவில் நடைபெற்ற IAEA இன் பொது மாநாட்டில் மேற்குறிப்பிட்ட செயற்திட்ட முன்மொழிவுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. இந்த செயற்திட்டத்தின் கீழ், 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டிற்காக IAEA இனால் குழு உறுப்பினர்களுக்கான (ஒழுங்குபடுத்தல் பணியாளர்கள் மற்றும் பிற ஆர்வமுள்ள தரப்பு நிறுவனங்கள்) பல கூட்டுப பயிற்சிகள் மற்றும் விஞ்ஞான ரீதியான வருகைகள், சில அவசரகால எதிர்கொள்ளல் உபகரணங்களை கொள்வனவு செய்தல், அவசரகால தயார்நிலை ஆவணங்களை உருவாக்குதல் மற்றும் தேசிய பயிற்சி வகுப்புகளை நடத்துவதற்கான பல நிபுணத்துவ பணிகள் ஆகியவை அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இந்த முன்மொழிவு தேசிய திட்டமிடல் திணைக்களத்திடமும் சமர்ப்பிக்கப்பட்டு அது அங்கீகரிக்கப்பட்டது.

IAEA இன் அவசரகால பயிற்சிகளில் பங்கேற்பு

IAEA ConvEx இன்டர்நேஷனல் எமர்ஜென்சி ரெஸ்பான்ஸ் பயிற்சிகளில் பங்கேற்கப்பட்டது.

ஒரு பாரிய அணுசக்தி அல்லது கதிரியக்க அவசரநிலையினை எதிர்கொள்வதற்கு உறுப்பு நாடுகளின் இயலுமைகள் மற்றும் தயார்நிலையை மதிப்பிடுவதும் குறிப்பாக அவசரகால எதிர்கொள்ளல் ஏற்பாடுகள் மற்றும் திறன்களின் பலம் மற்றும் பலவீனமான பகுதிகளை அடையாளம் காண்பதுமே ConvEx பயிற்சிகளின் நோக்கமாகும். அணுசக்தி பாதுகாப்பு மற்றும் அணுசக்தி பாதுகாப்பு அதிகாரிகளிடையே நெருக்கமான ஒத்துழைப்பு தேவைப்படும் நிகழ்வுகளில் தேசிய மற்றும் / அல்லது சர்வதேச அவசரகால எதிர்கொள்ளல் கட்டமைப்பில் மேம்பாடுகள் தேவைப்படும் பகுதிகளை அடையாளம் காண்பதற்கு ConvEx (2021) ஒரு வாய்ப்பை வழங்கியுள்ளது.

ConvEx 2a- ConvEx 2 பயிற்சிநெறி 2021 மே 27 அன்று IAEA USIE மூலம் நடத்தப்பட்டது. சம்பவங்கள் மற்றும் அவசரநிலை மையத்திற்கு (IEC) முறையான அறிக்கையிடல் படிவங்களை சமர்ப்பிப்பதன் மூலம் அவசரகால தகவலைத் தொடர்புகொள்வதன் செயலாற்றலை பரிசோதிப்பதே இந்த பயிற்சியின் நோக்கமாகும். இலங்கையும் உதவிகோரும் நாடாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே, வளர்ந்து வரும் சூழ்நிலையை விவரிக்கும் மூன்று உந்துதல்களை இலங்கை பெற்றது. அதன்படி, USIE இன் ஊடாக பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

அணு அல்லது கதிரியக்க அவசரநிலைகள் தொடர்பான ConvEx-3 பயிற்சியானது 2021 அக்டோபர் 26 மற்றும் 27 ஆம் தேதிகளில் IAEA இன்டர்நேஷனல் எமர்ஜென்சி சென்டர் (IAEA-IEC) இன் இணையத்தின் மூலம் நடத்தப்பட்டது.

இந்த பயிற்சிகளின் ஒட்டுமொத்த இலக்குகள் வருமாறு:

- கடுமையான அணுசக்தி அல்லது கதிரியக்க அவசரநிலையின் ஆரம்பகட்ட எதிர்கொள்ளலை மதிப்பீடு செய்வதற்காக அரசாங்க மற்றும் தொடர்புடைய சர்வதேச அமைப்புகளை அனுமதித்தல்;

- சர்வதேச அவசரகால முகாமைத்துவ முறைமையை மதிப்பிடுதல். உதாரணமாக: நிகழ்வு மற்றும் அவசரநிலை தகவல் தொடர்பாடலுக்கான செயற்பாட்டுக் கையேடு (IEComm), IAEA இன் எதிர்கொள்ளல் மற்றும் உதவி நெட்வொர்க் (RANET) மற்றும் சர்வதேச அமைப்புகளின் கூட்டு கதிர்வீச்சு அவசரகால முகாமைத்துவத் திட்டத்தின் (JPLAN) ஏற்பாடுகள்;

- அரசுகளிற்கு இடையே நேரடியான இருதரப்பு / பல்தரப்பு தகவல்தொடர்புகளை பரிசோதித்தல்; மற்றும்

- நல்லாளுகை நடைமுறைகள் மற்றும் தேசிய பயிற்சிகளில் அடையாளம் காண முடியாத முன்னேற்றம் தேவைப்படும் பகுதிகளை அடையாளம் காணுதல்.

IAEA இன் தகவல்தொடர்பு அமைப்பு மற்றும் தொடர்பு முறையைப் புரிந்துகொள்வதற்காக அணுசக்தி அல்லது கதிரியக்க அவசரநிலையின் போது நிறுவப்பட்ட IAEA - IEC WEB அடிப்படையிலான தகவல்தொடர்பாடல் முறைமையின் ஊடாக IAEA மற்றும் ஏனைய நாடுகளுடன் இணைந்து பயிற்சியில் பங்கேற்றமை பயனுள்ளதாக அமைந்திருந்தது.

அவசரகாலத் தயார்நிலை மற்றும் எதிர்கொள்ளலை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள்

- பேரவை மற்றும் தேசிய அவசரநிலை ஒருங்கிணைப்பாளர் (NEC) ஆகியவற்றின் அவசரகால எதிர்கொள்ளல் குழுக்களுக்கு உறுப்பினர்களை நியமித்தல்

- அனைத்து எதிர்கொள்ளல் குழு உறுப்பினர்களுக்கும் பயிற்சி அளித்தல்: அவர்களின் பொறுப்புகளை அறிந்து கொள்வதற்காக பயிற்சிநெறிகளை ஆரம்பித்தல். இந்த பயிற்சியை 2022 இல் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது

- சர்வதேச சுகாதார விதிமுறைகளின் (IHR-2005) தேவையை பூர்த்தி செய்வதற்காக கதிரியக்க அவசரநிலைகளின் கீழ் நடவடிக்கைகளை செயற்படுத்தும் பொருட்டு அடுத்த ஐந்தாண்டுகளுக்கு தயாரிக்கப்பட்ட தேசிய செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி WHO இலிருந்து பெறப்பட்ட சர்வதேச சுகாதார ஒழுங்குமுறைகளின் (IHR-2005) கீழ் கூட்டு வெளிப்புற மதிப்பீட்டு கருவியை சமர்ப்பித்தல்.

- மேற்குறிப்பிட்ட கருவி குறித்து விவாதிப்பதற்காக MOH ஏற்பாடு செய்திருந்த ஆர்வமுள்ள தரப்பினர்களின் கூட்டத்தில் பங்கேற்றல்.

SRL- 9011 தொழில்நுட்ப ஒத்துழைப்பு செயற்திட்டத்தை அமுல்படுத்துதல்

IAEA ஆனது 2020/2021 சுழற்சிக்கான RAS9011 "கதிர்வீச்சு மூலங்களின் பாதுகாப்பிற்கான ஒழுங்குபடுத்தல் உட்கட்டமைப்பை வலுப்படுத்துதல்" என்ற தொழில்நுட்ப ஒத்துழைப்பு செயற்திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. கோவிட்-19 உலகளாவிய தொற்றுநோய் சூழ்நிலை காரணமாக, செயற்திட்டத்தின் கீழ் 2021 இல் திட்டமிடப்பட்ட செயல்பாடுகளைச் செயல்படுத்துவது சாத்தியமற்றுக் காணப்பட்டது. எவ்வாறாயினும், பேரவையின் ஒழுங்குபடுத்தல் ஊழியர்களுக்கான அங்கத்துவப் பயிற்சிகள் (FTs) மற்றும் விஞ்ஞான வருகைதருதல்களுக்கான (SVs) விண்ணப்பங்கள் IAEA க்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் 02 கருவிகளை கொள்வனவு செய்வதற்கான கோரிக்கை

முன்வைக்கப்பட்டது. IAEA ஆனது 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் கருவிகளைக் கொள்வனவு செய்வதற்கும் FTs மற்றும் SVs களை நடத்துவதற்கும் பொருத்தமான இடங்களைக் கண்டறியும் பணியில் ஈடுபட்டு வருகிறது.

அத்துடன், அகழ்வு மற்றும் செயலாக்கத்திற்கான ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளுக்கான விதியைத் தயாரிப்பதன் அவசியமானது IAEA இன் செயற்திட்ட முகாமைத்துவ அதிகாரி மற்றும் தொழில்நுட்ப அதிகாரிக்கு தெரிவிக்கப்பட்டு, அதற்கான நிபுணர்களின் உதவியை வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.

2022 சனவரியில் பெறப்படவுள்ள கருவிகளை இலங்கை சுங்கத்திலிருந்து விடுவிப்பதற்கான செயற்திட்டத்திற்கும் நிதி ஒதுக்கீட்டுக்கும் தேசிய வரவு செலவுத் திணைக்களத்தின் அனுமதியைப் பெறுவதற்குத் தேவையான ஆவணங்கள் உரிய அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

IAEA ஆல் நடாத்தப்பட்ட பாதுகாப்புச் செயற்பாடுகள் மற்றும் பாதுகாப்பு பரிசோதனைகளை நடைமுறைப்படுத்துதல்

1984 ஆகஸ்ட் 06 ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வந்த அணு ஆயுதப் பரவல் தடை (INFCIRC / 320) தொடர்பான விரிவான பாதுகாப்பு உடன்படிக்கையில் இலங்கையும் கையெழுத்திட்டுள்ளது. இது சட்டரீதியான கடப்பாடுடைய உடன்படிக்கையாக காணப்படுவதுடன் இந்த உடன்படிக்கையின் படி, அவர்களின் எல்லைக்குட்பட்ட அணுசக்தி பொருட்கள் குறித்து IAEA க்கு அறிவித்தல் வேண்டும். இலங்கையில் உள்ள பல நிறுவனங்கள் கைத்தொழில் ரேடியோகிரா.்பி கேமராக்கள் மற்றும் குறைக்கப்பட்ட யுரேனியம் (DU) கொண்ட கதிரியக்க சிகிச்சை இயந்திரங்களை பாதுகாப்புப் பொருளாகப் பயன்படுத்துகின்றன, இது இந்த உடன்படிக்கையின் கீழ் ஒரு கட்டுப்பாட்டு உருப்படியின் கீழ் உள்ளதுடன் அரச தரப்புகளிற்கு அறிவிக்க வேண்டிய கடப்பாட்டிற்கு உட்பட்டவையாக காணப்படுகின்றன. எனவே, இந்த கைத்தொழில் ரேடியோகிரா.்பி கேமராக்கள் மற்றும் குறைந்த யுரேனியத்துடன் கூடிய கதிரியக்க சிகிச்சை இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்ற மற்றும் வைக்கப்பட்டுள்ள இடங்களை பேரவை ஏற்கனவே அறிவித்துள்ளது.

மேற்கூறிய உடன்படிக்கையின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக, அணுசக்தி மூலப்பொருள் கணக்கீட்டு தரவுகளுடன் தொடர்புடைய அறிக்கைகளை இலங்கை 2021 இல் IAEA க்கு அனுப்பியுள்ளது.

மேற்படி பிரகடனத்தின் படி, IAEA இன் பரிசோதகர்களான திருமதி. அயகோ நாகோ மற்றும் திரு. பெட்ரோ கோவலென்கோ ஆகியோர் 2021 திசெம்பர் 02 – 03 வரை பௌதீக பொருட் கணக்கெடுப்பு மற்றும் மூலங்களின் ஆவண பரிசோதனைக்காக, இலங்கையில் குறைக்கப்பட்ட யுரேனியம் களஞ்சியப்படுத்தி பயன்படுத்தப்படும் பின்வரும் நிறுவனங்களுக்குச் சென்றனர்.

- அழிவற்ற பரிசோதனைக்கான தேசிய நிலையம், களனி.
- இந்தோ ஈஸ்ட் இன்ஜினியரிங் & கன்ஸ்ட்ரக்ஷன் (இலங்கை) பிரைவேட் லிமிடெட், வத்தளை.
- Electro-ref Engineers (Pvt) Ltd, கொழும்பு 08.
- Colombo Dockyard PLC, கொழும்பு 15.
- இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், களனி.

அதன்பின்னர், 2021 ஆம் ஆண்டில் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பு நடவடிக்கைகள் வெற்றிகரமாக இருந்ததை சுட்டிக்காட்டும் அறிக்கையை IAEA பேரவைக்கு அனுப்பியிருந்ததுடன் பாதுகாப்பு ஆய்வு தொடர்பாக இன்றுவரை கிடைத்த தகவல்களின் அடிப்படையில், அறிவிக்கப்பட்ட அனைத்து அணுசக்தி பொருட்களும் இருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டது. இலங்கையில் பிரகடனப்படுத்தப்படாத அணுவாயுதப் பொருட்கள் பற்றிய எந்த அறிகுறியும் இல்லை என கணக்கிடப்பட்டுள்ளது.





IAEA இன் பாதுகாப்புப் பரிசோதனைகளை நடாத்துதல்

ஒழுங்குபடுத்தல் செயற்பாட்டை பலப்படுத்துவதற்கான ஆவணங்களைத் தயாரித்தல்

பயிற்சிக் கையேடு

2014 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்திச் சட்டத்தின் பிரிவு 12 (ஈ) இன் படி, கதிரியக்க பாதுகாப்பு, பராமரிப்பு மற்றும் கதிர்வீச்சு மூலங்களின் பாதுகாப்பு குறித்து ஆர்வமுள்ள தரப்பினர்களிற்கு பயிற்சி அளிப்பதற்கான அதிகாரம் பேரவைக்கு உள்ளது.

குறித்துரைத்த பறிசிகளிற்கு மேலதிகமாக கதிர்வீச்சு மூலங்களைப் பயன்படுத்துகின்ற மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் பணிபுரிகின்ற கதிர்வீச்சுப் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் (RPOs) மற்றும் ஏனைய கதிர்வீச்சு ஊழியர்களிற்குத் தேவையான பயிற்சிகளை உரிமத்தில் சேர்ப்பதற்காக பயிற்சித் தேவைகளை உள்ளடக்கிய பயிற்சிக் கையேட்டை பேரவை தயாரித்துள்ளது.

கையேட்டில் ஒவ்வொரு வகை தொழிலாளர்களுக்கும் தேவையான கதிர்வீச்சு பாதுகாப்பு பயிற்சி, ஒவ்வொரு பயிற்சிக்கான தகுதித் தேவைகள் மற்றும் பயிற்சி சான்றிதழ்கள் காலாவதியான பின்னர் அங்கீகாரத்திற்கான மீள்பயிற்சி தேவைப்பாடுகள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

கதிர்வீச்சு பாதுகாப்பில் ஈடுபட்டுள்ள தகுதியான நபர்களுக்கு மட்டுமே உரிமம் வழங்குவதற்கு மேற்கூறிய பயிற்சித் தேவைகள் பேரவைக்கு உதவும் என்று பேரவை எதிர்பார்க்கின்றது.

பரிசோதனை நடைமுறை

2014 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்திச் சட்டத்தின் இன் பிரிவு 15 இன் அடிப்படையில் நியமிக்கப்பட்ட பேரவையின் அங்கீகரிக்கப்பட்ட பரிசோதகர்களால் ஒழுங்குபடுத்தல் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஒவ்வொரு பரிசோதகராலும் மேற்கொள்ளப்படும் பரிசோதனைகளில் ஒரு சீரான தன்மை கொண்டிருப்பதை உறுதிப்படுத்துவதற்காக உள்ளக பரிசோதனை நடைமுறையொன்று (SLAERC / Ins.Pro / 2021) தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டது. பரிசோதனை செயல்முறையைத் தயாரிப்பது என்பது 2021 இன் செயல் நடவடிக்கைத் திட்டத்திலுள்ள திட்டமிடப்பட்ட வேலையாகும்.

2021 ஆம் ஆண்டில் திட்டமிடப்படாத போதிலும் இடம்பெற்ற மேலதிக முக்கியமான செயற்பாடுகள்

விசேட பரிசோதனைகள் மற்றும் விஜயங்கள்

- இலங்கை அணுசக்தி சபை, என்சல் லங்கா (பிரைவட்) லிமிடட், பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையம், போதனா வைத்தியசாலை அநுராதபுரம், HORDI கன்னோருவை, போதனா வைத்தியசாலை கண்டி மற்றும் போதனா வைத்தியசாலை கராப்பிட்டிய ஆகிய இடங்கள் பேரவையின் பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் உயர்வீரியம் கொண்ட மூலங்களின் பாதுகாப்பு அச்சுறுத்தலை மதிப்பீடு செய்வதற்காக அமைச்சினால் நியமிக்கப்பட்ட குழுவினால் பார்வையிடப்பட்டதுடன் அறிக்கையும் தயாரிக்கப்பட்டது.

- "எக்ஸ்பிரஸ் பேர்ல்" கப்பல் விபத்துக்குள்ளான உஸ்வெட்டகேயாவ பிரதேசத்தில் பல்வேறு இடங்களில் இருந்து சேகரிக்கப்பட்ட மாதிரிகள் ஆய்வுகூடத்தில் பகுப்பாய்வு செய்யப்பட்டு, ஆய்வக முடிவுகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட அறிக்கை சூரிய சக்தி, காற்று, நீர் மின் உற்பத்தி செயற்திட்டங்கள் அபிவிருத்திக்குப் பொறுப்பான கௌரவ இராஜாங்க அமைச்சருக்கு அனுப்பவைக்கப்பட்டது.

- கொழும்பு 15, டிரைகோ இன்டர்நேஷனல் வளாகத்தில் இலங்கை சுங்கத்தால் இயக்கப்படும் கொள்கலன்-கதிர் ஸ்கேனர் இயந்திரத்தைப் பயன்படுத்துவதற்கான கதிர்வீச்சுத் தடையை அமைப்பதற்கான தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குவதற்காக பரிசோதனைகளும் கதிர்வீச்சு ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டன.

- ஆலையிலுள்ள சில கதிர்வீச்சு பாதுகாப்பு தேவைகளை மேம்படுத்துவதற்கும் தற்போதைய நிலைமையை மதிப்பிடுவதற்கும் முந்தைய பரிசோதனை அறிக்கையில் பேரவையால் வழங்கப்பட்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த அவர்கள் எடுத்த நடவடிக்கைகளை அவதானிப்பதற்கும் தம்புள்ளை கந்தலம இல் உள்ள கனிமங்களை பிரித்தெடுக்கும் நிறுவனமான Alchemy Heavy Metals (Pvt) Ltd 24.12.2021 அன்று பேரவையால் பார்வையிடப்பட்டது.

  முந்தைய கதிர்வீச்சு பாதுகாப்பு பரிசோதனை மற்றும் ஆய்வு நடைமுறைகளின் போது பேரவை வழங்கிய பரிந்துரைகளின் அமுல்படுத்தல் நிலைமை ஆய்வு செய்யப்பட்டதுடன், பரிந்துரைகளை செயல்படுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. போக்குவரத்து பணியாளர்களுக்கு கதிரியக்க பொருட்களை கொண்டு செல்வது மற்றும் கதிரியக்க பொருட்களுடன் பணிபுரியும் ஊழியர்கள் பின்பற்ற வேண்டிய பாதுகாப்பு முன்னெச்சரிக்கைகள் குறித்த அறிவை வழங்குவதற்காக விரிவான விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்களின் கதிர்வீச்சு பாதுகாப்பை மேலும் மேம்படுத்துவதற்காக மேலதிக பரிந்துரைகளும் வழங்கப்பட்டன.





கந்தலம இல் உள்ள Alchemy Heavy Metals (Pvt) Ltd
பரிசோதனை மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சி

பங்குபற்றிய கூட்டங்கள்

- இராஜாங்க அமைச்சர் திரு. லசந்த அழகியவன்ன அவர்களின் கோரிக்கையின் பேரில், இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுக்கான HS குறியீட்டை நடைமுறைப்படுத்துவதில் உள்ள சிக்கல்கள் குறித்து கலந்துரையாடுவதற்காக கூட்டுறவு சேவைகள், சந்தைப்படுத்தல் மேம்பாட்டு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சில் இடம்பெற்ற கூட்டத்தில் இரண்டு உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

- IHR-2005 தொடர்பான அரசாங்க தரப்பின் வருடாந்திர அறிக்கையிடல் கருவி தொடர்பில் கலந்துரையாடுவதற்காக பேரவையின் பிரதிநிதிகள் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

- கௌரவ சூரிய, காற்றாலை மற்றும் நீர் மின் உற்பத்தி செயற்திட்டங்கள் அபிவிருத்திக்கான இராஜாங்க அமைச்சர் அவர்களால் கோரப்பட்டதன் படி பேரவையானது IAEA இன் தொழில்சார் கதிர்வீச்சு பாதுகாப்பு மதிப்பீட்டு சேவை (ORPAS) பரிந்துரைகளை அமுல்படுத்துதல் குறித்து கலந்துரையாடுவதற்காக இராஜாங்க அமைச்சு மற்றும் இலங்கை அணுசக்தி சபையுடன் இடம்பெற்ற கூட்டங்களில் கலந்து கொண்டதுடன் ORPAS பரிந்துரைகளை பேரவையில் நடைமுறைப்படுத்துவதற்கான அறிக்கையை தயாரிப்பதில் ஈடுபட்டது.

- சுகாதார அமைச்சில் LINAC வசதிகளை நிறுவுதலுடன் தொடர்புடைய கதிரியக்க பாதுகாப்பு அம்சங்களை விவாதிக்கும் கூட்டத்தில் பேரவை கலந்துகொண்டது.

- நுகர்வோர் பொருட்களின் இறக்குமதி/ஏற்றுமதி பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடுவதற்காக கௌரவ அமைச்சர் லசந்த அழகியவன்ன அவர்களால் அழைக்கப்பட்ட கூட்டத்தில் பேரவை கலந்துகொண்டது.

- அரசு மருத்துவமனைகளில் கதிரியக்க பாதுகாப்பு அதிகாரிகளை நியமிப்பது தொடர்பாக சுகாதார அமைச்சில் சுகாதார அமைச்சின் செயலாளர் அழைத்த கூட்டத்தில் பேரவை கலந்து கொண்டது.

- பாதுகாப்புச் செயலாளரின் வேண்டுகோளுக்கு இணங்க, பேரவையின் பணிப்பாளர் நாயகம் அவர்கள் இலங்கையில் வகை I கதிர்வீச்சு மூலங்களுக்கான ஆன்-சைட் பாதுகாப்பு அமுலாக்கம் குறித்து பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகள் மற்றும் அதிமேதகு ஜனாதிபதிக்கு விளக்கமளித்தார்.

- சூரிய சக்தி, காற்றாலை மற்றும் நீர் மின் உற்பத்தி செயற்திட்டங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரால் அழைக்கப்பட்ட செயல்முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களில் பேரவை கலந்துகொண்டது.

- முதலீட்டு சபையின் (BOI) செயற்திட்டத்தின் கீழ் கதிரியக்க மருந்து ஆய்வகத்தை நிறுவுவது குறித்த கூட்டத்தில் BOI பிரதிநிதிகளுடன் இணைந்து பேரவை பங்கேற்றது.

- கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் "சைக்ளோட்ரான் செயற்திட்டத்தை நிறுவுதல்" பற்றிய கூட்டத்தில் பேரவை கலந்து கொண்டது.

நிகழ்நிலை அனுமதிப்பத்திரம் வழங்குதல் மற்றும் ஒப்புதல் முறைமைக்கான மென்பொருளை உருவாக்குதல், நிறுவுதல் மற்றும் சரிபார்த்தல்

மென்பொருள் முறைமையைப் பயன்படுத்தி அனுமதிப்பத்திரம் வழங்குதல் மற்றும் தொடர்புடைய ஒப்புதல்களை வழங்குவதற்காக மேற்குறிப்பிட்ட நிகழ்நிலை அனுமதிப்பத்திரம் வழங்குதல் மற்றும் ஒப்புதல் முறைமையை நிறுவதற்கு பேரவை ஏற்பாடுகளை செய்துள்ளது. இந்த நிகழ்நிலை முறையை அறிமுகப்படுத்துவதன் மூலம் பேரவையின் ஒழுங்குபடுத்தல் கட்டமைப்பு வினைத்திறனாகவும் மற்றும் பயனுறுதியாகவும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. அரசாங்கத்தின் போட்டி கேள்வி நடைமுறையின் மூலம் ஒரு கேள்விதாரர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். 2022 ஆம் ஆண்டில் இந்த முறைமையை நடைமுறைப்படுத்த பேரவை எதிர்பார்க்கிறது.

பேரவையின் ஊழியர்களுக்கான வினைத்திறன் காண் தடைப் பரீட்சை (EB)

ஆட்சேர்ப்பு திட்டத்திலுள்ள தேவைப்பாடுகளிற்கு அமைய 2021 ஆம் ஆண்டு ஜனவரி 27 ஆம் தேதி பேரவையின் ஊழியர்களுக்கான வினைத்திறன் காண் தடைப் பரீட்சையை நடத்துவதற்கு பேரவை ஏற்பாடுகளை செய்தது. பரீட்சைக்குத் தயாராவதற்குப் பொருத்தமான பாடங்கள் தொடர்பான அறிவைப் பெறுவதற்குப் பல்வேறு கோட்பாட்டு வகுப்புகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

அரசாங்க சுற்றறிக்கைகளுக்கு இணங்க நிர்வாக முறைமைகளை நிறுவுதல்

பேரவையின் நிர்வாக முறைமையை நிறுவுவதற்காக அரசாங்க சுற்றறிக்கைகளின் மூலம் வழங்கப்பட்ட தேவைப்பாடுகளிற்கு ஏற்ப பின்வரும் ஆவணங்களை பேரவை உருவாக்கியுள்ளது. 2022 ஆம் ஆண்டில் மேற்குறித்த ஆவணங்கள் பூரணப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

- பேரவையின் பிரசைகள் சாசனம் (அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 05/2008 படி)
- பேரவையின் மனித வள அபிவிருத்தி திட்டம் (அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 02/2008 படி)
- பேரவைக்கான நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான திட்டம் (அரசாங்க நிதிச் சுற்றறிக்கை 02/2017 இன் படி)

பேரவையின் அனுமதியைப் பெறாமல் கதிரியக்க பொருட்களுடன் அம்பாந்தோட்டை துறைமுகத்தில் நுழைந்த M/V BBC NAPLESS கப்பலுடன் தொடர்புடைய ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகள்.

M/V BBC NAPLESS என்ற கப்பல் 18 யுரேனியம் ஹெக்ஸாபுளோரைடு சிலிண்டர்கள் அடங்கிய 5 கதிரியக்க பொருட் பொதிகளுடன் பேரவையின் அனுமதிப்பத்திரம் பெறாமல் 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் 20 ஆம் திகதி ஹம்பாந்தோட்டை துறைமுகத்திற்குள் பிரவேசித்தது. 2014 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்திச் சட்டத்தின் 18வது பிரிவின்படி (சட்டம்) இலங்கைக்குள் கதிரியக்கப் பொருட்களைக் கொண்டு செல்வதற்கான உரிமத்தைப் பெறுவது சட்டப்பூர்வமான தேவையாகும். உரிமம் பெறுவது கப்பலின் உள்ளூர் முகவரின் பொறுப்பாகும். உரிமம் வழங்கப்பட்டவுடன், சட்டத்தின் பிரிவு 48 (1) இன் படி, கதிரியக்கப் பொருட்களைக் கொண்ட கப்பலை துறைமுகத்தில் பிரவேசிப்பதற்கான அனுமதிச் சான்றிதழை வழங்குவதற்கு பேரவை ஹார்பர் மாஸ்டருக்கு எழுத்துப்பூர்வமாக ஒப்புதல் அளிக்கிறது.

ஹம்பாந்தோட்டை துறைமுக நிர்வாகம் மற்றும் ஹார்பர் மாஸ்டர் ஆகியோர் ஆபத்தான பொருட்களுடன் கூடிய கப்பலை அம்பாந்தோட்டை துறைமுகத்தில் நிறுத்துவதற்கு அனுமதி வழங்கியுள்ளனர். ஹார்பர் மாஸ்டரிடமிருந்து பெறப்பட்ட தகவலின்படி, கப்பலின் உள்ளூர் முகவர் ஆபத்தான பொருட்களின் அறிவிப்பு படிவத்தில் கதிரியக்க பொருட்கள் இருப்பதாக அறிவிக்கவில்லை, எனவே, கப்பலை துறைமுகத்தில் பிரவேசிப்பதற்கு அவர் ஒப்புதல் அளித்துள்ளார்.

எவ்வாறாயினும், மேற்படி கப்பலில் கதிரியக்கப் பொருட்கள் இருப்பதாக ஹார்பர் மாஸ்டர் பேரவையின் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவித்துள்ளார். மேலும் கப்பலில் கதிரியக்கப் பொருட்கள் இருப்பதற்கான தகவலைப் பெற்று பேரவையின் பணிப்பாளர் நாயகம் உறுதிப்படுத்திக் கொண்டார்.

2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி பேரவையின் அனுமதியின்றி ஹம்பாந்தோட்டை துறைமுகத்திற்குள் நுழைந்த கதிரியக்க பொருட்கள் அடங்கிய கப்பலை அகற்றுமாறு பேரவையின் பணிப்பாளர் நாயகம் பணிப்புரை விடுத்துள்ளார்.

அதன்பின்னர், சூரிய, காற்றாலை மற்றும் நீர் மின் உற்பத்தித் திட்ட அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரின் அறிவுறுத்தலின் பேரில், பேரவையின் தலைவர், சூரிய, காற்றாலை மற்றும் நீர் மின் உற்பத்தி செயற்திட்டங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவை நியமித்திருந்ததுடன் இலங்கை கடற்படை மேற்படி சம்பவம் குறித்து விசாரணை நடத்துதல் வேண்டும். இதுபோன்ற சம்பவத்தில் தொடர்புடைய அனைத்து தரப்பினரையும் விசாரித்து, நேர்காணல் செய்த பின்னர், எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாமல் இருப்பதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினர்களிற்கு இக்குழு பல பரிந்துரைகளை செய்துள்ளது.

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடைதல் மீதான செயலாற்றல்

இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

தொடர் இல.	நிலைபேறான அபிவிருத்தி திட்டத்தின் இலக்கம் மற்றும் இலக்குகள்	இலக்கு	சாதனை குறிக்காட்டிகள்	இதுவரையான அடைவுகளின் முன்னேற்றம்		
				0% - 49%	50% - 74%	75% - 100%
01	03. ஆரோக்கியமான வாழ்க்கை மற்றும் நல்வாழ்வு	இலங்கையில் கதிர் வீச்சைப் பயன்படுத்தும் போது ஏற்படும் கதிர்வீச்சு அனர்த்தங்களிலிருந்து நோயாளிகள், பொதுமக்கள் மற்றும் கதிரியக்க ஊழியர்களைப் பாதுகாத்தல்	இந்த நோக்கத்திற்காக, பேரவை கதிர்வீச்சு கருவிகள் மற்றும் கதிரியக்க மூலங்கள் உட்பட அனைத்து கதிர்வீச்சு வசதிகளுக்கும் உரிமங்களை வழங்கியதுடன் களப் பரிசோதனைகளை மேற்கொண்டு மூலங்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக அதிக கதிரியக்க மூலங்களிற்கு பாதுகாப்பை வழங்கியது. 2021 ஆண்டிற்கான குறிகாட்டிகள் • வழங்கப்பட்ட உரிமங்களின் எண்ணிக்கை = 421 • மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் எண்ணிக்கை = 164 • மூலங்களின் பாதுகாப்பிற்காக சரிபார்க்கப்பட்ட இடங்கள் = 13			✓
02	04. தரமான கல்வி	கதிர்வீச்சுப் பாதுகாப்புக்காக அனைத்து கதிர் வீச்சுத் தொழிலாளர்கள் மற்றும் கதிர்வீச்சு பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சியளித்தல் மற்றும் 2023 முதல் நடத்தப்படும் தேர்வில் தேர்ச்சி பெறுபவர்களுக்கு மட்டுமே உரிமம் வழங்குதல். பேரவையின் பயிற்சிக் கொள்கையின்படி பேரவையின் அதிகாரிகளுக்கு பயிற்சி அளித்தல்.	2021 ஆம் ஆண்டில் தரமான கல்வியின் கீழ் 02 செயலமர்வுகள் மூலம் பேரவையின் விஞ்ஞான உத்தியோகத்தர்கள் மற்றும் ஆர்வமுடைய தரப்பினர்கள் உள்ளிட்ட 31 பங்கேற்பாளர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன. 02 பேருக்கு சர்வதேச பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. பேரவையின் விஞ்ஞான பிரிவுகளில் இணைக்கப்பட்டுள்ள அதிகாரிகள் மற்றும் அதே பிரிவைச் சேர்ந்த 18 அதிகாரிகள் 160 சர்வதேச வலைப்பதிவுகள், ஆன்லைன் அமைப்பு மூலம் மெய்நிகர் சந்திப்புகளில் பங்கேற்றனர். கவுன்சிலின் மனிதவள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 10 பணியாளர்களுக்கு உள்நாட்டு ஆன்-லைன் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.		✓	

03	11. நிலையான நகரங்கள் மற்றும் சமூகங்கள்	கதிர்வீச்சு அபாயங்களிலிருந்து சுற்றுச்சூழலைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்தல்	கதிர்வீச்சு அபாயங்களிலிருந்து சுற்றுச்சூழலையும் சமூகங்களையும் பாதுகாப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட கதிர்வீச்சு அறைகளின் திட்டங்களுக்கான ஒப்புதல் செயல்முறை. அயனியாக்கும் கதிர்வீச்சைப் பயன்படுத்தும் அனைத்து நிறுவனங்களும் இயந்திரங்களை நிறுவுவதற்கு முன்பு பேரவையால் அவற்றின் திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டு இயந்திரங்களைப் பயன்படுத்த உரிமம் பெற்றிருக்க வேண்டும். இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் அனைத்து பால் உணவுகளும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு, இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் பால் மாவை சந்தைக்கு வெளியிட அனுமதி பெற்றிருக்க வேண்டும். · • வழங்கப்பட்ட உரிமங்களின் எண்ணிக்கை = 421 • அனுமதிக்கப்பட்ட திட்டங்களின் எண்ணிக்கை = 99 • இறக்குமதி செய்யப்பட்ட பால் மாவிற்கு வழங்கப்பட்ட அனுமதிகளின் எண்ணிக்கை = 919			✓
04	15. நிலத்தின் மீது வாழ்க்கை	கதிரியக்க மூலங்க ளின் உரிமக் காலத் திற்கு ஏற்ப எதிர்வரும் ஆண்டுகளில் ஒழுங்கு முறை ஆய்வுகளை மேற்கொள்ளவும் தேசிய அணு அல்லது கதிரியக்க பேரிடர் முகாமைத்துவ திட்டத்தின் செயல்பா களை செயல்படுத்துதல்	உரிமக் காலத்திற்கு ஏற்ப பொது மற்றும் தனியார் துறைகளில் கதிர்வீச்சு மூலங்களில் சுமார் 68 % ஒழுங்குமுறை ஆய்வுகளை நடத்தியுள்ளது. அணுசக்தி அல்லது கதிரியக்க பேரிடர் முகாமைத்துவ திட்டத்தின் படி செயல்பாடுகளைச் செயல்படுத்துவதற்காக சர்வதேச அணுசக்தி முகவர் நிறுவனத்திடம் (IAEA) திட்ட முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டது. 2022-2023 திட்ட சுழற்சிக்காக இந்த மேற்கூறிய திட்டம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. திட்டத்தின் கீழ், குழு உறுப்பினர்களுக்கு (ஒழுங்குமுறை பணியாளர்கள் மற்றும் பிற பங்குதாரர் நிறுவனங்கள்) பல கூட்டுறவு பயிற்சிகள் மற்றும் அறிவியல் வருகைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. சில அவசரகால பதிலளிப்பு உபகரணங்களை வாங்குதல் மற்றும் அவசரகால தயார்நிலை ஆவணங்களை உருவாக்குதல் மற்றும் தேசிய பயிற்சி வகுப்புகளை நடத்துவதற்கான பல நிபுணர் பணிகளும் IAEA ஆல் அங்கீகரிக்கப்பட்டது. இந்த முன்மொழிவு தேசிய திட்டமிடல் துறைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அதன் ஒப்புதலும் வழங்கப்பட்டது.		✓	

02/2017 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் தேவைப்பாடாக காணப்படுகின்ற, பேரவைக்கான நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான திட்டத்தை தயாரிப்பதற்காக பேரவையின் பணிப்பாளர் நாயகத்தால் குழுவொன்று நியமிக்கப்பட்டது. இக்குழு ஏற்கனவே வரைவு ஆவணத்தை தயாரித்துள்ளது.இந்த ஆவணத்தை இறுதி செய்து 2022 ஆம் ஆண்டில் பேரவைக்கான நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை மேலும் செயல்படுத்த பேரவை எதிர்பார்க்கின்றது.

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதிலுள்ள சாதனைகள் மற்றும் சவால்கள்:

2021 க்குள் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு பேரவை பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. மேலே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அடையாளம் காணப்பட்ட இலக்குகளை அடைவதற்காக, பல வெற்றிகளையும் சவால்களையும் இந்த நடவடிக்கைகள் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. மேலும், கோவிட் - 19 தொற்றுநோய் காரணமாக, 2021 ஆம் ஆண்டில் பெரும்பாலான காலத்திற்கு அலுவலகம் மூடப்பட்டிருந்ததால், அந்தச் செயல்பாடுகளைச் சரியாக பூரணப்படுத்த முடிந்திருக்கவில்லை.

இருப்பினும், இப்பணியில் காட்டிய அர்ப்பணிப்பு மற்றும் அதிகபட்ச முயற்சி காரணமாக பேரவைக்கு அதில் சுமார் 80% இலக்குகளை அடைய முடிந்தது.

அதன்படி, சாதனைகளை பின்வருமாறு காட்டலாம்.

1. வருடத்தில் 421 உரிமங்கள் மற்றும் 606 இறக்குமதி மற்றும் ஏற்றுமதி அனுமதிகளை வழங்கியதன் மூலம் நகரங்கள் மற்றும் சமூகங்களின் பாதுகாப்பு தற்போதைய நிலைக்கு மேம்படுத்தப்பட்டுள்ளது.

2. தரமான கல்வியின் கீழ் 02 செயலமர்வுகளின் மூலம் பேரவையின் விஞ்ஞான பணியாளர்கள் மற்றும் ஆர்வமுள்ள தரப்பினர்கள் உட்பட 31 பங்கேற்பாளர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன. மேலும், விஞ்ஞானப் பிரிவைச் சேர்ந்த 18 அதிகாரிகள் 160 சர்வதேச வலைதளங்கள், ஆன்லைன் வலையமைப்பு மூலம் மெய்நிகர் சந்திப்புகளில் பங்கேற்றனர்.

3. நிலம் மற்றும் வாழ்வியலின் கீழ் ஒழுங்குபடுத்தல் களப் பரிசோதனைகளாக இந்த ஆண்டில் 164 இடங்களில் கதிர்வீச்சு வசதிகள் ஆய்வு செய்யப்பட்டன.

4. ஆரோக்கியமான வாழ்க்கை மற்றும் நல்வாழ்வு என்பதன் கீழ் உணவுப் பரிசோதனைக்கான 919 சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், நிலைபேறான அபிவிருத்திக்காக பேரவை எதிர்நோக்கும் சவால்கள் பின்வருமாறு அடையாளம் காணப்பட்டுள்ளன.

அ. போதிய விஞ்ஞான மற்றும் இதர பணியாளர்கள் பற்றாக்குறை.
ஆ. சரியான கட்டிட வசதிகள் இல்லாமை.
இ. போதிய அலுவலக மற்றும் விஞ்ஞான உபகரணங்கள் இல்லாமை.

அதற்கிணங்க, நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை உகந்த வகையில் எட்டுவதற்கு எதிர்வரும் ஆண்டில் கடுமையாக உழைக்க பேரவை எதிர்பார்த்துள்ளது.

மனித வள அபிவிருத்தி

பேரவையின் மனித வள விவரம்

ஊழியர்களின் எண்ணிக்கை

	அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்கள்	உள்ளபடியான ஊழியர்கள்	வெற்றிடங்கள்
சிரேஷ்ட நிலை	22	21	01
மூன்றாம் நிலை	05	02	03
இரண்டாம் நிலை	10	08	02
ஆரம்ப நிலை	08	05	03
ஒப்பந்தம் / அமைய	00	00	00
	45	**36**	**09**

மனித வள அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

ஒழுங்குபடுத்தல் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்காக உரிமம் பெற்ற வசதிகள் மற்றும் ஒழுங்குபடுத்தல் ஆணையம் ஆகிய இரண்டிலும் பயிற்சி பெற்ற மற்றும் திறமையான நபர்கள் இருப்பது அவசியம். எந்தவொரு நிறுவனத்தின் வெற்றியும் அதன் செயல்பாடுகளில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் நிபுணத்துவத்தைப் பொறுத்தே தங்கியுள்ளது. மேற்கூறிய நோக்கங்களுடன் இணைந்ததாக உரிமம் பெற்ற வசதிகளின் கதிர்வீச்சு தொழிலாளர்கள் மற்றும் கதிர்வீச்சு பாதுகாப்பு மற்றும் அணுசக்தி பாதுகாப்பு பற்றிய அவர்களின் அறிவை மேம்படுத்துவதற்காக 03 பயிற்சி வகுப்புகளை ஆண்டு முழுவதும் நடத்த திட்டமிடப்பட்டது.

மீளாய்வாண்டில் நாட்டில் ஏற்பட்டிருந்த கோவிட்-19 தொற்றுநோய் சூழ்நிலை காரணமாக, ஆர்வமுள்ள தரப்பினர்களிற்காக திட்டமிட்டபடி உள்நாட்டு பயிற்சிகளை ஏற்பாடு செய்ய முடிந்திருக்கவில்லை. இருப்பினும், இரண்டு பயிற்சி வகுப்புகள் பௌதீக ரீதியாக நடத்தப்பட்டதுடன் ஒரு பயிற்சி வகுப்பு ஒத்திவைக்கப்பட்டது.

அத்துடன், பேரவையின் அதிகாரிகள் ஆண்டு முழுவதும் உள்நாட்டு மற்றும் சர்வதேச அளவில் நடத்தப்பட்ட பின்வரும் பயிற்சிகள் / கூட்டங்களில் கலந்து கொண்டனர்.

உலகளாவிய தொற்றுநோய் சூழ்நிலை காரணமாக, பேரவையின் அதிகாரிகள் IAEA மற்றும் பிற சர்வதேச அமைப்புகளால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆன்லைன் வெபினார் பயிற்சி வகுப்புகள் / கூட்டங்களில் பங்கேற்றுள்ளனர்.

பயிற்சித் திட்டங்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

ஆர்வமுள்ள தரப்பினர்களிற்காக பேரவையால் ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய பயிற்சி பாடநெறிகள்

இல.	தலைப்பு	இடம்	பட்டியலிட்ட திகதி	பங்குபற்றியோர் எண்ணிக்கை	குறிப்பு
01	கைத்தொழில் வசதிகளின் தொழில்புரிகின்ற கதிர்வீச்சு பாதுகாப்பு உத்தியோகத்தர்களிற்கான கதிர்வீச்சு பாதுகாப்பு மீதான தேசிய பயிற்சிப் பாடநெறி	இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை	2021 யூன் 21 – 22	30	கோவிட் 19 நோய்த் தொற்று காரணமாக ஒத்திவைக்கப்பட்டது.
02	அன்சல் லங்கா (பிரைவட்) லிமிடட் இற்கு புதிதாகச் சேர்க்கப்பட்ட பொறியியல் உதவியாளர்களிற்கான கதிர்வீச்சுப் பாதுகாப்பு பயிற்சி மற்றும் இரேடியேடரை இயக்குதல் தகைமை பரிசோதனை	இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை	2021 நவம்பர் 15 - 17	04	புதிதாக ஆட்சேர்க்கப்பட்ட 03 விஞ்ஞான உத்தியோகத்தர்கள் உள்ளிட்டோர்களிற்காக பௌதீக ரீதியாக நடாத்தப்பட்டது.
03	தனியார் வைத்தியசாலைகளில் வேலை செய்கின்ற கதிரியக்க தொழில்நுட்ப வியலாளர்களிற்கான கதிர்வீச்சு பாதுகாப்பு மற்றும் நோயறிதல் கதிரியக்கத்தில் தரத்தை உறுதிப்படுத்துதல் மீதான தேசிய பயிற்சி பாடநெறி	இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை	2021 திசெம்பர் 13 – 17	27	பேரவையின் 04 விஞ்ஞான உத்தியோகத்தர்கள் உள்ளிட்டோர் களிற்காக பௌதீக ரீதியாக நடாத்தப்பட்டது. (2020 ஒக்தோபர் 05 – 09 வரை திட்டமிடப்பட்டிருந்த போதிலும் கோவிட் 19 நோய்த் தொற்று காரணமாக ஒத்திவைக்கப் பட்டது)

பேரவையின் பதவியணியினர் பங்குபற்றிய திறன் அபிவிருத்தி மீதான உள்நாட்டு பயிற்சி நெறிகள் (அனைத்து பயிற்சி நெறிகளும் நிகழ்நிலை மூலம் நடாத்தப்பட்டது).

உத்தியோகத்தர் பெயர்	நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர்	காலம்	ஏற்பாட்டாளர்	அனுசரணை
திரு. ரீ.எச்.எஸ். சாந்த பணிப்பாளர்	கொள்வனவு வழிகாட்டல்கள், திட்டமிடல் மற்றும் பிரமாணங்கள் மீதான செயலமர்வு	2021 யூன் 28,29 மற்றும் 30	நிதிக் கற்கைகளிற்கான மிலோதா கல்விக்கூடம்	இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை
திருமதி சீ.எஸ். ஹேரத் பிரதிப் பணிப்பாளர்	மெய்மையாய்வுச் சபை, இழப்புகள் மற்றும் பதிவழிப்புகள் மீதான செயலமர்வு	2021 யூன் 23 மற்றும் 25	நிதிக் கற்கைகளிற்கான மிலோதா கல்விக்கூடம்	இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை
திருமதி ஏ.ஐ. துனுசிங்ஹ நிர்வாக உத்தியோகத்தர்	தனிப்பட்ட கோவைகள் முகாமைத்துவம் மீதான செயலமர்வு	2021 யூன் 21, 22 மற்றும் 23	நிதிக் கற்கைகளிற்கான மிலோதா கல்விக்கூடம்	இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை
திருமதி என்.என். பதுகே நிதி மற்றும் வழங்கல் உத்தியோகத்தர்	கொள்வனவு வழிகாட்டல்கள், திட்டமிடல் மற்றும் பிரமாணங்கள் மீதான செயலமர்வு	2021 யூன் 28,29 மற்றும் 30	நிதிக் கற்கைகளிற்கான மிலோதா கல்விக்கூடம்	இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை
திருமதி பி.டி.என்.எம். குமாரி கணக்காளர்	அரசாங்க சம்பளப்பட்டியல் முறை மீதான செயலமர்வு	2021 யூன் 14, 16 மற்றும் 18	நிதிக் கற்கைகளிற்கான மிலோதா கல்விக்கூடம்	இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை

உத்தியோகத்தர் பெயர்	நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர்	காலம்	ஏற்பாட்டாளர்	அனுசரணை
திருமதி சீ. லவன்தி முகாமைத்துவ உதவியாளர்	அலுவலக வங்கிக் கணக்குகளை பராமரித்தல் மீதான செயலமர்வு	2021 மார்ச் 25	திறன் அபிவிருத்தி நிதியக் கம்பனி லிமிட்ட்	இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை
செல்வி ஆர்.பி.எம்.சந்துனி முகாமைத்துவ உதவியாளர்	தனிப்பட்ட கோவைகள் முகாமைத்துவம் மீதான செயலமர்வு	2021 யூன் 21, 22 மற்றும் 23	நிதிக் கற்கைகளிற்கான மிலோதா கல்விக்கூடம்	இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை
திருமதி பி.டி.ஐ ரூபசிங்ஹ முகாமைத்துவ உதவியாளர்	கொள்வனவு வழிகாட்டல்கள், திட்டமிடல் மற்றும் பிரமாணங்கள் மீதான செயலமர்வு	2021 யூன் 28,29 மற்றும் 30	நிதிக் கற்கைகளிற்கான மிலோதா கல்விக்கூடம்	இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை
திரு. ஐ.என்.டி. இலங்கசிங்ஹ முகாமைத்துவ உதவியாளர்	அரசாங்க சம்பளப்பட்டியல் முறை மீதான செயலமர்வு	2021 யூன் 14, 16 மற்றும் 18	நிதிக் கற்கைகளிற்கான மிலோதா கல்விக்கூடம்	இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை
திரு. பி.டபிள்யூ.எஸ்.பி. வெலிகல முகாமைத்துவ உதவியாளா	மெய்மையாய்வுச் சபை, இழப்புகள் மற்றும் பதிவழிப்புகள் மீதான செயலமர்வு	2021 யூன் 23 மற்றும் 25	நிதிக் கற்கைகளிற்கான மிலோதா கல்விக்கூடம்	இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை

பேரவையின் உத்தியோகத்தர்கள் பங்குபற்றிய வெளிநாட்டுக் கருத்தரங்குகள்/ பயிற்சி நிகழ்ச்சிகள் / செயலமர்வுகள்/ கூட்டங்கள்/ மாநாடுகள்:

உத்தியோகத்தரின் பெயர்	நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர்	காலம்	நாடு	அனுசரணை
திரு. எச்.எல். அனில் ரன்ஜித் பணிப்பாளர் நாயகம்	அணுப் பொருட்களின் பௌதீக பாதுகாப்பு உடன்பாட்டிற்கான திருத்தங்களை உலகலாவிய ரீதியில் மேம்படுத்துதல் மீதான IAEA-UNODC கருத்தரங்கு மற்றும் அணு பயங்கரவாதச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கான சர்வதேச மாநாடு	2021.11.11 முதல் 2021 12.11 வரை	வியானா, ஒஸ்ட்ரியா	சர்வதேச அணுசக்தி முகவர் நிலையம்
திரு. ரீ.எச்.எஸ். சாந்த பணிப்பாளர்	அணுப் பொருட்களின் பௌதீக பாதுகாப்பு உடன்பாட்டிற்கான திருத்தங்களை உலகலாவிய ரீதியில் மேம்படுத்துதல் மீதான IAEA-UNODC கருத்தரங்கு மற்றும் அணு பயங்கரவாதச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கான சர்வதேச மாநாடு	2021.11.11 முதல் 2021 12.11 வரை	வியானா, ஒஸ்ட்ரியா	சர்வதேச அணுசக்தி முகவர் நிலையம்

2021 இல் பேரவையின் உத்தியோகத்தர்கள் பங்குபற்றிய சர்வதேச இணையதள கருத்தரங்கள் மற்றும் கூட்டங்களின் எண்ணிக்கை

உத்தியோகத்தரின் பெயர்	**பங்குபற்றிய கருத்தரங்குகள் மற்றும் கூட்டங்களின் எண்ணிக்கை**
ரீ.எச்.எஸ். சாந்தா	**13**
யூ.டபிள்யூ.கே.எச். டி சில்வா	**22**
கே.கே.பி.ஐ.கே. கடதுன்ன	**13**
கே.என்.ஆர் .பெர்னாண்டோ	**07**
கே.எஸ்.எஸ். குமார	**03**
சீ.எஸ் ஹேரத்	**11**
கே.ஜி.கே.யு. கமகே	**19**
என்.பி.என். கருணாரத்ன	**16**
எச்.ஜே. பிரேமகுமார	**04**
டி.டபிள்யூ.எம்.ஈ.ரீ. திசாநாயக்க	**05**
டபிள்யு.டபிள்யு.ஆர்.எல். மெடிஸ்	**05**
என்.பி.டபிள்யு.டி.டி.டி. ரோட்ரிகோ	**05**
ஏ.பி மதுஷங்க	**06**
எல்.எச்.ஜே. குமார	**10**
டபிள்யூஎம்டிஎம் பியரத்னா	**12**
ஏ.பி.குமார	**02**
எஸ்.ஜி நாணயக்கார	**05**
எஸ்.டி.வி. குலதிலக	**02**

02/2008 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் தேவைப்பாடாக காணப்படுகின்ற, பேரவைக்கான மனித வள அபிவிருத்தித் திட்டத்தை தயாரிப்பதற்காக பேரவையின் பணிப்பாளர் நாயகத்தால் குழுவொன்று நியமிக்கப்பட்டது. இக்குழு ஏற்கனவே வரைவு ஆவணத்தை தயாரித்துள்ளது. இந்த ஆவணத்தை இறுதி செய்து 2022 ஆம் ஆண்டில் பேரவையின் மனித வள அபிவிருத்தியை மேலும் மேம்படுத்த பேரவை எதிர்பார்க்கின்றது.

புதிய ஆட்சேர்ப்புத் திட்டத்தை தயாரித்தல் (SOR)

நாட்டின் ஒழுங்குபடுத்தல் அதிகாரி என்ற வகையில் கதிர்வீச்சு வசதிகளிற்கு உரிமம் வழங்கி அவற்றை பரிசோதித்தல், கதிரியக்க பொருட்களின் இறக்குமதி, ஏற்றுமதி மற்றும் போக்குவரத்து கட்டுப்பாடு, கதிரியக்க கழிவுகள் மற்றும் பயன்படுத்தப்படாத கதிரியக்க மூலங்களின் முகாமைத்துவம், கதிரியக்க பொருட்களின் பௌதீக பாதுகாப்பை உறுதி செய்தல், அணுசக்தி பாதுகாப்பு, பாதுகாப்பு, பாதுகாப்பு மற்றும் சிவில் பொறுப்பு ஆகியவற்றில் சாத்தியமான அணு அல்லது கதிரியக்க அவசரநிலைகள் மற்றும் சர்வதேச நிறுவனங்களுக்கு பதிலளிக்கும் திறன்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் தொடர்புடைய பங்குதாரர்களுடன் ஒருங்கிணைப்புச் செய்தல் என்பன பேரவையின் ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகளாகும்.

.03/23	ஊழியர் நலன்புரி	7,000.00		8,650.00		(1,650.00)	வருமானம் அதிகரித்தமை
.03/24	முத்திரை வரி, என்பீரீ மற்றும் வருமான வரி	114,000.00		76,997.00		37,003.00	
.05/02	நானாவிதம்	1,950,000.00		1,950,000.00		-	
.03/17	கடன்களும் முற்பணமும்	5,000.00		0.00		5,000.00	
.03/31	பாதுகாப்பு	240,000.00		0.00		240,000.00	

						-	
	ஏனைய கொடுப்பனவுகள்		2,022,000		1,471,350.09	-	
.01/01	சபை அங்கத்தவர்கள் கொடுப்பனவு	468,000.00		402,000.00		66,000.00	
.01/02	சபை அங்கத்தவர்கள் பிரயாணம்	218,000.00		198,000.00		20,000.00	
.01/03	சபை அங்கத்தவர்கள் உபசரிப்பு	80,000.00		28,109.00		51,891.00	
.01/04	ஊழியர் உள்நாட்டு பயிற்சி நிகழ்ச்சிகள்	75,000.00		45,750.00		29,250.00	
.01/05	வருகைதந்த விஞ்ஞானிகளிற்கான பிரயாணச் செலவினம்	50,000.00		8,635.00		41,365.00	
.01/06	பயிற்சி நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள், செயலமர்வுகள்	369,000.00		177,021.16		191,978.84	
.01/07	களப்பரிசோதனை கட்டணங்கள்	20,000.00		0.00		20,000.00	
.01/08	கதிர்வீச்சு தொழிலாளர்களிற்கான மருத்துவப் பரிசோதனை	600,000.00		484,625.00		115,375.00	
.02/12	ஓய்வூதிய விடுமுறைக் கொடுப்பனவு	140,000.00		126,351.33		13,648.67	
.03/21	வங்கிக் கட்டணம் / வரவு வரி	2,000.00		858.60		1,141.40	
	மொத்த மீண்டுவரும் செலவினம்		**74,200,000**		**69,906,041.38**		

1 முதல் 26 வரையான பக்கங்களிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் என்பன இந்த நிதிக்கூற்றுக்களின் பகுதியாகும்.
இந்த நிதிக்கூற்றுக்கள் நிதிச் சட்டத்தின் தேவைப்பாடுகளுடன் இணங்கி ஒழுகியுள்ளதாக இதன் கீழ் கையொப்பமிட்டுள்ள இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையின் கணக்காளர் மற்றும் பணிப்பாளர் நாயகமாகிய நாங்கள் கூட்டாக சான்றுறுதிப்படுத்துகின்றோம்.

கணக்காளர்

பணிப்பாளர் நாயகம்

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரித்துச் சமர்ப்பிப்பதற்கு பணிப்பாளர் சபை பொறுப்புடையதாகும். கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகள், இந்த நிதிக்கூற்றுக்களின் ஒரு பகுதியாகும். இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையின் பணிப்பாளர் சபையின் சார்பில் அங்கீகரித்துக் கையொப்பமிடுகின்றோம்.

தலைவர்

சபை உறுப்பினர்

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය
எனது இல.
My No.

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date

ஈஎன்ஆர்/பீ/எஸ்எல்ஏஆர்சீ/எ.ப்ஏ/2021 2022 ஒக்தோபர் 31

தலைவர்
இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை

இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியானதும் பிரமாண ரீதியானதுமான தேவைப்பாடுகள் மீது 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

மேற்படி அறிக்கை மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் என்பன இத்துடன் அனுப்பிவைக்கப்படுகின்றன.

ஒப்பம்: டபிள்யூ.பி.சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

பிரதிகள்:
1. செயலாளர், புதுப்பிக்கத்தக்க மின்வலுச் செயற்திட்டங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு – தகவலுக்காக
2. செயலாளர், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு – தகவலுக்காக

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය
எனது இல.
My No.

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date

ஈஎன்ஆர்/பீ/எஸ்எல்ஏஈஆர்சீ/எ.ஃப்ஏ/2021 2022 ஒக்தோபர் 31

தலைவர்
இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை

இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியானதும் பிரமாண ரீதியானதுமான தேவைப்பாடுகள் மீது 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையின் (பேரவை) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினது பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரமான எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, பேரவையின் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சலானது இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையினை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 07 இன் படி, ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் ஒரு விடயத்தை மீள மதிப்பிடுகையில், குறித்த ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் வர்க்கம் முழுவது மாக மீள விலைமதிக்கப்படுதல் வேண்டிய போதிலும், அதற்கு முரணாக பேரவையால் முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட ரூபா 20,107,066 கிரயமுடைய தேர்ந்தெடுக் கப்பட்ட சொத்துக்கள் மாத்திரமே மீள விலைமதிக்கப்பட்டு ரூபா 4,342,620 விலைமதிப்பீட்டு மிகை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இல. 07 இற்கு இணங்க ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை மீள் மதிப்பீடு செய்கையில் சொத்துக்களின் நியாய மான பெறுமதிகளை மதிப்பிடுவதற்காக ஒரு சுயாதீன மதிப்பீட்டாளர் பயன்படுத்தப்பட்டமை, பயன்படுத்தப் படும் முறைகள், குறிப்பிடத்தக்க அனுமானங்கள் மற்றும் நியாயமான மதிப்பீடுகள் செயற்பாட்டிலுள்ள சந்தையில் அவதானிக்கக்கூடிய விலைகளை நேரடியாகக் குறிப்பிட்டு சமீபத்திய சந்தை கொடுக்கல் வாங்கல்கள் அல்லது பிற மதிப்பீட்டு நுட்பங்களின் அடிப்படையில் சொத்துக்கள் அல்லது எந்த அளவிற்கு நிர்ணயம் செய்யப்பட்டமை என்பது தொடர்பில் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். இருப்பினும், பேரவையால் மீளாய்வாண்டில் முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட ரூபா 13,207,957 கிரயமுடைய 50 விஞ்ஞான உபகரணங்கள், ரூபா 622,800 தொகையான 6 மேசைக் கணினிகள் மற்றும் ரூபா 112,500 கிரயமுடைய மடிக்கணினிகள் முறையே ரூபா 414,425, ரூபா 14,160 மற்றும் ரூபா 2,870 ஆக மீள விலைமதிக்கப்பட் டிருந்ததுடன், இவ்வாறு மீள விலைமதிக்கையில் மேற்படி நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், சுயாதீன மதிப்பீட்டாளர் ஒருவர் நியமிக்கப்படாததால், மீள்மதிப்பீட்டு பெறுமதிகள் தொடர்பாக கணக்காய்வில் திருப்தி அடைய முடியவில்லை:-

(இ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 07 இன் படி, ஒரு சொத்து பயன்படுத்தக்கூடிய நிலைக்கு உருவாக்கப்பட்ட பின்னர், நிலையான சொத்தாக அங்கீகரிக்கப்பட வேண்டும். இருப்பினும், 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்த முடியுமான நிலைக்கு கொண்டுவரப்படாத ஒரு விஞ்ஞானக் கருவியை இறக்குமதி செய்வதற்காக செலுத்தப்பட்ட ரூபா 1,613,206 தொகை நிலையான சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டு, அதற்காக ரூபா 2,210 தேய்மான ஏற்பாடும் செய்யப்பட்டிருந்தது.

(ஈ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 07 இன் படி, ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் ஒரு உருப்படியின் முன்கொண்டு செல்லும் தொகையானது, அது விற்கப்படு கையில் அல்லது அகற்றப்படுகையில் அதிலிருந்தான எதிர்கால பொருளாதார நன்மைகள் அல்லது சேவை வாய்ப்புகள் எதிர்பார்க்கப்படாத போது மட்டுமே புத்தகங்களிலிருந்து அகற்றப்பட முடியுமான போதிலும், அதற்கு முரணாக, ஒரு கண்காட்சிப் பொருளாக பயன்படுத்தப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த ரூபா 2,014,303 கிரயமான விஞ்ஞான உபகரண மொன்று மீளாய்வாண்டில் நிலையான சொத்துக்கள் பதிவேட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. அத்துடன், முன்னைய ஆண்டுகளில் நிலையான சொத்துக்கள் பதிவேட்டிலிருந்து கண்காட்சிப் பொருட்களாக பயன்படு த்தப்பட்டிருந்த 9 விஞ்ஞானக் கருவிகள் நீக்கப்பட்டிருந்தன. மேலும், முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட ரூபா 1,117,183 கிரயமான 4 விஞ்ஞான உபகரணங்களும் நிலையான சொத்து பதிவேட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்தன. ஆனால் அவை எந்த அடிப்படையில் அகற்றப்பட்டன என்பது வெளிப்படுத்தப்படவில்லை:-

(உ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இல. 07 இன் படி, சொத்துக்களுக்குப் பயன்படுத்தப்படும் தேய்மான முறையானது குறைந்தபட்சம் ஒவ்வொரு வருடாந்த அறிக்கையிடல் தேதியிலும் மீளாய்வு செய்யப்பட வேண்டுமென்பதுடன் சொத்தில் உள்ளடங்கியுள்ள எதிர்கால பொருளாதார நன்மைகள் அல்லது சேவையின் நுகர்வு முறையில் குறிப்பிடத்தக்க மாற்றத்திற்கான சாத்தியக்கூறுகள் ஏற்பட்டிருந்தால் அந்த மாற்றமேற்பட்ட வடிவத்தை வெளிப்படுத்தும் விதத்தில் தேய்விடல் முறை மாற்றப்பட்டு, அந்த மாற்றங்கள் கணக்கீட்டு மதிப்பீட்டின் ஒரு மாற்றமாக கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும், பேரவையால் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை:-

(ஊ) மீளாய்வாண்டில், பேரவைக்கு கிடைத்திருந்த ரூபா 6,278,200 மூலதன மானியங்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 11க்கு இணங்க வருடத்திற்கான வருமானமாக இனங்கா ணப்பட்டு கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை:-

(எ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 20 இன் படி, அருவச் சொத்துகளாக கணக்கிடப்பட வேண்டிய ரூபா 708,958 கிரயமுடைய கணினி மென்பொருளானது அருவச் சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை:-

(ஏ) 2015 ஆம் ஆண்டில் இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை நிறுவப்பட்ட போது, அணுசக்தி அதிகார சபையிடமிருந்து ரூபா 14,044,902 சொத்துக்களும் ரூபா 5,414,755 பொறுப்புகளும் ஒப்படைக்கப்பட்டிருந்தன. அதன்படி, அரசிடமிருந்து பேரவைக்கு கிடைத்த நிகர மூலதன மானியம் ரூபா 8,630,147 என அந்த ஆண்டில் இனங் காணப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இந்த மானியத்திற்கு எதிரான வருடாந்த வருமான அங்கீகாரம் (பெறப்பட்ட மானியத்தின் காலத்தேய்மானம்) மானியத்தின் மொத்த பெறுமதியை விட அதிகமாக செய்யப்பட்டுள்ளதால், 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் அணுசக்தி அதிகாரசபைக்குரிய திரண்ட நிதியின் பெறுமதி ரூபா 3,812,121 வரவு மீதியாகக் காணப்பட்டது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க நான் கணக்காய்வை மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதனை முன்னிட்டு என்னால் பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானதும் பொருத்தமானதும் என்பது எனது நம்பிக்கையாகும்.

1.3 பேரவையின் 2021 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்படும் ஏனைய தகவல்கள்

இந்தக் கணக்காய்வு அறிக்கையின் திகதிக்குப் பின்னர் எனக்கு வழங்கப்படுவதற்கு எதிர்பார்க்கின்ற பேரவையின் 2021 ஆம் ஆண்டு அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள போதிலும், இக்கணக்காய்வு அறிக்கைத் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக் கொண்ட நிதிக்கூற்றுக்கள் மற்றும் எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள், ஏனைய தகவல்கள் என பொருள்படும். இவ்வாறான ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

நிதிக்கூற்றுக்கள் மீதான எனது அபிப்பிராயம் ஏனைய தகவல்களை உள்ளடக்கியிருக்காததுடன் நான் அவை மீது எவ்வகையிலும் சான்றுப்படுத்தலோ அல்லது அபிப்பிராயமோ வெளிப்படுத்தவில்லை.

நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கணக்காய்வு தொடர்பாக, எனது பொறுப்பானது மேலே இனங்காணப்பட்ட ஏனைய தகவல்களை *பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கையில்* வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்யும் போது ஏனைய தகவல்களை நிதிக்கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின் போது ஏனைய வகையில் பெற்றுக் கொள்ளப்பட்ட எனது அறிவின் பிரகாரம் பொருண்மையாக பொருத்தமற்றுள்ளதா என்பதனை கவனித்துப் பார்ப்பதாகும்.

பேரவையின் 2021 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையை நான் வாசிக்கையில் அதில் பொருண்மையான பிழையாகக் காட்டுதல் உள்ளது என முடிவுக்கு வந்தால் சரிசெய்வதற்காக நிருவகிக்கின்ற தரப்பினர்கக்கு இவ்விடயங்களைத் நான் தெரியப்படுத்துதல் வேண்டும். இன்னும் சரிசெய்யப்படாத பொருண்மையான பிழையாகக் காட்டுதல்கள் இருக்குமாயிருந்தால் அவற்றை அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படுகின்ற அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

1.4 நிதிக்கூற்றுக்கள் மீது முகாமைத்துவத்தினதும் நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் இணங்க தயாரித்தும் சரியாகவும் நியாயமாவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பேரவை தொடர்ந்து இயங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான இயலுமையினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமாக வெளிப்படுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளதுடன் பேரவையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்றுவழி இல்லாதுவிட்டால் செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்து செயற்படும் கணக்கீட்டு அடிப்படையினை பயன்படுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பேரவையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான மேற்பார்வை நிருவகிக்கின்ற தரப்பினர்களால் வகிக்கப்படுகின்றது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பேரவையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் பேரவையின் அனைத்து வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறைப்படியாக ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக தாக்கத்தை ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது தொழில்சார் தீர்ப்புக்களை மேற்கொண்டு தொழில்சார் ஐயப்பாட்டினை பேணுகிறேன். மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளல். தவறாகக் காட்டுவது காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஏற்படும் ஆபத்தின் விளைவானது அதிகமாகும்.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பேரவையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புபட்ட வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டது.

- சம்பவங்கள் அல்லது நிலைமைகளின் காரணமாக பேரவையின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் மீது பொருண்மையான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றதா என்பது சம்பந்தமாக பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக பேரவையின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் மீதான அடிப்படையினை பயன்படுத்துதலின் பொருத்ததன் தன்மை தீர்மானிக்கப்பட்டது. போதியளவான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றது என நான் முடிவு செய்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையல்லாததாக எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. அபிப்பிராயம் திருத்தப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகள் நிலைமைகள் பேரவை தொடர்ச்சியாக நிலைத்திருத்தலை முடிவுறுத்த நேரிடலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு காண்புகள், மற்றும் உள்ளடக்கப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது பலவீனங்கள் தொடர்பாக நிருவகிக்கப்படுகின்ற தரப்பினர்களுக்குத் தெரியப்படுத்துகின்றேன்.

2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்துதல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1 எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடங்களினால் ஏற்படுகின்ற தாக்கங்களைத் தவிர்த்து, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் கணக்காய்விற்குத் தேவையான அனைத்து தகவல்களும் வெளிப்படுத்தல்களும் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் எனது பரிசோதனையிலிருந்து தோன்றும் வகையில் முறையான நிதி அறிக்கைகளை பேரவை பேணி வந்திருந்தது.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபார்சுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட நடைமுறைகள் அடிப்படையில் மற்றும் பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றுகள் பொருண்மையான விடயங்களுக்கான மட்டுப்பாடுகளுக்குள் காணப்பட்டன. எனினும், வேறு எதுவும் எனது கவனத்திற்கு உட்பட்டிருக்கவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பேரவையின் அங்கத்தவர்கள் எவருக்கும் பேரவையுடன் சம்பந்தப்பட்ட ஏதேனும் உடன்படிக்கை சம்பந்தமாக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வழமையான வணிக செயற்பாடுகளுக்குப் புறம்பாக தொடர்புகள் காணப்படுகின்றமையை குறிப்பிடுதல்.

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க ஏதாவது தொடர்புபட்ட எழுத்திலான சட்டங்களுக்கு அல்லது பேரவையின் நிருவாக சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகாதமையை குறிப்பிடல்.

சட்டங்கள், விதிகள்/ பணிப்புரைகளிற்கான தொடர்பு	**விபரம்**
(அ) 2014 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை அணுசக்திச் சட்டத்தின்	
14(1) ஆம் பிரிவு	பேரவையானது விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரினால் நியமிக்கப்பட்ட அணு அறிவியல் மற்றும் தொழிநுட்பத்துறையில் அல்லது கதிர்வீச்சுப் பாதுகாப்புத் துறையில் நிபுணத்துவம் பெற்ற மூன்று ஆட்களையும் பேரவையின் குறிக்கோள்களுடன் தொடர்புபட்ட அல்லது சம்பந்தப்பட்ட சட்ட அம்சங்களில் அனுபவம் பெற்ற ஆள் ஒருவரையும் சூழல் என்னும் விடயத்திற்கு குறித்தொதுக்கப்பெற்ற அமைச்சரின் அமைச்சினது அத்த கைய அமைச்சர் பெயர் குறித்து நியமிக்கப்படும் மேலதிக செயலாளர் அல்லது பணிப்பாளரொருவர் என்னும் தரத்திற்குக் குறையாத சிரேஸ்ட அலுவலர் ஒருவரையும் பேரவை அதன் பணிப்பாளர் சபையில் உறுப்பினர்களாக கொண்டிருக்க வேண்டிய போதிலும், அணு அறிவியல் மற்றும் தொழிநுட்பத் துறையில் அல்லது கதிர்வீச்சுப் பாதுகாப்புத் துறையில் நிபுணத்துவம் பெற்ற ஆட்கள் பேரவைக்கு நியமிக்கப்படாததுடன் நான்கு உறுப்பினர்கள் மாத்திரம் நியமிக்கப்பட்டிருந்தனர்.
(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் கோவை	
நிதிப்பிரமாணம் 128(1)(கி)	சலுகை அடிப்படையில் மோட்டார் வாகன அனுமதிப்பத்திரத்திற்கு உரித்துள்ள திகதிக்கு முன்னர் 01 தொடக்கம் 06 ஆண்டுகளில் பேரவையின் 5 உத்தியோகத்தர் களால் முதலாவது அனுமதிப்பத் திரம் பெறப்பட்டிருந்தமை கடந்த இரண்டு ஆண்டுகளின் கணக்காய்வு அறிக்கைகளில்

சுட்டிக் காட்டப்ப ட்டிருந்தது. இருப்பினும், நிதிப் பிரமாணம் 128(1)(கி) இன் பிரகாரம் இது தொடர்பாக நிறுவனத்தின் கணக்கீட்டு உத்தியோகத்தரால் இதனை சரிப்படுத்துவதற்கான நடவ டிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2017 திசெம்பர் 21 ஆந் திகதிய 02/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை

ஒவ்வொரு அரசாங்க நிறுவனமும் பயன்படுத்தும் அரசுக்கு சொந்தமான ஒவ்வொரு வாகனமும் அந்தந்த நிறுவனத்தின் பெயரில் பதிவு செய்யப்பட வேண்டுமென்றும், பிற நிறுவனங்களுக்கு சொந்தமான சொத்துகள் பயன்படுத்தப்படுவதாயின், அவை முறைப்படி கையகப்படுத்தப்பட வேண்டுமென்றும் வலியுறுத்தப்பட்டுள் ளது. ஒழுங்குபடுத்தல் பேரவையால் மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சுக்குச் சொந்தமான JZ – 6200 ஆம் இலக்க பிராடோ வாகனம், 2020 யூன் 16 ஆந் திகதி முதல் பயன்படுத்தப்பட்டு வருவதுடன் மீளாய்வாண்டில் இந்த வாகனத்தின் பராமரிப்பு திருத்த மற்றும் சேவைபார்ப்பு நடவடிக்கைகளிற்காக ரூபா 2,144,396 செலவிடப்பட்டிருந்த போதிலும், இந்த வாகனம் இது வரையிலும் உரிய விதத்தில் ஒழுங்குபடுத்தல் பேரவைக்கு கையேற் கப்பட்டிருக்கவில்லை.

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பின்வருவனவற்றைத் தவிர்த்து, பேரவையின் அதிகாரங்கள், கடமைகள், மற்றும் கடமைகளுக்கு இணக்கமற்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என

(அ) 2014 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை அணுசக்திச் சட்டத்தின் பிரிவு 10(இ) பிரகாரம், இலங்கையினால் இணங்கியொழுக்கப்படுவதற்கு தேவைப்படுத்தப்பட்டுள்ள அணுசக்தி என்னும் துறையுடன் தொடர்புடைய சர்வதேச நியமங்களுடனும் கடப்பாடு களுடனும் இணங்கியொழுகப்படுவதை உறுதிப்படுத்துதல் பேரைவையின் குறிக்கோளான போதிலும், சர்வதேச நியமங்களிலுள்ள தேவைப்பாடுகளை இலங்கைக்குப் பொருத்தமான விதத்தில் பயன்படுத்துவதற்கு விதிகள் தயாரிக்கப்பட்டு பாராளுமன்ற அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 இன் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்தி சட்டத்தின் 11 (ஊ) பிரிவின் படி அயனாக்கல் கதிர்வீச்சுக்கு எதிரான பாதுகாப்பு, மூலங்கள் மற்றும் அணு கதிரியக்கப்பொருளின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு, கதிரியக்க கழிவு முகாமைததுவம் என்பவற்றிற்கான தேசியக் கொள்கையினை வகுத்தமை ப்பின் மீது உரிய அமைச்சருக்கு விதப்புரைகளைச் செய்தல் பேரவை யின் பிரதான பணியாக காணப்பட்ட போதிலும், இதுவரை அப்பணி பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) சட்டத்தின் 18 ஆம் பிரிவின் பிரகாரம் பேரவையால் சபை உள்ளிட்ட அனைத்து நபர்களாலும் மேற்கொள்ள ப்படும் அயனியாக்கும் கதிர்வீச்சு தொடர்பான நடைமுறைள் (Practices) உரிமம் வழங்கப்பட்டு ஒழுங்குபடுத்தப் பட வேண்டிய போதிலும், பேரவையால் அயனியாக்கும் கதிர்வீச்சு பயன்படுத்த ப்படும் இடங்களுக்கு மட்டுமே உரிமம் வழங்கப்பட்டு ஒழுங்குபடுத்தல் இடம்பெற்று

வருகின்றது. அதன்படி, சபையால் வழங்கப்படுகின்ற கதிரியக்க நிலை அளவீடு, கதிர்வீச்சு அளவீட்டு உபகரண அளவுத்திருத்த சேவை, டோசிமெட்ரி சேவை மற்றும் பணி கண்காணிப்பு சேவைகள் போன்ற சேவைகளை பேரவை ஒழுங்குபடுத்தி யிருக்கவில்லை. இந்த நோக்கத் திற்காக, சட்டத்தின் பிரிவு 12 (ஔ) இன் படி, கதிர்வீச்சு அளவீடு மற்றும் கதிர்வீச்சு அளவீட்டு கருவிகளின் அளவுத்திருத்த சான்றிதழ்களை வழங் குவதில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்கு அல்லது நபர்களுக்கு ஒப்புதல் வழங்குவதற்கான நடைமுறைகள் மற்றும் வழிமுறைகளை பேரவை உருவாக்கியிருக்க வேண்டிய போதிலும், அத்தகைய நடைமுறைகள் மற்றும் வழிமுறைகள் இதுவரை வரைவு செய்யப்பட்டிருக்கவில்லை. சர்வதேச அணுசக்தி முகவர் நிறுவனத்தால் வெளியிடப்பட்ட தொழில்சார் கதிர்வீச்சு பாதுகாப்பு பற்றிய மதிப்பீட்டு அறிக்கை (ORPAS mission report) இன் பரிந்துரையாக, பேரவையால் சபைக்கு அளவுத்திருத்த சேவைகள் உள்ளிட்ட தொழில்நுட்ப சேவைகளை வழங்கு வதற்குத் தேவையான அனுமதியை வழங்க வேண்டும் என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது:-

(ஈ) சட்டத்தின் 49 ஆம் பிரிவின் படி பேரவையானது, பாதுகாப்பு உடன்படி க்கையின் கீழ் அடங்கியன உள்ளிட்ட சர்வதேச கடப்பாடுகளுக்கும் பொறுப்பு டைமைகளுக்கும் இணங்கியொழுகி, இச்சட்டத்தின் கீழான கட்டுப்பாட்டுக்கு அமைவாக இலங்கைக்குள் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செய்யப்படும் அணு பொருள், சாதனங்கள் மற்றும் தொழினுட்பவியல் அடங்கிய நிரலொன் றைத் தயாரித்தல் வேண்டும். மேலும், அவ்வாறு தயாரிக்கப்பட்ட நிரலுக்கு போதியளவு பிரசித்தப்படுத்தலை பேரவையால் தீர்மானிக்கப்படுகின்ற முறையில் வழங்குதல் வேண்டுமென்ப துடன், அத்தகைய நிரல் வர்த்தமானியில் வெளியிடப்படுதலும் வேண்டும். இருப்பினும், ஒழுங்குபடு த்தல் பேரவையால் இதுவரையிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட் டிருக்கவில்லை. இலங்கையினால் 2018 ஆம் ஆண்டில் மேலதிக சாசனத்திற்காக அனுமதி வழங்கப்பட்டதாக சர்வதேச அணுசக்தி முகவர் நிலையம் அதன் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ள போதிலும், அந்த நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்து பேரவையால் பின்தொடர் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) சட்டத்தின் 69 வது பிரிவின்படி, அயனியாக்கும் பொருட்களின் அகழ்வுகள் மற்றும் செயலாக்க நடவடிக்கைகளில் ஈடுபடுத்தும் நபர்களால் இணக்கப்பாடு வழங்கப்பட்ட வேண்டிய அனைத்து தொழிலாளர்கள், பொதுமக்கள் மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கான தேவைகள் பேரவையால் விதிகளின் மூலம் வகுக்கப்பட வேண்டிய போதிலும், அத்தகைய விதிகள் எதுவும் உருவாக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 1999 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க அணுசக்தி பாதுகாப்பு ஒழுங்கு விதிகளிலுள்ள அயனியாக்கும் கதிர்வீச்சு பாதுகாப்பு குறித்த 4 ஆவது ஒழுங்குவிதியின் படி கதிரியக்க படிவுகளை அகழ்தல், அரைத்தல் மற்றும் செயலாக்குவதற்காக பேரவை யின் முன் அனுமதியை பெற்றுக் கொள்ள வேண்டும். ஆனால் அத்தகைய இடங்களுக்கு உரிமம் வழங்குவதற்கு தேவையான பணிகளை பேரவை செய்திருக்கவில்லை. இதன் விளைவாக, உரிமக் கட்டணம், ஆய்வுக் கட்டணம் மற்றும் கதிர்வீச்சு நிலை பரிசோதனை ஆகியவற்றிலி ருந்து அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய வருவாயை இழக்கப்பட்டு ள்ளதுடன் அவ்வாறே சுற்றுச்சூழல், பொதுமக்கள் மற்றும் தொழிலாளர் களின் பாதுகாப்பை சட்டப்பூர்வமாகப் பாதுகாக்க பேரவை தவறியிருந்தது.

(ஊ) சட்டத்தின் பிரிவு 86(1) இன் படி, அமைச்சர் 86(2)(அ) முதல் (ஏ) வரையிலான விடயங்கள் தொடர்பாக ஒழுங்குவிதிகளைத் (Regulations) தயாரித்து, பிரிவுகள் 86(3) மற்றும் 86(4) இன் படி வர்த்தமானியில் வெளியிடப்பட்டு, அவை பாராளுமன் றத்தின் ஒப்புதலுக்காக பாராளுமன்ற த்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதி வரையிலும் சட்டத்தில் குறிப்பிடப்பட்டு ள்ள எந்தவொரு விடயம் தொடர்பி லான கட்டளைகள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை:-

(எ) சட்டத்தின் பிரிவு 87(1) (அ) முதல் (ஏ) வரை குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக பேரவை விதிகளை (Rules) உருவாக்கி, பிரிவுகள் 87(2) மற்றும் 87(3) இன் படி வர்த்தமானியில் வெளியிடப்பட்டு, அவை பாராளுமன் றத்தின் ஒப்புதலுக்காக பாராளுமன்ற த்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதி வரையிலும் சட்டத்தில் குறிப்பிடப்பட்டு ள்ள எந்தவொரு விடயம் தொடர்பி லான விதிகள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதற்குப் பதிலாக, 1969 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க அணுசக்தி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்டு நீக்கப்பட்டிருந்த 1999 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க அணுசக்தி பாதுகாப்பு ஒழுங்குவிதி களிலுள்ள அயனியாக்கும் கதிர்வீச்சு பாதுகாப்பு குறித்த விதிமுறைகள் திரும்பப் பெறப்பட்டு தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டிருந்தன. அந்த ஒழுங்குவிதிகளை உருவாக்க பயன்படுத்தப்பட்ட 22 ஆண்டுகளுக்கும் மேல் பழமைவாய்ந்த சர்வதேச கதிர்வீச்சு பாதுகாப்பு பரிந்துரைகள் தற்போது மாற்றமடைந்து காணப்படுகின்றன.

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பேரவையின வளங்கள் சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் பயனுறுதியாக காலஎல்லைக்குள் சட்டங்களுக்கு இணக்கமாக கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என.

3. ஏனைய அவதானிப்புக்கள்

(அ) 1992 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் சட்டத்தின் பிரிவு 33 மற்றும் 2009 ஆம் ஆண்டின் 66 ஆம் இலக்க சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் திருத்தச் சட்டத்தின் படி, அமைச்சர் மற்றும் வேறு எந்த அமைச்சரின் ஒப்புதல் இன்றி கதிரியக்கத் தனிமங்களைக் கொண்ட எந்தவொரு கனிமத்தையும் ஏற்றுமதி செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது. அதற்கமைய, இரண்டு பொதுத்துறை மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு கனிய மணல் ஏற்றுமதிக்கான உரிமத்தை பெற விண்ணப்பிக்கும் போது கனிய மணலில் கதிரியக்க பொருட்கள் இல்லை என்ற பேரவையின் பரிந்துரையுடன் விண்ணப்பிக்குமாறு புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்க பணியகம் குறித்த நிறுவனங்களை அறிவுறுத்தியிருந்தது. அதன்படி கனிய மணலில் கதிரியக்க பொருட்கள் உள்ளதா இல்லையா என்பது குறித்து பேரவை தனது பரிந்துரையை செய்திருக்க வேண்டும். இலங்கை அணுசக்திச் சட்டத்தின் 87(2) மற்றும் 87(3) பிரிவின்படி, பேரவையானது சர்வதேச நியமங்களின் ஒழுங்குவிதிகளை தனது விதிகளாகப் பயன்படுத்துவதாயின், அந்த விதிகள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட வேண்டும். ஆனால் அத்தகைய ஒப்புதல் இல்லாமல், சர்வதேச கதிர்வீச்சுப் பொருட்களின் போக்குவரத்திற்கான ஒழுங்குவிதியி லுள்ள)IAEA SSR - 6) விதியினைப் பயன்படுத்தி கதிரியக்கம் கொண்ட கனிய மணல்களை ஏற்றுமதி செய்வதற்கு மீளாய்வாண்டின் போது 33 சந்தர்ப்பங்களில் பேரவை ஒப்புதல் அளித்திருந்தது. மேலும், இலங்கை அணுசக்தி சட்டத்தின் பிரிவு 5(ஈ) இன் படி, ஒரு பொருளின் அயனியாக்கும் கதிர்வீச்சு அளவை தீர்மானிக்க பரிசோதனை (testing) நடத்தும் அதிகாரத்தை அணுசக்தி சபையே கொண்டுள்ளது. ஆனால் மணலிலுள்ள கதிரியக்க அளவுகளை பேரவை அங்கீகரிப்பது தரப்புகளுக்கிடையில் நல்லுறவு மோதலை)conflict of interest) உருவாக்கும் என்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) சர்வதேச பாதுகாப்பான கதிரியக்கப் பொருள் போக்குவரத்து ஒழுங்கு விதிகளின் (IAEA SSR - 6) படி ஒரு பொருட் கொள்கலனில்)consignment) இருக்கக்கூடிய அயனியாக்கும் கதிர்வீச்சின் அளவு எல்லை விஞ்சியுள்ள போது, தொடர்புடைய பொருட் கொள்கலனின் கதிர்வீச்சு மூலம் சாரதிக்கு, சாரதியின் உதவியாளருக்கு, சாலைகளில் பயணிக்கும் பொதுமக்கள் மற்றும் சுற்றுச்சூழலுக்கு வெளிப்படும் கதிர்வீச்சின் அளவை அளவிடுவத ற்காக குறித்த மண்ணிலிருந்து பெறப்பட்ட மாதிரிகளின் ஆய்வக பரிசோதனை அறிக்கைகளிலிருந்து பெறப்பட்ட அதே அளவு மணல் அந்தந்த கொள்கலன்களில் ஏற்றப்பட் டுள்ளது என்பதை பரிசோதிப்பதற்கா கவும் கொள்கலன்களிலுள் ள கதிர் வீச்சின் அளவை பரிசோதிப்பதற்கா கவும்

தேவையான களப்பரிசோத னைகள் மேற்கொள்ளப்பட்டிரு க்கவில்லை. இதன் விளைவாக பரிசோதனைக் கட்டணமாக (Inspection fee) பேரவைக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 15,770,000 கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) சர்வதேச அணுசக்தி முகவர் நிலையத்தால் வெளியிடப்பட்ட தொழில்சார் கதிர்வீச்சுப் பாதுகாப்பு மதிப்பீட்டு (ORPAS mission report) அறிக்கையின் படி தற்போதுள்ள வெளிப்பாட்டு சூழ்நிலைகள், திட்டமிட்ட வெளிப்பாடு சூழ்நிலைகள் மற்றும் அவசரகால வெளிப்பாடு சூழ்நிலை களை உள்ளடக்கியதாக கதிர்வீச்சு பாதுகாப்பு விதிமுறைகள் உருவாக்கப்பட வேண்டுமாயினும், பேரவையால் உருவாக்கப்பட்ட விதிமுறைகளில் தற்போதுள்ள வெளிப்பாடு சூழ்நிலைகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஈ) இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருட்களில் பொது சுகாதாரத்திற்கு தீங்கு விளைவிக்கும் அயனியாக்கும் கதிரியக்க பொருட்கள் இருப்பதை பரீட்சிப்பதற்காக 1995 ஜூலை 21 அன்று வெளியிடப்பட்ட வர்த்தமானி, தற்போதைய நுகர்வு முறைகளிற்கு ஏற்றவாறும் அணுசக்தி வெளியீட்டு நிலைமைகளுக்கு ஏற்றவாறும் திருத்தப்பட்டு வெளியிடப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக, தற்போது இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் பால் மாவுகளில் மாத்திரமே அயனியாக்கும் கதிரியக்கப் பொருட்கள் இருக்கின்றனவா என பரிசோதிக்கப்படுகின்றன.

(உ) கதிரியக்க தொழில்நுட்பத்தைப் பயன்ப டுத்தி நோய்களைக் கண்டறிவதற்கும் (diagnosis) சிகிச்சையளிப்பதற்கும் (therapeutic) பயன்படுத்தப்படும் இயந்தி ரங்களின் அளவுத்திருத்தம் மற்றும் தரக்கட்டுப்பாட்டுத் தேவைகள் உரிம நிபந்தனைகளால் கட்டாயப்படுத்தப்படாததால், அந்த இயந்திரங்களிலிருந்து சேவைகளைப் பெறும் நோயாளிகள் தேவையற்ற முறையில் அயனியாக்கம் செய்யப்படுவதற்கான அபாயம் உள்ளதுடன் அது தொடர்பான சேவைகளை வழங்குவதன் மூலம் அரசாங்கத்திற்கு பெறக்கூடிய வருமானம் இழக்கப்படுகின்றமையும் அவதானிக்கப்பட்டது.

(ஊ) 2021 ஆம் ஆண்டில், கதிரியக்க பாதுகாப்பு குறித்த திட்டமிடப்பட்ட தேசிய பயிற்சி செயலமர்வுகள் மற்றும் கதிரியக்க அவசரநிலைகள் மற்றும் ஆர்வமுள்ள தரப்பினர்களின் எதிர்கொள்ளல் குறித்த தேசிய பயிற்சி செயலமர்வுகள் எதுவும் மேற்கொள்ளப் பட்டிருக்காததுடன், அதே நேரத்தில் மீதமுள்ள திட்டமிடப்பட்ட பணிகளின் செயல் முன்னேற்றம் 60 முதல் 70 சதவீதம் வரை மாத்திரமாக இருந்தது.

ஓப்பம்: டபிள்யூ.பி.சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியானதும் பிரமாண ரீதியானதுமான தேவைப்பாடுகள் மீது 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரமான

மேற்படி விடயம் தொடர்பாக உங்களது 2022.10.31 ஆந் திகதிய ENR/B/SLAERC/FA/2021 ஆம் இலக்க கணக்காய்வு அவதானிப்பு அறிக்கைக்காக முதற்கண் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அதற்கமைய, எமது விளக்கமளித்தல்கள் மற்றும் தற்போது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைளை கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு கணக்காய்வ அறிக்கையின் தொடர் இலக்கங்களுக்கு ஏற்ப சமர்ப்பிக்கப்படுகின்றது என்பதை தயவுடன் குறிப்பிட விரும்புகின்றேன்.

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையிலுள்ள முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பேரவையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை மற்றும் அதற்கான கருத்துரைகள்

(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 07 இன் படி, ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் ஒரு விடயத்தை மீள மதிப்பிடுகையில், குறித்த ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் வர்க்கம் முழுவது மாக மீள விலைமதிக்கப்படுதல் வேண்டிய போதிலும், அதற்கு முரணாக பேரவையால் முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட ரூபா 20,107,066 கிரயமுடைய தேர்ந்தெடுக் கப்பட்ட சொத்துக்கள் மாத்திரமே மீள விலைமதிக்கப்பட்டு ரூபா 4,342,620 விலைமதிப்பீட்டு மிகை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

ஒழுங்குபடுத்தல் பேரவை தொடங்கப்பட்ட திலிருந்து அதாவது 2015 முதல், கணக்கீட்டுக் கொள்கையாக, ஒவ்வொரு ஆண்டும் முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட சொத்துக்களை மட்டுமே மீள்மதிப்பீடு செய்யப்படுகின்றது. ஆனால் நீங்கள் சுட்டிக்காட்டிய படி, மீள்மதிப்பீட்டின் போது ஒவ்வொரு உபகரணமும் அல்லது பொருள் வகையும் அடையாளம் காணப்பட்டு, பணிப்பாளர் சபையின் ஒப்புதலைப் பெற்ற பிறகு, இதனைக் காட்டிலும் சிறந்த முறையில் அனைத்து உபகரணங்களையும் அல்லது பொருள் வகைகளையும் மீள் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இல. 07 இற்கு இணங்க ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை மீள் மதிப்பீடு செய்கையில் சொத்துக்களின் நியாய மான பெறுமதிகளை மதிப்பிடுவதற்காக ஒரு சுயாதீன மதிப்பீட்டாளர் பயன்படுத்தப்பட்டமை, பயன்படுத்தப் படும் முறைகள், குறிப்பிடத்தக்க அனுமானங்கள் மற்றும் நியாயமான மதிப்பீடுகள் செயற்பாட்டிலுள்ள சந்தையில் அவதானிக்கக்கூடிய விலைகளை நேரடியாகக் குறிப்பிட்டு சமீபத்திய சந்தை கொடுக்கல் வாங்கல்கள் அல்லது பிற மதிப்பீட்டு நுட்பங்களின் அடிப்படையில் சொத்துக்கள் அல்லது எந் த அளவிற்கு நிர்ணயம் செய்யப்பட்டமை என்பது

தொடர்பில் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். இருப்பினும், பேரவையால் மீளாய்வாண்டில் முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட ரூபா 13,207,957 கிரயமுடைய 50 விஞ்ஞான உபகரணங்கள், ரூபா 622,800 தொகையான 6 மேசைக் கணினிகள் மற்றும் ரூபா 112,500 கிரயமுடைய மடிக்கணினிகள் முறையே ரூபா 414,425, ரூபா 14,160 மற்றும் ரூபா 2,870 ஆக மீள விலைமதிக்கப்பட் டிருந்ததுடன், இவ்வாறு மீள விலைமதிக்கையில் மேற்படி நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், சுயாதீன மதிப்பீட்டாளர் ஒருவர் நியமிக்கப்படாததால், மீள்மதிப்பீட்டு பெறுமதிகள் தொடர்பாக கணக்காய்வில் திருப்தி அடைய முடியவில்லை:-

இந்த உருப்படிகளை மீள் மதிப்பீடு செய்கையில், 2021 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய உருப் படிகளின் மீள் மதிப்பீடு 2021 இல் பேரவையின் பணிப்பாளர் சபையால் நியமிக்கப்பட்ட மீள் மதிப்பீட்டுக் குழுவால் மேற்கொள் ளப்பட்டுள்ளன. அந்த நோக்கத்திற்காக, பின்வரும் கருதுகோள்கள் குழுவால் பயன்படுத்தப்பட்டது.
கருதுகோள்கள் -

1. பொருட்களின் தற்போதைய சந்தை மதிப்பை பொருட்களின் கொள்முதல் விலையுடன் ஒப்பிடுதல்.

2. இந்த பொருட்களின் தேய்மான சதவீதத்தின் அடிப்படையில் 2020 வரை தேய்மானத்தைக் கணக்கிடுதல்.

3. அந்த தேய்மான பெறுமதியை அண்மித்த உயர் பெறுமதியாகக் கொண்டு, அதன்படி மீள் மதிப்பீடு செய்தல்.

நீங்கள் குறிப்பிட்டுள்ளபடி தற்போதைய சந்தை நிலவரமும் கருத்திலெடுக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த ஆண்டுகளில் இந்த பொருட்களின் சந்தைப் பொறுமதி மிகவும் குறைவாக இருந்ததுடன் பொருளின் நிலைமை, ஆயுட்காலம் மற்றும் உற்பத்தி ஆண்டுக்கு ஏற்ப இந்த மீள் மதிப்பீடு செய்யப்பட்டது. எனவே, நீங்கள் சுட்டிக்காட்டியுள்ள அண்மைக் காலத்தில் நடந்த உண்மையான சந்தை கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி அதிகமாக காணப்பட்ட போதிலும், தொடர்புடைய கணக்கு ஆண்டுகளின் பெறுமதி அதிகரித்திருக்கவில்லை. எனவே, அண்மைய அதிகரிப்பை இதற்குப் பயன்படுத்த முடியாது என்பதை நான் சுட்டிக்காட்டுகிறேன். மேலும், 03 வருடங்களுக்கு முன்னர் நாம் மதிப்பீட்டுச் சபைக்கு வெளி நபர் ஒருவரின் சேவையைப் பெறுவதற்கு முயற்சித்த போதிலும், விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தில் பொருத்தமான நபரைக் கண்டறிவது கடினமாக இருந்தது. மேலும் இந்த கருவிகளில் பல விஞ்ஞானக் கருவிகள் என்பதால், அவற்றை மீள் மதிப்பிடுவதற்கு குறித்த துறைசார் அறிவுடன் கூடிய சரியான நபர்களைக் கண்டுபிடிப்பது மிகவும் கடினமாகும். ஆனால் உங்களால் அறிவுறுத்தப்பட்டபடி, வெளியில் இருந்து பொருத்தமான ஒருவரைக் கண்டறியும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இல. 07 இன் விதிமுறைகளை கருத்தில் கொண்டு மீண்டும் இந்த கருவிகளை எதிர்வரும் ஆண்டில் மீள் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(இ) **இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 07 இன் படி, ஒரு சொத்து பயன்படுத்தக்கூடிய நிலைக்கு உருவாக்கப்பட்ட பின்னர், நிலையான சொத்தாக அங்கீகரிக்கப்பட வேண்டும். இருப்பினும், 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்த முடியுமான நிலைக்கு கொண்டுவரப்படாத ஒரு விஞ்ஞானக் கருவியை இறக்குமதி செய்வதற்காக செலுத்தப்பட்ட ரூபா 1,613,206 தொகை நிலையான சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டு, அதற்காக ரூபா 2,210 தேய்மான ஏற்பாடும் செய்யப்பட்டிருந்தது.**

நீங்கள் சுட்டிக்காட்டிய அவதானிப்புகள் தொடர்பில் எங்களின் நிலையான சொத்துப் பதிவேட்டை நாங்கள் பரீட்சித்ததுடன் உங்களிடமிருந்து பெறப்பட்ட தெளிவுபடுத்தல் களின் படி, எதிர்வரும் ஆண்டில் இலங்கை கணக்கீட்டு நியமம் இல. 07 தொடர்பாக முறையான கணக்கீட்டு முறையைப் பின்பற்ற திட்டமிட்டுள்ளோம் என்பதை அறியத்தருகின்றேன்.

(ஈ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 07 இன் படி, ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் ஒரு உருப்படியின் முன்கொண்டு செல்லும் தொகையானது, அது விற்கப்படு கையில் அல்லது அகற்றப்படுகையில் அதிலிருந்தான எதிர்கால பொருளாதார நன்மைகள் அல்லது சேவை வாய்ப்புகள் எதிர்பார்க்கப்படாத போது மட்டுமே புத்தகங்களிலிருந்து அகற்றப்பட முடியுமான போதிலும், அதற்கு முரணாக, ஒரு கண்காட்சிப் பொருளாக பயன்படுத்தப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த ரூபா 2,014,303 கிரயமான விஞ்ஞான உபகரண மொன்று மீளாய்வாண்டில் நிலையான சொத்துக்கள் பதிவேட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. அத்துடன், முன்னைய ஆண்டுகளில் நிலையான சொத்துக்கள் பதிவேட்டிலிருந்து கண்காட்சிப் பொருட்களாக பயன்படு த்தப்பட்டிருந்த 9 விஞ்ஞானக் கருவிகள் நீக்கப்பட்டிருந்தன. மேலும், முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட ரூபா 1,117,183 கிரயமான 4 விஞ்ஞான உபகரணங்களும் நிலையான சொத்து பதிவேட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்தன. ஆனால் அவை எந்த அடிப்படையில் அகற்றப்பட்டன என்பது வெளிப்படுத்தப்படவில்லை:-

இங்குள்ள அனைத்து உபகரணங்களையும் மீள் மதிப்பீடு செய்வதற்காக 2021.08.06 அன்று நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்திற்கு ஞாபனப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அதனுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பொருட்களின் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களுக்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. அதன்படி, மேற்குறிப்பிட்ட பொருட்களின் பெறுமதி பூச்சியமாகிவிட்டதால், அவற்றை வேறு எந்த நோக்கத்திற்கும் பயன்படுத்த முடியாது என்பதால், அகற்றுவதற்கான பரிந்துரைகள் மேற்குறிப்பிட்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளன. புத்தகங்களில் இருந்து அகற்றுவதற்காக பொருட்களின் பட்டியல் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்டது. எனவே, 2017 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட பொருட் கணக்கெடுப்பின் போது இந்த பொருட்கள் பயன்படுத்த முடியாத பொருட்கள் என கண்டறியப்பட்டு, இந்த பொருட்களின் பெறுமதி பூச்சியமாக மாறியதையடுத்து இருப்புப் புத்தகங்களில் இருந்து நீக்கப்பட்டது. மேலும் இந்த பொருட்களை மதிப்பிட முடியாது என்பதால், அவற்றை இனி பொருட் பதிவேட்டில் வைத்திருப்பதில் எந்த பயனும் இல்லை என்பது ஒழுங்குபடுத்தல் பேரவையின் அபிப்பிராயமாகும். ஆகையால், கண்காட்சி நோக்கங்களுக்காக ஒதுக்கப்பட்ட பொருட்களுக்கு பெறுமதி இல்லாத போதிலும், அடுத்த ஆண்டு முதல் அவற்றுக்கான நிலையான சொத்துப் பதிவேடு பராமரிக்கப்படும் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(உ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இல. 07 இன் படி, சொத்துக்களுக்குப் பயன்படுத்தப்படும் தேய்மான முறையானது குறைந்தபட்சம் ஒவ்வொரு வருடாந்த அறிக்கையிடல் தேதியிலும் மீளாய்வு செய்யப்பட வேண்டுமென்பதுடன் சொத்தில் உள்ளடங்கியுள்ள எதிர்கால பொருளாதார நன்மைகள் அல்லது சேவையின் நுகர்வு முறையில் குறிப்பிடத்தக்க மாற்றத்திற்கான சாத்தியக்கூறுகள் ஏற்பட்டிருந்தால் அந்த மாற்றமேற்பட்ட வடிவத்தை வெளிப்படுத்தும் விதத்தில் தேய்விடல் முறை மாற்றப்பட்டு, அந்த மாற்றங்கள் கணக்கீட்டு மதிப்பீட்டின் ஒரு மாற்றமாக கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும், பேரவையால் அவ்வாறு செய் யப்பட்டிருக்கவில்லை:-

நீங்கள் சுட்டிக்காட்டியுள்ளபடி, இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 07 இன் 75 ஆம் பந்தியில், சொத்தில் உள்ளடங்கியுள்ள எதிர்கால பொருளாதார நலன்கள் அல்லது சொத்தில் உள்ள எதிர்பார்த்த சேவை சாத்திய நுகர்வு முறைகளில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டிருந்தால், அந்த மாற்றத்தை பிரதிபலிக்கும் வகையில் தேய்மான முறை மாற்றப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால், ஒழுங்குபடுத்தல் பேரவை தொடங்கப்பட்டது முதல் இது வரையிலும் எளிமையான தேய்மான முறையின் கீழ் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் மீது உரிய தேய்மான சதவீதங்களின்படி, சொத்துக்கள் தேய்மானம் செய்யப்பட்டுள்ளன. இது கணக்குகளுக்கான குறிப்புகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், சபையின் தேய்மான முறையை மறுபரிசீலனை செய்வதற்கும் மாற்றுவதற்கும் எதிர்பார்த்த நுகர்வு முறையில் குறிப்பிடத்தக்க மாற்றம் எதுவும் இல்லாததால், தேய்மான சதவீதத்தை மாற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கவில்லை. ஆனால் கணக்காய்வில் காட்டப்பட்டுள்ள படி, பொருட்களின் பெறுமதி பூச்சியமாக மாறுவதற்கு முன்னர் அவற்றின் மதிப்பைக் கண்டறிந்து பொருத்தமான தேய்மானக் காலத்தை நிர்ணயிக்கும் பணியை அடுத்த ஆண்டு முதல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஊ) மீளாய்வாண்டில், பேரவைக்கு கிடைத்திருந்த ரூபா 6,278,200 மூலதன மானியங்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 11க்கு இணங்க வருடத்திற்கான வருமானமாக இனங்கா ணப்பட்டு கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை:-

உங்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்பு சரியானதாகும். அதன்படி, எதிர்வரும் கணக்காண்டுகளில் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 11 இற்கு அமைவாக உங்களது வழிகாட்டலின் பிரகாரம் மூலதன மானியத்தை ஆண்டின் வருமானமாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

(எ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 20 இன் படி, அருவச் சொத்துகளாக கணக்கிடப்பட வேண்டிய ரூபா 708,958 கிரயமுடைய கணினி மென்பொருளானது அருவச் சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை:-

நீங்கள் சுட்டிக்காட்டிய கணினி மென்பொருள் பொதிக்கான கிரயமானது 2015 முதல் அலுவலக கணினிகள் (உருவச் சொத்துக்கள்) இன் கீழ் எம்மால் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் நீங்கள் கணக்காய்வில் சுட்டிக்காட்டியுள்ள படி, கணினி மென்பொருளுக்கான கிரயத்தை (அருவச் சொத்துக்கள்) இன் கீழ் கணக்கீடு செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் மேற்படி சொத்துக்களின் தேய்மான வீதத்தில் மாற்றமேற்படவிலை என்பதையும் தெரிவிக்க விரும்புகிறேன்.

(ஏ) 2015 ஆம் ஆண்டில் இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை நிறுவப்பட்ட போது, அணுசக்தி அதிகார சபையிடமிருந்து ரூபா 14,044,902 சொத்துக்களும் ரூபா 5,414,755 பொறுப்புகளும் ஒப்படைக்கப்பட்டிருந் தன. அதன்படி, அரசிடமிருந்து பேரவைக்கு கிடைத்த நிகர மூலதன மானியம் ரூபா 8,630,147 என அந்த ஆண்டில் இனங் காணப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இந்த மானியத்திற்கு எதிரான வருடாந்த வருமான அங்கீகாரம் (பெறப்பட்ட மானியத்தின் காலத்தேய்மானம்) மானியத்தின் மொத்த பெறுமதியை விட அதிகமாக செய்யப்பட்டுள்ளதால், 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் அணுசக்தி அதிகாரசபைக்குரிய திரண்ட நிதியின் பெறுமதி ரூபா 3,812,121 வரவு மீதியாகக் காணப்பட்டது.

இது தொடர்பில் கணக்காய்வுடன் கலந்துரையாடுகையில் ஒழுங்குபடுத்தல் பேரவையால் பின்பற்றப்பட்ட கொள்கை மற்றும் திரட்டிய நிதியத்தில் வரவு மீதி காணப்பட்டமை சரியானது என்பதாக கூறப்பட்டது. அதன்படி, அடுத்த ஆண்டில் ஒரு குறிப்பின் மூலம் இந்த நிலைமையை நிதிக் கூற்றுக்களில் குறிப்பி டுவதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதுடன் அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

2. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணத் தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2.2.1 எனது அறிக்கையின் முனைப்பழியு ள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படுகின்ற தாக்கங்களைத் தவிர்த்து, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் கணக்காய்விற்குத் தேவையான அனைத்து தகவல்களும் வெளிப்படுத்தல்களும் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் எனது பரிசோதனையிலிருந்து தோன்றும் வகையில் முறையான நிதி அறிக்கைகளை பேரவை பேணி வந்திருந்தது.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத் திற்கான அடிப்படையின் கீழுள்ள 2.1(ஏ) பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள அவதானிப்புகளைத் தவிர்த்து, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபார்சுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2.2. சட்டங்கள் மற்றும் விதிகளுள்ள ஏற்பாடுகளிற்கான தொடர்பு

(அ) 2014 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை அணுசக்திச் சட்டத்தின் 14(1) ஆம் பிரிவு

பேரவையானது விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரினால் நியமிக்கப்பட்ட அணு அறிவியல் மற்றும் தொழிநுட்பத்துறையில் அல்லது கதிர்வீச்சுப் பாதுகாப்புத் துறையில் நிபுணத்துவம் பெற்ற மூன்று ஆட்களையும் பேரவையின் குறிக்கோள்களுடன் தொடர்புபட்ட அல்லது சம்பந்தப்பட்ட சட்ட அம்சங்களில் அனுபவம் பெற்ற ஆள் ஒருவரையும் சூழல் என்னும் விடயத்திற்கு குறித்தொதுக்கப்பெற்ற அமைச்சரின் அமைச்சினது அத்த கைய அமைச்சர் பெயர் குறித்து நியமிக்கப்படும் மேலதிக செயலாளர் அல்லது பணிப்பாளரொருவர் என்னும் தரத்திற்குக் குறையாத சிரேஸ்ட அலுவலர் ஒருவரையும் பேரவை அதன் பணிப்பாளர் சபையில் உறுப்பினர்களாக கொண்டிருக்க வேண்டிய போதிலும், அணு அறிவியல் மற்றும் தொழிநுட்பத் துறையில் அல்லது கதிர்வீச்சுப் பாதுகாப்புத் துறையில் நிபுணத்துவம் பெற்ற ஆட்கள் பேரவைக்கு நியமிக்கப்படாததுடன் நான்கு உறுப்பினர்கள் மாத்திரம் நியமிக்கப்பட்டிருந்தனர்.

2014 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை அணுசக்திச் சட்டத்தின் பிரிவு 14(1) இன் படி பேரவைக்குரிய உறுப்பினர்கள் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரினால் நியமிக்கப்படுகி ன்றனர். இது தொடர்பில் செய்யப்படுகின்ற நியமனங்களிற்கு எவ்வித

பரிந்துரைகளையும் செய்வதற்கு சட்டத்தில் ஏற்பாடுகள் எதுவும் பேரவைக்கு வழங்கப்படவில்லை. இது தொடர்பில் அமைச்சரிடம் அல்லது அமைச்சிடம் விசாரிப்பதற்கும் சட்டத்தில் ஏற்பாடுகள் எதுவும் பேரவைக்கு வழங்கப்படவில்லை. தற்போது வெற்றிடமாகக் காணப்படுகின்றன பேரவையின் உறுப்பினர் பதவிக்கு ஒருவரை நியமிக்குமாறு அண்மையில் இடம்பெற்ற அமைச்சின் செயன்முன்னேற்றக் கூட்டத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டது. அது தொடர்பில் மீண்டும் ஞாபகமூட்டிய பின்னர் அமைச்சரால் ஒருவரின் பெயர் முன்மொழியப்பட்டு எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் கோவை

நிதிப்பிரமாணம் 128(1)(கி)

சலுகை அடிப்படையில் மோட்டார் வாகன அனுமதிப்பத்திரத்திற்கு உரித்துள்ள திகதிக்கு முன்னர் 01 தொடக்கம் 06 ஆண்டுகளில் பேரவையின் 5 உத்தியோகத்தர் களால் முதலாவது அனுமதிப்பத் திரம் பெறப்பட்டிருந்தமை கடந்த இரண்டு ஆண்டுகளின் கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக் காட்டப்ப ட்டிருந்தது. இருப்பினும், நிதிப் பிரமாணம் 128(1)(கி) இன் பிரகாரம் இது தொடர்பாக நிறுவனத்தின் கணக்கீட்டு உத்தியோகத்தரால் இதனை சரிப்படுத்துவதற்கான நடவ டிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

இந்தக் கணக்காய்வு அவதானிப்பு தொடர்பில் கடந்த பல வருடங்களாக இவ்விதம் இந்த விடயம் சுட்டிக் காட்டப்பட்டிருந்ததுடன், அந்த விடயங்களிற்காக பேரவையால் அவ்வப்போது பதிலளிக்கப்பட்டுள்ளது என்பதை சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். மேலும் அதற்கான பதிலளிப்பை பின்வருமாறு மீண்டும் குறிப்பிட விரும்புகின்றேன்.

அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டத்திலும் பேரவையின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டத்திலும் இது தொடர்பில் கலந்துரை யாடப்பட்டதுடன் அதன்போது நீதி மன்றத்தால் வழங்கப்பட்டுள்ள தீர்ப்பு மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள விளக்க மளித்தல்களின் பிரகாரம் செயற்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. அத்துடன், பணிப்பாளர் சபையில் இது தொடர்பில் மீண்டும் கலந்துரையாட முடியாது என பணிப்பாளர் சபை தீர்மானித்துள்ளது. அந்த உயர்மட்ட கட்டளைகளிற்கு புறம்பாக செயற்படுவதற்கு எமக்கு முடியாதுள்ளது என தயவுசெய்து அறியத்தருகின்றேன்.

(இ) 2017 திசெம்பர் 21 ஆந் திகதிய 02/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை

ஒவ்வொரு அரசாங்க நிறுவனமும் பயன்படுத்தும் அரசுக்கு சொந்தமான ஒவ்வொரு வாகனமும் அந்தந்த நிறுவனத்தின் பெயரில் பதிவு செய்யப்பட வேண்டுமென்றும், பிற நிறுவனங்களுக்கு சொந்தமான சொத்துகள் பயன்படுத்தப்படுவதாயின், அவை முறைப்படி கையகப்படுத்தப்பட வேண்டுமென்றும் வலியுறுத்தப்பட்டுள் ளது. ஒழுங்குபடுத்தல் பேரவையால் மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சுக்குச் சொந்தமான JZ – 6200 ஆம் இலக்க பிராடோ வாகனம், 2020 யூன் 16 ஆந் திகதி முதல் பயன்படுத்தப்பட்டு வருவதுடன் மீளாய்வாண்டில் இந்த வாகனத்தின் பராமரிப்பு திருத்த மற்றும் சேவைபார்ப்பு நடவடிக்கைகளிற்காக ரூபா 2,144,396 செலவிடப்பட்டிருந்த போதிலும், இந்த வாகனம் இது வரையிலும் உரிய விதத்தில் ஒழுங்குபடுத்தல் பேரவைக்கு கையேற் கப்பட்டிருக்கவில்லை.

JZ-622 ஆம் இலக்க வாகனம் 2020 ஜூன் 16 முதல் ஒழுங்குபடுத்தல் பேரவையால் பயன்படுத்தப்படுவது டன், அது மின்வலு அமைச்சால் ஒழுங்குபடுத்தல் பேரவைக்கு ஒப்படைக்கப்பட்டதாகும். இந்தக் கணக்காய்வு அவதானிப்பு தொடர்பில் கடந்த வருடத்திலும் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. அதற்காக உங்களுக்கு தெளிவான பதில்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், வாகனத்தின் உரிமையை மாற்றுவதை தீர்மானிக்க நீதிமன்றத்தின் முடிவைப் பெறுதல் வேண்டும். பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராக வாகனத்தை பராமரிக்க அமைச்சின் செயலாளர் ஒப்புதல் அளித்துள்ளார். கண்டி உயர்நீதிமன்றத்தில் வழக்கு முடிந்தவுடன் இந்த வாகனம் ஒழுங்புகடுத்தல் பேரவைக்கு ஒப்படைக்கப்படும் என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது. எனவே, நீதிமன்ற வழக்குத் தீர்ப்பு நீதிமன்றத்திடமிருந்து அமைச்சகத்திற்கு பெறப்படும் வரை இந்த பணி தாமதமாகின்றது. இந்த வழக்கு குறித்து கண்டி உயர்நீதிமன்றத்தில் இருந்து அமைச்சகம் விசாரித்ததுடன், வழக்கு இன்னும் முடிவடையவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. வழக்கு இருக்கும்போது அதை வேறு கட்சிக்கு மாற்ற முடியாது என்பது தெளிவாகிறது. நீதிமன்றத்தின் கூற்றுப்படி, வாகனம் சட்டப்பூர்வமாக ஒப்படைக்கப்படும் என்று இதற்குப் பொறுப்பான அமைச்சின் மேலதிக செயலாளரால் ஒழுங்குபடுத்தல் பேரவைக்குத் தெரிவிக்கப்பட்டு ள்ளது.

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பின்வருவனவற்றைத் தவிர்த்து, பேரவையின் அதிகாரங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணக்கமற்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என

(அ) 2014 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை அணுசக்திச் சட்டத்தின் பிரிவு 10(இ) பிரகாரம், இலங்கையினால் இணங்கியொழுக்கப்படுவதற்கு தேவைப்படுத்தப்பட்டுள்ள அணுசக்தி என்னும் துறையுடன் தொடர்புடைய சர்வதேச நியமங்களுடனும் கடப்பாடு களுடனும் இணங்கியொழுகப்படுவதை உறுதிப்படுத்துதல் பேரவையின் குறிக்கோளான போதிலும், சர்வதேச நியமங்களிலுள்ள தேவைப்பாடுகளை இலங்கைக்குப் பொருத்தமான விதத்தில் பயன்படுத்துவதற்கு விதிகள் தயாரிக்கப்பட்டு பாராளுமன்ற அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை.

சட்டத்தின் 10 வது பிரிவில் சட்டத்தின் நோக்கங்கள் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், இந்த நோக்கங்களிற்காக வேறுவிதமான சட்ட ஏற்பாடுகளை வகுக்க முடியாதுள்ளது. சட்டத்தில் உள்ள பிற உட்பிரிவுகளின் நோக்கங்களை வகுக்க சட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. நீங்கள் குறிப்பிட்டுள்ளவாறு சட்டத்தின் 10(இ) பிரகாரம் இணங்கியொழுகுவதற்கு சட்டத்தின் பிரிவு 12 (இ) இன் கீழ் இந்த நோக்கத்தை உறுதிப்படுத்த ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளது. இந்த விதிகளின்படி, இலங்கை இணங்கியொழுக வேண்டிய நியமங்கள் மற்றும் கடப்பாடுகளை உறுதிப்படுத்த ஒழுங்குபடுத்தல் பேரவை நடவடிக்கை எடுத்துள்ளது.

(ஆ) 2014 இன் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்தி சட்டத்தின் 11 (ஊ) பிரிவின் படி அயனாக்கல் கதிர்வீச்சுக்கு எதிரான பாதுகாப்பு, மூலங்கள் மற்றும் அணு கதிரியக்கப்பொருளின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு, கதிரியக்க கழிவு முகாமைததுவம் என்பவற்றிற்கான தேசியக் கொள்கையினை வகுத்தமை ப்பின் மீது உரிய அமைச்சருக்கு விதப்புரைகளைச் செய்தல் பேரவை யின் பிரதான பணியாக காணப்பட்ட போதிலும், இதுவரை அப்பணி பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

சட்டத்தின் பிரிவு 11 (ஊ) இன் பிரகாரம், கதிரியக்க கழிவு முகாமைத்துவம் குறித்த தேசிய வரைவுக் கொள்கை தயாரிக்கப்பட்டு ஏற்கனவே பணிப்பாளர் சபையின் ஒப்புதல்

பெறப்பட்டுள்ளது. இப்போது அதற்கு ஆர்வமுடைய தரப்பினர்களின் கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகளை பெறப்பட்ட வேண்டியுள்ளதால் அதற்காக நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், அமைச்சின் ஒப்புதலைப் பெறுவதற்காக வரைவை அமைச்சகத்திற்கு அனுப்புவதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கதிர்வீச்சு பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு குறித்த வரைவுகள் மற்றும் உத்திகளைத் தயாரிக்க ஏற்கனவே அடிப்படை திட்டங்களை உருவாக்கப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் சர்வதேச அணுசக்தி முகவர் நிலையத்தின் தொழில்நுட்ப ஒத்துழைப்பை பெற்று அவற்றை மீளாய்வு செய்து உரிய அங்கீகாரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(இ) **சட்டத்தின் 18 ஆம் பிரிவின் பிரகாரம் பேரவையால் சபை உள்ளிட்ட அனைத்து நபர்களாலும் மேற்கொள்ள ப்படும் அயனியாக்கும் கதிர்வீச்சு தொடர்பான நடைமுறைகள்)Practices) உரிமம் வழங்கப்பட்டு ஒழுங்குபடுத்தப் பட வேண்டிய போதிலும், பேரவையால் அயனியாக்கும் கதிர்வீச்சு பயன்படுத்த ப்படும் இடங்களுக்கு மட்டுமே உரிமம் வழங்கப்பட்டு ஒழுங்குபடுத்தல் இடம்பெற்று வருகின்றது. அதன்படி, சபையால் வழங்கப்படுகின்ற கதிரியக்க நிலை அளவீடு, கதிர்வீச்சு அளவீட்டு உபகரண அளவுத்திருத்த சேவை, டோசிமெட்ரி சேவை மற்றும் பணி கண்காணிப்பு சேவைகள் போன்ற சேவைகளை பேரவை ஒழுங்குபடுத்தி யிருக்கவில்லை. இந்த நோக்கத் திற்காக, சட்டத்தின் பிரிவு 12 (ஒள) இன் படி, கதிர்வீச்சு அளவீடு மற்றும் கதிர்வீச்சு அளவீட்டு கருவிகளின் அளவுத்திருத்த சான்றிதழ்களை வழங் குவதில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்கு அல்லது நபர்களுக்கு ஒப்புதல் வழங்குவதற்கான நடைமுறைகள் மற்றும் வழிமுறைகளை பேரவை உருவாக்கியிருக்க வேண்டிய போதிலும், அத்தகைய நடைமுறைகள் மற்றும் வழிமுறைகள் இதுவரை வரைவு செய்யப்பட்டிருக்கவில்லை. சர்வதேச அணுசக்தி முகவர் நிறுவனத்தால் வெளியிடப்பட்ட தொழில்சார் கதிர்வீச்சு பாதுகாப்பு பற்றிய மதிப்பீட்டு அறிக்கை (ORPAS mission report) இன் பரிந்துரையாக, பேரவையால் சபைக்கு அளவுத்திருத்த சேவைகள் உள்ளிட்ட தொழில்நுட்ப சேவைகளை வழங்கு வதற்குத் தேவையான அனுமதியை வழங்க வேண்டும் என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது:-**

இந்தக் கணக்காய்வு வினவல் தொடர்பாக கடந்த சில ஆண்டுகளில் நீங்கள் வினவல்களை சமர்ப்பித்துள்ளீர்கள் என்பதுடன், அனைத்து வினவல்களுக்கும் ஒழுங்குபடுத்தல் பேரவை உங்களுக்கு பதிலளித்துள்ளது. ஆனால் 2022 ஆகஸ்ட் 08 ஆந் தேதியிட்ட NR/B/AERC/AERC/ AERC/AERC ஆம் இலக்க கடிதத்தின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ள அவதானிப்புகளிற்கு பின்வருமாறு பதிலளிப்பதற்கு விரும்புகிறேன்.

2014 இன் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்தி சட்டத்தின் 3(ஈ), 5(ஈ) மற்றும் 5(உ) பிரிவுகளின் படி ஒழுங்குபடுத்தல் தேவைகளுக்கு கதிர்வீச்சு பாதுகாப்பு சேவைகளை வழங்க அணுசக்தி சபை நடவடிக்கை எடுக்கலாம். இதற்காக மேற்குறித்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சபைக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளதால், ஒழுங்குபடுத்தல் பேரவையிடமிருந்து விசேட ஒப்புதல் பெற வேண்டிய அவசியமில்லை. சட்டத்தின் பிரிவு 18 இன் படி, ஒழுங்குபடுத்தல் பேரவை அயனியாக்கும் கதிர்வீச்சைப் பயன்படுத்தும் இடங்களுக்கே உரிமம் வழங்குவதுடன் சேவை வழங்குநர்களுக்கு உரிமம் வழங்குவதற்கான அதிகாரம் வழங்கப்படவில்லை. அதன்படி, சபை வழங்கும்

சேவைகளிற்காக பேரவை உரிமம் வழங்குவதில்லை. ஆனால் சபையால் கதிரியக்க பொருட்களைப் பயன்படுத்துவதற்காகவும் அவற்றை வைத்திருப்ப தற்காகவும் பேரவையால் உரிமம் வழங்கப்பட்டு கட்டுப்படுத்தப்படுகிறது.

எனவே, மேற்படி கருமங்களை நிறைவேற்று வதற்காக ஒழுங்குபடுத்தல் பேரவையின் ஒப்புதல் அணுசக்திச் சபைக்குத் தேவையில்லை என்பதுடன் சட்டத்தின் பிரிவு 12 (ஓ) இன் பிரகாரம் பிற கதிர்வீச்சு பாதுகாப்பு சேவை வழங்குநர்கள் காணப்படுமிடத்து அவற்றைப் பயன்படுத்துவ தற்கான பொறிமுறையொன்று எதிர்காலத்தில் உருவாக்கப்படும்.

(ஈ) **சட்டத்தின் 49 ஆம் பிரிவின் படி பேரவையானது, பாதுகாப்பு உடன்படி க்கையின் கீழ் அடங்கியன உள்ளிட்ட சர்வதேச கடப்பாடுகளுக்கும் பொறுப்பு டைமைகளுக்கும் இணங்கியொழுகி, இச்சட்டத்தின் கீழான கட்டுப்பாட்டுக்கு அமைவாக இலங்கைக்குள் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செய்யப்படும் அணு பொருள், சாதனங்கள் மற்றும் தொழினுட்பவியல் அடங்கிய நிரலொன் றைத் தயாரித்தல் வேண்டும். மேலும், அவ்வாறு தயாரிக்கப்பட்ட நிரலுக்கு போதியளவு பிரசித்தப்படுத்தலை பேரவையால் தீர்மானிக்கப்படுகின்ற முறையில் வழங்குதல் வேண்டுமென்ப துடன், அத்தகைய நிரல் வர்த்தமானியில் வெளியிடப்படுதலும் வேண்டும். இருப்பினும், ஒழுங்குபடு த்தல் பேரவையால் இதுவரையிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட் டிருக்கவில்லை. இலங்கையினால் 2018 ஆம் ஆண்டில் மேலதிக சாசனத்திற்காக அனுமதி வழங்கப்பட்டதாக சர்வதேச அணுசக்தி முகவர் நிலையம் அதன் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ள போதிலும், அந்த நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்து பேரவையால் பின்தொடர் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.**

இந்தச் சட்டத்தின் கட்டுப்படுத்தப்பட்ட உருப்படிகளாக கருதப்படுவது மேலதிக நெறிமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டுப்படுத்தப்பட்ட உருப்படிகளாகும். மேலதிக நெறிமுறையில் இதுவரை இலங்கை கையெழுத்திடவில்லை என்பதுடன் அவ்வாறு கையொப்பமிடுவதன் மூலம் இலங்கைக்கு ஒரு விசேட வரப்பிரசாதம் கிடைப்பதில்லை. இந்த நெறிமுறையில் கையெழுத்திடுவதற்கு சர்வதேச அணுசக்தி முகர்வ் நிறுவனம் உள்ளிட்ட சில நாடுகள் எமது நாட்டடைக் கோரியிருந்த போதிலும், இந்த நெறிமுறையில் கையெழுத்திடுவதன் மூலம் அதிலுள்ள தேவைப்பாடுகளை பூர்த்தி செய்ய முற்படுகையில் நிதி ரீதியாகவும் நிறுவன ரீதியாகவும் எமது நிறுவனத்திற்கும் இது தொடர்பில் செயற்பட வேண்டிய பிற அமைப்புகளுக்கும் ஒரு பாரிய பொறுப்பு ஏற்படும். மேலும், இது தொடர்பில் சட்டங்களை உருவாக்காமல் இதனை இலங்கையில் செயல்படுத்த முடியாது. எனவே, இந்த நெறிமுறையில் கையெழுத்திடுவதை துரிதப்படுத்துமாறு கோருவது ஒழுங்குபடுத்தல் பேரவைக்கான முக்கிய பணியாக காணப்படவில்லை. எனவே, கட்டுப்படுத்தப்பட்ட பொருட்களை வர்த்தமானியில் வெளியிடுவதை இந்த மேலதிக நெறிமுறையில் கையொப்பமிடப்படுவதற்கான தீர்மானம் எடுக்கப்படும் வரை செய்ய முடியாதுள்ளது. இருப்பினும், இதற்கான ஏனைய விதிகளைத் தயாரிக்க அதிக காலம் எடுக்கும் என்பதுடன், இதனை முன்னுரிமை பணியாக பேரவை அடையாளம் காணவில்லை.

(உ) **சட்டத்தின் 69 வது பிரிவின்படி, அயனியாக்கும் பொருட்களின் அகழ்வுகள் மற்றும் செயலாக்க நடவடிக்கைகளில் ஈடுபடுத்தும் நபர்களால் இணக்கப்பாடு வழங்கப்பட்ட வேண்டிய அனைத்து தொழிலாளர்கள், பொதுமக்கள் மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கான தேவைகள் பேரவையால் விதிகளின் மூலம் வகுக்கப்பட வேண்டிய போதிலும், அத்தகைய விதிகள்**

எதுவும் உருவாக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 1999 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க அணுசக்தி பாதுகாப்பு ஒழுங்கு விதிகளிலுள்ள அயனியாக்கும் கதிர்வீச்சு பாதுகாப்பு குறித்த 4 ஆவது ஒழுங்குவிதியின் படி கதிரியக்க படிவுகளை அகழ்தல், அரைத்தல் மற்றும் செயலாக்குவதற்காக பேரவை யின் முன் அனுமதியை பெற்றுக் கொள்ள வேண்டும். ஆனால் அத்தகைய இடங்களுக்கு உரிமம் வழங்குவதற்கு தேவையான பணிகளை பேரவை செய்திருக்கவில்லை. இதன் விளைவாக, உரிமக் கட்டணம், ஆய்வுக் கட்டணம் மற்றும் கதிர்வீச்சு நிலை பரிசோதனை ஆகியவற்றிலி ருந்து அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய வருவாயை இழக்கப்பட்டு ள்ளதுடன் அவ்வாறே சுற்றுச்சூழல், பொதுமக்கள் மற்றும் தொழிலாளர் களின் பாதுகாப்பை சட்டப்பூர்வமாகப் பாதுகாக்க பேரவை தவறியிருந்தது.

2014 இன் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்தி சட்டத்தின பிரிவு 69 இலுள்ள விடயங்கள் தொடர்பில் விதியொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், தற்போது இவ்வாறான செயற்பாடுகள் இலங்கையில் குறைவாக இருப் தால் அவ்வாறான விதியைத்தயாரிப்பது முன்னுரிமை பணியாக இனங்காணப்படவில்லை. எவ்வாறாயினும், இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுகின்ற இடங்களில் சுற்றாடல், பொதுமக்களம் மற்றும் ஊழியர்களைப் பாதுகாப்பதற்காக அயனியாக்கல் பாதுகாப்பு விதிமுறைகள் அயனி பாதுகாப்பு விதிமுறைகளின் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதுடன், சில ஆய்வுகளை மேற்கொண்டு பொதுமக்கள், ஊழியர்கள் மற்றும் சுற்றாடலின் பாதுகாப்புக் கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் அந்த அறிவுறுத்தல்கள் செயற்படுத்தப்படுகின் றன. இவ்வாறான இயற்கை கதிரியக்க நடவடிக்கைகளுக்கான உரிமம் வழங்குதல் சட்டத்தின் படி செய்யப்பட முடியாததால் உரிமம் வழங்குதலின் வருமான இழப்பு எதுவும் ஏற்படவில்லை. இருப்பினும், நிறுவனங்களின் கோரிக்கைக்கு ஏற்ப அவ்வாறான இடங்கள் பேரவையால் பரீட்சிக்கப்படுகையில் கட்டணம் அறவிடப்படுகின்றமையால் வருமானம் உழைக் கப்பட்டுள்ளது. தற்போது இலங்கையில் அவ்வாறான இரண்டு இடங்கள் மட்டுமே உள்ளன. மேலும் நீங்கள் சுட்டிக் காட்டியுள்ள படி அயனியாக்கல் பிரமாணங்களிலுள்ள 4 ஆம் பிரிவின் பிரகாரம் கதிரியக்க படிவுகளை அகழ்தல், அரைத்தல் மற்றும் பொதியிடுவதற்காக பேரவையின் முன்கூட்டிய அனுமதி பெறப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், இதுவரை இல ங்கையில் கதிரியக்க படிவுகளின் அகழ்வுகள் இடம்பெறவில்லை. எனவே, கணக்காய்வில் இது தொடர்பில் குறிப்பிடுவது பொருந்தாது. மேற்கூறிய அயனியாக்கல் படிவுகளை அகழ்தல் மற்றும் அரைத்துப் பொதியிடுதல் நடவடிக்கைகளை செயல்படுத்துதல் தொடர்பில் விதிகளைத் தயாரிப்பதற்காக எமது நிறுவனத்தில் இந்தத் துறையைப் பற்றிய அறிவு படைத்த ஆட்கள் முகவர் இல்லாததால், எதிர்காலத்தில் சர்வதேச அணுசக்தி நிறுவனத்திடமிருந்து நிபுணத்துவ உதவியைப் பெறுவதற்கு எதிர்பார்க்கின்றோம்.

(ஊ) **சட்டத்தின் பிரிவு 86(1) இன் படி, அமைச்சர் 86(2)(அ) முதல் (ஏ) வரையிலான விடயங்கள் தொடர்பாக ஒழுங்குவிதிகளைத் (Regulations) தயாரித்து, பிரிவுகள் 86(3) மற்றும் 86(4) இன் படி வர்த்தமானியில் வெளியிடப்பட்டு, அவை பாராளுமன் றத்தின் ஒப்புதலுக்காக பாராளுமன்ற த்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதி வரையிலும் சட்டத்தில் குறிப்பிடப்பட்டு ள்ள எந்தவொரு விடயம் தொடர்பி லான கட்டளைகள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை:-**

2014 இன் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்தி சட்டத்தின் பிரிவு 86(2) முதல் (ஏ) வரையிலான விடயங்களைத் தவிர்த்து ஏனைய அனைத்துக் கட்டளைகளும் தயாரிக்கப்பட்டு முடிவுறுத்தப்படும் நிலையில் உள்ளன. பிரிவு 86 (எ) இன் பிரகாரம் உரிய பிரமாணங்கள் வரையப்பட்டு சட்டமியற்றுவோரின் அங்கீகாரத்திற்காக அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. 86(2) (அ) (ஆ) (இ) (ஈ) (உ) (ஊ) ஆகிய பந்திகள் மூலம் சொல்லப்படுகின்ற அனைத்துக் கட்டளைகளும் தற்போது தயாரிக்கப்பட்டுள்ள கதிர்வீச்சு பாதுகாப்பு மற்றும் கதிர்வீச்சு மூலங்களின் அவதானம் தொடர்பான கட்டளைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது டன் இந்த கட்டளைகள் பூரணப்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தக் கட்டளைகள் இறுதிக் கட்டத்தில் காணப்பட்ட சந்தர்ப்பத்தில் சர்வதேச அணுசக்தி முகவர் நிறுவனத்தின் ORPAS அறிக்கையிலுள்ள பரிந்துரைகள் மற்றும் கதிர்வீச்சு பொருட்களை அகற்றல் நிலைகள்)Liquid Radioactive Discharge Levels) என்பவற்றை இந்தக் கட்டளைகளில் உள்ளடக்க வேண்டிய தேவை ஏற்பட்டதால் இந்த பிரமாணங்கள் மீள தயாரிக்கப்பட்டு வருவதுடன், 2023 ஆம் ஆண்டின் போது முடிக்கப்பட்டு அமைச்சுக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மேலே குறிப்படப்பட்டுள்ள 86 (2) (ஏ) இலுள்ள கட்டளை முன்னுரிமைப் பணியாக அடையாளம் காணப்படவில்லை.

(எ) **சட்டத்தின் பிரிவு 87(1) (அ) முதல் (ஏ) வரை குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக பேரவை விதிகளை (Rules) உருவாக்கி, பிரிவுகள் 87(2) மற்றும் 87(3) இன் படி வர்த்தமானியில் வெளியிடப்பட்டு, அவை பாராளுமன் றத்தின் ஒப்புதலுக்காக பாராளுமன்ற த்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதி வரையிலும் சட்டத்தில் குறிப்பிடப்பட்டு ள்ள எந்தவொரு விடயம் தொடர்பி லான விதிகள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதற்குப் பதிலாக, 1969 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க அணுசக்தி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்டு நீக்கப்பட்டிருந்த 1999 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க அணுசக்தி பாதுகாப்பு ஒழுங்குவிதி களிலுள்ள அயனியாக்கும் கதிர்வீச்சு பாதுகாப்பு குறித்த விதிமுறைகள் திரும்பப் பெறப்பட்டு தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டிருந்தன. அந்த ஒழுங்குவிதிகளை உருவாக்க பயன்படுத்தப்பட்ட 22 ஆண்டுகளுக்கும் மேல் பழமைவாய்ந்த சர்வதேச கதிர்வீச்சு பாதுகாப்பு பரிந்துரைகள் தற்போது மாற்றமடைந்து காணப்படுகின்றன.**

மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு 2014 இன் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்தி சட்டத்தின் பிரிவு 87(1) (ஈ) உடன் தொடர்புடைய விதியான கதிர்வீச்சு தொழிலாளர்களின் தகுதிக்கான கருதுகோள் விதி ஏற்கனவே வரையப்பட்டு சட்ட வரைவுத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேலும், சுகாதார அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது எழுந்த கருத்துக்கள் முற்றும் முன்மொழிதல்கள் காரணமாக வரையப்பட்ட விதிக்கு சில திருத்தங்களையும் விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள கதிர்வீச்சு ஊழியர்களின் பதிவேட்டிற்கு சில திருத்தங்களையும் செய்ய வேண்டி இருப்பதனால் தற்போது அந்தத் திருத்தங்களும் செய்யப்பட்டு அமைச்சிற்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

பிரிவு 87(1) (உ) மற்றும் (ஊ) இல் காட்டப்பட்டுள்ள விதிகள் முன்னுரிமையானவையாக கருதப்படாமையால், இதில் உள்ளடங்க வேண்டிய விதிகள் இதற்கு முன்னர் காணப்பட்ட 1969 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க அணுசக்தி அதிகாரசபை சட்டத்தின் பிரிவு 18 இன் கீழ் செய்யப்பட்ட சட்டத்தால் மேவுகை செய்யப்படுகின்றது. மேலும், சட்டத்தின் (ஒ) மற்றும்

(ஒ) இன் கீழ் உள்ள விதிகள் முன்னுரிமையாக அடையாளம் காணப்படவில்லை என்பதுடன், இங்கு (ஆ) இன் கீழ் தரப்பட்டுள்ள விடயம் தொடர்பான விதி வரைவுப் பிரமாணத்தில் குறிப்பிடப்படவில்லை. எனவே, இந்த விடயம் ஒரு விதியை உருவாக்க போதுமானதல்ல. இங்கு (அ) மற்றும் (இ) இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளைத் தயாரிக்க அறிவுபடைத்த உத்தியோகத்தர்கள் இல்லை என்பதால் சர்வதேச அணுசக்தி முகவர் நிலையத்தின் ஒத்துழைப்புடன் முன்னுரிமை அடிப்படையில் இவற்றை தயாரிப்பதற்கு பேரவை நடவடிக்கை எடுத்துவருகின்றது என்பதை இங்கு தயவுடன் குறிப்பிடுகின்றேன். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள 87(அ) இற்குரிய ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகள் தற்போது சர்வதேச அணுசக்தி முகவர் நிலையத்தின் கதிர்வீச்சுப் பொருட்களை பாதுகாப்பாக போக்குவரத்துச் செய்ய வேண்டிய பிரமாணத்தின் படி செயற்படுத்தப்படுவதுடன், 87(இ) பிரிவுக்குரிய நடவடிக்கைகள் தேசிய அணு மற்றும் கதிர்வீச்சு அனர்த்த முகாமைத்துவத் திட்டத்தின் படி செயற்படுத்தப்படுகின்றன.

3. ஏனைய அவதானிப்புகள்

(அ) 1992 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் சட்டத்தின் பிரிவு 33 மற்றும் 2009 ஆம் ஆண்டின் 66 ஆம் இலக்க சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் திருத்தச் சட்டத்தின் படி, அமைச்சர் மற்றும் வேறு எந்த அமைச்சரின் ஒப்புதல் இன்றி கதிரியக்கத் தனிமங்களைக் கொண்ட எந்தவொரு கனிமத்தையும் ஏற்றுமதி செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது. அதற்கமைய, இரண்டு பொதுத்துறை மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு கனிய மணல் ஏற்றுமதிக்கான உரிமத்தை பெற விண்ணப்பிக்கும் போது கனிய மணலில் கதிரியக்க பொருட்கள் இல்லை என்ற பேரவையின் பரிந்துரையுடன் விண்ணப்பிக்குமாறு புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்க பணியகம் குறித்த நிறுவனங்களை அறிவுறுத்தியிருந்தது. அதன்படி கனிய மணலில் கதிரியக்க பொருட்கள் உள்ளதா இல்லையா என்பது குறித்து பேரவை தனது பரிந்துரையை செய்திருக்க வேண்டும். இலங்கை அணுசக்திச் சட்டத்தின் 87(2) மற்றும் 87(3) பிரிவின்படி, பேரவையானது சர்வதேச நியமங்களின் ஒழுங்குவிதிகளை தனது விதிகளாகப் பயன்படுத்துவதாயின், அந்த விதிகள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட வேண்டும். ஆனால் அத்தகைய ஒப்புதல் இல்லாமல், சர்வதேச கதிர்வீச்சுப் பொருட்களின் போக்குவரத்திற்கான ஒழுங்குவிதியி லுள்ள)IAEA SSR - 6) விதியினைப் பயன்படுத்தி கதிரியக்கம் கொண்ட கனிய மணல்களை ஏற்றுமதி செய்வதற்கு மீளாய்வாண்டின் போது 33 சந்தர்ப்பங்களில் பேரவை ஒப்புதல் அளித்திருந்தது. மேலும், இலங்கை அணுசக்தி சட்டத்தின் பிரிவு 5(ஈ) இன் படி, ஒரு பொருளின் அயனியாக்கும் கதிர்வீச்சு அளவை தீர்மானிக்க பரிசோதனை (testing) நடத்தும் அதிகாரத்தை அணுசக்தி சபையே கொண்டுள்ளது. ஆனால் மணலிலுள்ள கதிரியக்க அளவுகளை பேரவை அங்கீகரிப்பது தரப்புகளுக்கிடையில் நல்லுறவு மோதலை)conflict of interest) உருவாக்கும் என்பது அவதானிக்கப்பட்டது.

2014 இன் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்தி சட்டத்தின் பிரிவு 90(2) ஐ பிரிவின் பிரகாரம் 1999 இன் அயனியாக்கல் பாதுகாப்பு தொடர்பான பிரமாணங்கள் அமுலாக்கப்பட்டுள்ளதுடன், அந்தப் பிரமாணங்களிலுள்ள 51 ஆம் பிரிவின் கீழ் எவரேனும் ஆளொருவர் பேரவையின் அங்கீகாரமின்றி கதிர்வீச்சு மூலங்களை போக்குவரத்துச் செய்யக் கூடாது. போக்குவரத்துக்கான அங்கீகாரம் இந்தப் பிரமாணத்தின் படி

வழங்கப்படுவதுடன், கதிர்வீச்சுப் பொருட்களின் போக்குவரத்துக்குத் தேவையான விபரமான தெவைப்பாடுகள் தற்போது தயாரிக்கப்பட்டிராமையால் சர்வதேச கதிர்வீச்சுப் பொருள் போக்குவரத்து பாதுகாப்பு பிரமாணத்தின் (IAEA SSR -6) சட்டவிதிகள் இதற்காகப் பயன்படுத்தி அதன் கீழ் அங்கீகாரம் வழங்கப்படுகின்றது. நீங்கள் குறிப்பிட்டுள்ளவாறு சட்டத்தின் 05(ஈ) இன் கீழ் அணுசக்தி சபைக்கு பரிசோதனைச் சேவைகளை வழங்குவதற்காக அனுமதி வழங்கப்பட்டிருப்பது அது ஒழுங்குபடுத்தும் நிறுவனமாக காணப்படாமையினாலாகும். ஆதன்மூலம் ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைக்குத் தேவையான அனைத்துப் பரிசோதனை நடவடிக்கைகளும் அதனைக் கொண்டு செய்யவேண்டிய அவசியம் காணப்படுவதில்லை. மேலும், சட்டத்தின் எந்தவொரு இடத்திலும் பேரவைக்கு மாதிரிகளை பரிசோதிக்க முடியாது எனக் குறிப்பிடப்படாததுடன் சட்டத்தின் 12 (க) இன் கீழ் மாதிரிகளை சேகரித்து பரிசோதனை மேற்கொள்ள முடியும். மேலும் சட்டத்தின் 10(ஆ) இன் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி பேரவைக்கு கதிர்வீச்சிலிருந்து ஆட்களையும் சுற்றாடலையும் பாதுகாப்பதற்கு எந்தவொரு நடவடிக்கையினையும் மேற்கொள்ள முடியும். அதற்கமைய தேவையான விடத்து மாதிரிகளைப் பெற்று பகுப்பாய்வு செய்யும் பொறுப்பு பேரவைக்கு வழங்கப்பட்டுள்ளது. விசேடமாக இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செய்யப்படுகின்ற உணவுப் பொருட்கள் சாராத பொருட்களில் கதிர்வீச்சுக்கள் காணப்படும் என்ற ஐயப்பாடு நிலவுமாயின் அது தொடர்பில் எமக்கு அறிவித்த பின்னர் பொருத்தமான மாதிரிகளைப் பெற்று சட்டத்தின் 12 (க) இலுள்ள ஏற்பாடுகளின் படி பரிசோதனைகளை மேற்கொண்டு அதற்கான அங்கீகாரத்தை துரிதமாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செய்யப்படுகின்ற இவ்வாறான பொருட்களிற்கு மூன்று நாட்களிற்குள் அங்கீகாரம் வழங்க வேண்டியிருப்பதால் இதற்காக தாமதங்கள் ஏற்படுமாயின் அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய வருமானம் இழக்கப்படுவதுடன், நாட்டிற்கு கிடைக்கக் கூடிய கட்டளைகளும் கிடைக்காது போவதற்கான சாத்தியம் நிலவுகின்றது. ஆகையால் இவ்வாறான மாதிரிகளைப் பரிசோதிப்பதற்காக போதிய உபகரணங்களுடன் கூடிய தனியான ஆய்வுகூடமொன்று பேரவையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

உணவுப் பொருட்களில் உள்ளடங்கியுள்ள கதிர்வீச்சுத் தன்மையை பரிசோதிக்கும் அதிகாரம் தற்போது ஒழுங்குபடுத்தல் பேரவைக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆகையால் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்வதற்கான அங்கீகாரங்களை வழங்குவதற்காக மேற்கொள்ளப்படுகின்ற ஆரம்பப் பரிசோதனைகளிற்காக கட்டணம் அறவிட வேண்டிய தேவை அணுசக்தி சபைக்கு இல்லை. ஆகையால், இவ்வாறான ஏற்றுமதி மற்றும் இறக்குமதிகளிற்காக பேரவையால் பரிசோதனைகளை மேற்கொள்வது தொடர்பில் சட்டரீதியான சிக்கல்கள் ஏற்படுவதில்லை.

(ஆ) சர்வதேச பாதுகாப்பான கதிரியக்கப் பொருள் போக்குவரத்து ஒழுங்கு விதிகளின் (IAEA SSR - 6) படி ஒரு பொருட் கொள்கலனில்)consignment) இருக்கக்கூடிய அயனியாக்கும் கதிர்வீச்சின் அளவு எல்லை விஞ்சியுள்ள போது, தொடர்புடைய பொருட் கொள்கலனின் கதிர்வீச்சு மூலம் சாரதிக்கு, சாரதியின் உதவியாளருக்கு, சாலைகளில் பயணிக்கும் பொதுமக்கள் மற்றும் சுற்றுச்சூழலுக்கு வெளிப்படும் கதிர்வீச்சின் அளவை அளவிடுவத ற்காக குறித்த மண்ணிலிருந்து பெறப்பட்ட மாதிரிகளின் ஆய்வக பரிசோதனை அறிக்கைகளிலிருந்து பெறப்பட்ட அதே அளவு மணல் அந்தந்த கொள்கலன்களில் ஏற்றப்பட் டுள்ளது என்பதை பரிசோதிப்பதற்கா கவும் கொள்கலன்களிலுள்ள கதிர் வீச்சின் அளவை பரிசோதிப்பதற்கா கவும் தேவையான களப்பரிசோத னைகள் மேற்கொள்ளப்பட்டிரு க்கவில்லை. இதன் விளைவாக பரிசோதனைக் கட்டணமாக (Inspection fee) பேரவைக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 15,770,000 கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

சர்வதேச பாதுகாப்பான கதிரியக்கப் பொருள் போக்குவரத்து ஒழுங்கு விதிகளின் (IAEA SSR - 6) படி ஒரு பொருட் கொள்கலனில்)consignment) இருக்கக்கூடிய அயனியாக்கும் கதிர்வீச்சின் அளவு எல்லை விஞ்சியுள்ளதாக கணக்காய்வு அவதானிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் பொருளிருப்பு இயற்கையான கனிய மணலாக இருப்பதால் அவ்வாறான கதிர்வீச்சு எல்லை மீறல்கள் இதுவரை எமக்கு அறிவிக்கப்படவில்லை. சர்வதேச பாதுகாப்பான கதிரியக்கப் பொருள் போக்குவரத்து ஒழுங்கு விதிகளின் படி ஒரு பொருட் கொள்கலனில் இருக்கக்கூடிய அயனியாக்கும் கதிர்வீச்சின் அளவு எல்லை மீறப்படாதுள்ள சந்தர்ப்பங்களில் அதனைக் கதிர்வீச்சுப் பொருளாக வியாக்கியாணம் செய்ய வேண்டிய தேவை இல்லை என்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து வகையான கணிய மணல்களிலும் காணப்பட்ட அயனியாக்கல் கதிர்வீச்சு எல்லை நியமத்திலும் பார்க்க குறைவாகக் காணப்பட்டமையால் இந்த பொருளிருப்பு கதிர்வீச்சற்ற பொருளிருப்பாக கருதப்பட்டது. இது விஞ்ஞான ரீதியான விடயமாக காணப்படுவதுடன் அதனை தெளிவாக புரிந்து கொள்ளாமல் கணக்காய்வின் மூலம் எடுக்கப்பட்ட முடிவு என்பது தெளிவாகின்றது. இந்தப் பொருளிருப்பு கதிர்வீச்சற்றதாக காணப்பட்டமையால் அதன் பின்னர் அது தொடர்பில் எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்வதற்கு ஒழுங்குபடுத்தல் பேரவைக்கு நட்டரீதியான அதிகாரம் இல்லை. ஆகையால் கணக்காய்வின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ள அனைத்து விடயங்களும் எமது நிறுவனத்துடன் தொடர்பற்றவையாகும்.

(இ) **சர்வதேச அணுசக்தி முகவர் நிலையத்தால் வெளியிடப்பட்ட தொழில்சார் கதிர்வீச்சுப் பாதுகாப்பு மதிப்பீட்டு (ORPAS mission report) அறிக்கையின் படி தற்போதுள்ள வெளிப்பாட்டு சூழ்நிலைகள், திட்டமிட்ட வெளிப்பாடு சூழ்நிலைகள் மற்றும் அவசரகால வெளிப்பாடு சூழ்நிலை களை உள்ளடக்கியதாக கதிர்வீச்சு பாதுகாப்பு விதிமுறைகள் உருவாக்கப்பட வேண்டுமாயினும், பேரவையால் உருவாக்கப்பட்ட விதிமுறைகளில் தற்போதுள்ள வெளிப்பாடு சூழ்நிலைகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.**

தற்போது வரையப்பட்டுள்ள கதிர்வீச்சுப் பாதுகாப்புடன் தொடர்புடைய பிரமாணங்கள் IAEA இன் திட்டமிடல் பிரமாண வெளிப்பாட்டு நிலைமைகளின்)Planning Exposure Situation) அடிப்படையில் அமைந்தவையா கும். அவசர வெளிப்பாட்டு நிலைமைகளுடன்)Emergency Exposure Situation) தொடர்புடைய தேவைப்பாடுகள் தற்போது அங்கீகரிக்கப்பட்டுள்ள அணுவியல் அல்லது கதிரியக்கப் பொருட்கள் அனர்த்த முகாமைத்துவ திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அவ்வாறே நிலவுகின்ற வெளிப்பாட்டு நிலைமைகள் (Existing Exposure Situation) நாட்டில் காணப்படாமையால் அதற்குத் தேவையான பிரமாணங்களைத் தயாரித்தல் முக்கியத்துவம் வாய்ந்த பணியாக பேரவை இனங்காணவில்லை. இருப்பினும், தற்போது வரைவு செய்யப்பட்டுள்ள கதிர்வீச்சுப் பாதுகாப்பு தொடர்பான பிரமாணங்கள் மீண்டும் மீளாய்வு செய்யப்படுவதனால் பொருத்தமானவாறு மேற்குறிப்பிட்ட மூன்று வெளிப்பாட்டு நிலைமைகளையும் உள்ளடக்கும் விதத்தில் பிரமாணங்களை பூரணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஈ) **இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருட்களில் பொது சுகாதாரத்திற்கு தீங்கு விளைவிக்கும் அயனியாக்கும் கதிரியக்க பொருட்கள் இருப்பதை பரீட்சிப்பதற்காக 1995 ஜூலை 21 அன்று வெளியிடப்பட்ட வர்த்தமானி, தற்போதைய நுகர்வு முறைகளிற்கு**

ஏற்றவாறும் அணுசக்தி வெளியீட்டு நிலைமைகளுக்கு ஏற்றவாறும் திருத்தப்பட்டு வெளியிடப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக, தற்போது இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் பால் மாவுகளில் மாத்திரமே அயனியாக்கும் கதிரியக்கப் பொருட்கள் இருக்கின்றனவா என பரிசோதிக்கப்படுகின்றன.

தற்போது பிரசித்தப்படுத்தப்பட்டுள்ள ஒழுங்குபடுத்தல் விதிகளின் மூலம் அனைத்து உணவுப் பொருட்களுக்குமான கதிர்வீச்சு நிலைகள் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், எந்தவொரு அணு வெளிப்படுத்தல் காணப்பட்டாலும் எவ்வாறான நுகர்வு காணப்பட்டாலும் இந்த நிலைகளை மாற்றுவதற்கு தேவையேற்படுவதில்லை. இதற்கான காரணம் யாதெனில் எமது வலயத்திற்கு உட்பட்ட நாடுகளில் காணப்படுகின்ற கதிர்வீச்சு மட்டங்களைக் காட்டிலும் இலங்கையிலுள்ள கதிர்வீச்சு மட்டம் குறைந்ததாக காணப்படுகின்றமையாகும். மேலும், சர்வதேச சந்தையில் எமது மட்டத்தைக் காட்டிலும் குறைந்த மட்டத்தில் உணவுப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய நிலைமை காணப்படுவதால் இந்த மட்டங்களை திருத்துவதற்கு கருதப்படுவதில்லை. உண்மையாகவே தற்போதைய நுகர்வு முறைமைக்கு ஏற்றவாறான மற்றும் அணுகதிரியக்க வெளிப்பாட்டு நிலையுடன் பொருந்துகின்ற திருத்தங்களை மேற்கொள்கையில் இந்த மட்டங்களை உயர்த்த வேண்டிய தேவை ஏற்படுவதால் அதனை அவ்வாறு செய்ய வேண்டிய தேவை இதுவரை இலங்கையில் ஏற்படவில்லை. எந்த உணவுப்பொருள் தொகுதிக்காக பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை ஒழுங்குபடுத்தல் பேரவையே தீர்மானிக்க வேண்டியிருப்பதால் அது நிலைமைக்கேற்ப அந்தந்த சூழ்நிலைகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய விஞ்ஞான ரீதியான தீர்மானமாகும். துற்போது பால்மா தவிர்ந்த ஏனைய உணவுப் பொருட்களின் இறக்குமதியின் போது அவற்றை கதிர்வீச்சுப் பரிசோதனை செய்ய வேண்டிய தேவை ஏற்படாததுடன், தேவையற்ற பரிசோதனைகளை மேற்கொள்வதனால் சர்வதேச வர்த்தகத்திற்கு இடையூறு ஏற்படலாம்.

(உ) கதிரியக்க தொழில்நுட்பத்தைப் பயன்ப டுத்தி நோய்களைக் கண்டறிவதற்கும் (diagnosis) சிகிச்சையளிப்பதற்கும் (therapeutic) பயன்படுத்தப்படும் இயந்தி ரங்களின் அளவுத்திருத்தம் மற்றும் தரக்கட்டுப்பாட்டுத் தேவைகள் உரிம நிபந்தனைகளால் கட்டாயப்படுத்தப்படாததால், அந்த இயந்திரங்களிலிருந்து சேவைகளைப் பெறும் நோயாளிகள் தேவையற்ற முறையில் அயனியாக்கம் செய்யப்படுவதற்கான அபாயம் உள்ளதுடன் அது தொடர்பான சேவைகளை வழங்குவதன் மூலம் அரசாங்கத்திற்கு பெறக்கூடிய வருமானம் இழக்கப்படுகின்றமையும் அவதானிக்கப்பட்டது.

கதிர்வீச்சு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நோய்களைக் கண்டறிவதற்கும் சிகிச்சையளிப்பதற்கும் பயன்படுத்தப்படும் இயந்திரங்களின் அளவுத்திருத்தம் மற்றும் தரக் கட்டுப்பாட்டை உரிமதாரர் ஒழுங்கமைக்க வேண்டும் என்று கதிர்வீச்சு பாதுகாப்பு பிரமாணங்களின் 43 (ஈ) மற்றும் 48 இன் கீழ் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இதற்காக, நோய்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகின்ற மற்றும் அணு கதிரியக்க பரிசோதனைகள் நடத்தப்படும் நிறுவனங்களின் அலுவலர்களுக்கு சர்வதேச பயிற்சிகளின் மூலமும் உள்நாட்டில் நடத்தப்படும் பயிற்சி வகுப்புகள் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. தற்போது இதற்கு மேலதிகமாக, இந்த நடவடிக்கைகள் சுகாதாரத் திணைக்களத்தின் உயிரியல் மருத்துவப் பிரிவினாலும், தொடர்புடைய உபகரணங்களைப் பராமரிக்கும் தொடர்புடைய சேவை பிரதிநிதியினாலும் மேற்கொள்ளப்படுகின்றன. எனவே, இதற்காக பிரமாணங்கள் தயாரிக்கப்படவில்லை என்று கூறுவது சரியானதல்ல. மேலும் இந்த

நடவடிக்கைகள் அந்த நிறுவனங்களின் பயிற்சி பெற்ற அதிகாரிகள் மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களால் விதிமுறைகளின்படி செய்யப்பட வேண்டுமென்பதுடன் அரசாங்கத்திற்கு எந்த வருமானமும் கிடைக்கவில்லை என்பது சிக்கலாக உள்ளது. வழங்கப்படுகின்ற உரிமங்களில் இயந்திரங்களை அளவீடு செய்து அவற்றின் தரக் கட்டுப்பாடு செய்யப்பட வேண்டும் என்று ஏற்கனவே நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

(ஊ) 2021 ஆம் ஆண்டில், கதிரியக்க பாதுகாப்பு குறித்த திட்டமிடப்பட்ட தேசிய பயிற்சி செயலமர்வுகள் மற்றும் கதிரியக்க அவசரநிலைகள் மற்றும் ஆர்வமுள்ள தரப்பினர்களின் எதிர்கொள்ளல் குறித்த தேசிய பயிற்சி செயலமர்வுகள் எதுவும் மேற்கொள்ளப் பட்டிருக்காததுடன், அதே நேரத்தில் மீதமுள்ள திட்டமிடப்பட்ட பணிகளின் செயல் முன்னேற்றம் 60 முதல் 70 சதவீதம் வரை மாத்திரமாக இருந்தது.

2021 ஆம் ஆண்டில் நிலவிய கொரோனா தொற்று காரணமாக அரசாங்கம் நீண்ட காலமாக நாட்டை மூடிவைந்திருந்ததாலும், ஊழியர்களை அழைப்பதை நிறுவனம் மட்டுப்படுத்த வேண்டியிருந்ததாலும், வெளித் தரப்பினரை அழைத்து வருவதற்கு அரசாங்கம் சட்டங்களை இயற்றியிருந்ததாலும், இந்தப் பாடநெறிகளை நிகழ்நிலை மூலம் நடத்துவது நடைமுறைச் சாத்தியமற்றதாக காணப்பட்டதாலும் ஒழுங்குபடுத்தல் பேரவையால் திட்டமிடப்பட்ட கதிர்வீச்சு பாதுகாப்பு பயிற்சி வகுப்புகளை எதிர்பார்த்தபடி நடத்த முடிந்திருக்கவில்லை. ஆனால், 2020 ஆம் ஆண்டில், கொரோனா தொற்றுநோயால் ஒத்திவைக்கப்பட்ட மருத்துவத் துறையுடன் தொடர்புடைய ஒரு பாடநெறியையும் தேவையின் அடிப்படையில் 2021 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்ட தொழில்துறை தொடர்பான ஒரு பாடநெறியையும் 2021 ஆம் ஆண்டில் நடத்துவதற்கு ஒழுங்குபடுத்தல் பேரவைக்கு முடிந்திருந்தது.

2021 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் நடத்த திட்டமிடப்பட்டிருந்த கதிர்வீச்சு அவசரநிலை முகாமைத்துவம் குறித்த ஆர்வமுடைய தரப்பினர்களிற்கான பயிற்சி வகுப்பு, 2021 ஆம் ஆண்டில் நிலவிய கொரோனா தொற்றுநோய் காரணமாக ஆர்வமுள்ள தரப்பினர்களின் பங்கேற்பு குறைந்ததாலும், சர்வதேச அணுசக்தி நிறுவனத்தின் நிபுணர்களின் கோரிக்கையின் காரணமாகவும் நடத்த முடியவில்லை. ஆனால் 2023 ஆம் ஆண்டின் 1 வது காலாண்டில் இந்த ஆர்வமுள்ள தரப்பினர்களிற்கான பயிற்சி வகுப்பை நடத்த ஏற்கனவே ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. சர்வதேச அணுசக்தி முகவர் நிலையத்தின் நிபுணர்கள் வருகை தருவதும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

நன்றி
உங்கள் உண்மையுள்ள

சிட்னி கஜநாயக்க
தலைவர்
இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை.

செயலாற்றல் அறிக்கை– 2021
இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை

அறிமுகம்

இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையினை தாபித்தல்

2014 இன் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்திச் சட்டத்தினால் 2015 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்குவரும் வகையில் இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை ("பேரவை") தாபிக்கப்பட்டதுடன் மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சின் கீழ் செயற்படுகின்றது. சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், கதிர்வீச்சு அயனாக்கல் பரப்புகள் தொடர்பான பிரமாணங்களிற்கான பொறுப்பை பேரவை கொண்டிருப்பதுடன் கதிரியக்க மூலங்கள் தொடர்பான அவதானம் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல், அணுப் பாதுகாப்பு, அணு பொருட்களை பரப்பாதிருத்தல் மற்றும் பாதுகாப்பினை வழங்குதல் தொடர்பிலான சர்வதேச உடன்படிக்கைகளின் கீழ் இலங்கையின் பொறுப்பை உறுதிப்படுத்துவதற்காக பேரவை நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

பேரவையின் குறிக்கோள்கள்

பேரவையின் குறிக்கோள்களாவன:

(அ) அயனாக்கல் கதிர்வீச்சுக்கான வெளிப்பாடுகள் மற்றும் அதனை அண்மித்த இடர்களிலிருந்து ஆட்களையும் சுற்றாடலையும் பாதுகாப்பதற்காகவும் மூலங்கள் மற்றும் வசதிகளின் அவதானம் மற்றும் பாதுகாப்புக்காகவும் பொருத்தமான ஏற்பாடுகளை மேற்கொள்ளல்

(ஆ) கதிர்வீச்சு மூலங்கள், அணு பொருட்கள் மற்றும் ஏனைய கதிர்வீச்சு தன்மையுள்ள பொருட்கள் சம்பந்தமாக பௌதீக பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் மற்றும் அவ்வாறான பொருட்களை பயன்படுத்துகின்ற வசதிகளில் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல்.

(இ) இலங்கையினால் கைச்சாத்திடப்பட்டுள்ள உடன்படிக்கைகளிற்கு அமைய, அணுசக்தி துறையின் சர்வதேச நியமங்கள் மற்றும் பொறுப்புக்களுடன் இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துதல்.

பேரவையின் பிரதான பணிகள்

(அ) அயனாக்கல் கதிர்வீச்சினை பயன்படுத்துவதுடன் சம்பந்தப்பட்ட தொழிற்துறைகளிற்கு அனுமதிப்பத்திரம் வழங்குதல் மற்றும் அதனை புதுப்பித்தல், திருத்துதல், இடைநிறுத்துதல் அல்லது மீளப்பெறுதல்.

(ஆ) சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்டுள்ள தேவைப்பாடுகளுடனும் வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரங்களிலுள்ள நிபந்தனைகளுடனும் இணங்கியொழுகுதல்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக பரிசோதனைகளை நடாத்துதல்.

(இ) சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கப்பாட்டினை உறுதிசெய்து கொள்வதற்கும் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் அல்லது சட்டவிதிகள் மற்றும் வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரங்களிலுள்ள நிபந்தனைகள் உரிய முறையில் அமுலாக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

(ஈ) இலங்கையில் பயன்படுத்தப்படுகின்ற அனைத்து கதிர்வீச்சு மூலங்களினதும் தகவல்களை உள்ளடக்கிய தேசிய பதிவேடொன்றை பேணிவருதல்.

(உ) பேரவையின் ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகள் தொடர்பான தகவல்களை பொதுமக்கள், ஊடகங்கள் மற்றும் ஏனைய ஆர்வமுடைய தரப்பினர்களுக்கு வழங்குதல்

(ஊ) அயனாக்கல் கதிர்வீச்சு பாதுகாப்பு தொடர்பிலும், மூலங்கள், அணு மற்றும் ஏனைய கதிரியக்கப் பொருட்களின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தொடர்பிலும், கதிரியக்க கழிவு முகாமைத்துவம் தொடர்பிலும் தேசிய கொள்கைகள் மற்றும் உபாய வழிமுறைகளை உருவாக்குதல்.

(எ) சர்வதேச அணுசக்தி முகவர் நிலையம் மற்றும் ஏனைய அதனையொத்த சர்வதேச அமைப்புக்களினால் வெளியிடப்பட்டுள்ள சிறந்த நடைமுறைகளை வெளிப்படுத்தும் வகையில் கதிர்வீச்சு பாதுகாப்பு மற்றும் அயனாக்கல் கதிர்வீச்சு பிரயோகத்துடன் சம்பந்தப்பட்ட பிரமாணங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் நியமங்களை உருவாக்குதல்.

(ஏ) கதிர்வீச்சு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பில் பொதுமக்கள் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் மற்றும் கதிர்வீச்சின் ஆபத்தான தன்மைகள் மற்றும் பாதுகாப்புடன் தொடர்புடைய வழிமுறைகள் தொடர்பாக கதிர்வீச்சு தொழிலாளர்களை பயிற்றுவித்தல்.

(ஐ) கதிர்வீச்சு கழிவுப்பொருள் முகாமைத்துவத்தினையும் கதிர்வீச்சுப் பொருட்களின் போக்குவரத்தினையும் கண்காணித்தல்.

(ஒ) கதிர்வீச்சு வசதிகளை நிர்மாணிப்பதற்கான கட்டிடங்களின் திட்டங்களிற்கு அங்கீகாரம் வழங்குதல்.

(ஓ) கதிர்வீச்சுப் பொருட்களின் ஏற்றுமதி / இறக்குமதிகளிற்காக அங்கீகாரம் வழங்குதல்.

1. செயலாற்றல் - 2021

செயற்பாடு	*2020 திசெம்பர் 31 வரையான செயலாற்றல்*
1. விதிகள் மற்றும் கட்டளைகளை வரைதல்	➢ கதிர்வீச்சுத் தொழிலாளர்களின் தகைமைகளை உள்ளடக்கிய விதிகளைத் தயாரித்து அவதானிப்புக்காக சட்ட வரையுநர் திணைக்களத்திற்கு அனுப்பிவைத்தல். ➢ கதிரியக்க கழிவு முகாமைத்துவத்திற்கான தேசிய கொள்கைக்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன் அதனை அமைச்சுக்கு அனுப்பிவைத்தல். ➢ அனர்த்த முகாமைத்துவ மன்றத்திலிருந்து அணு அல்லது கதிரியக்க அவசர முகாமைத்துவ திட்டத்திற்கு அனுமதி பெறுதல்.
2. அனுமதிப்பத்திர நடைமுறை, அனுமதிப்பத்திர விண்ணப்பங்கள் மற்றும் அனுமதிப்பத்திர மாதிரி படிவங்களை வரைதல்	➢ 12 துறைகளிற்காக தயாரிக்கப்பட்ட அனுமதிப்பத்திர புதுப்பித்தல் விண்ணப்பங்கள் திருத்தப்பட்டு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
3. அயனாக்கல் கதிர்வீச்சு வசதிகளை பயன்படுத்துதல், அவற்றை பேணிச்செல்வதற்காக அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் மற்றும் மூலங்களை ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்வதற்கான அங்கீகாரங்களை வழங்குதல்	➢ 2021 இல் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை 421 ஆகக் காணப்பட்டதுடன் 606 ஏற்றுமதி மற்றும் இறக்குமதி அங்கீகாரங்கள் வழங்கப்பட்டன.
4. உணவுப் பரிசோதனைகளிற்கான சான்றிதழ்களை வழங்குதல்	➢ 919 சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.
5. அயனாக்கல் காதிர்வீச்சுக்குட்பட்ட வசதிகள் தொடர்பில் கண்காணிப்புப் பரிசோதனைகளை நடாத்துதல்	➢ நடாத்தப்பட்ட பாதுகாப்பு பரிசோதனைகளின் எண்ணிக்கை 164 ஆகும். ➢ மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகள் தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய தரவு முறைமையொன்று நாளதுவரையாக பேணப்படுகின்றது.
6. கதிர்வீச்சுப் பாதுகாப்பு மற்றும் இடர்களை அடிப்படையாகக் கொண்டு கட்டிட திட்டங்களை அங்கீகரித்தல்	➢ 99 கட்டிட திட்டங்களிற்கு அங்கீகாரங்கள் வழங்கப்பட்டன.

7. பேரவையின் புதிய ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள்	➢ ஊழியர் கோப்பினை அதிகரித்துக் கொள்வதற்காக உரிய மீளாய்வு மேற்கொள்ளப்பட்ட பின்னர் புதிய ஆட்சேர்ப்பு நடைமுறைகள் மற்றும் உரிய படிவங்கள் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. ➢ முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் அங்கீகரித்துள்ள நடைமுறையின் பிரகாரம் புதிதாக சட்ட உத்தியோகத்தர் ஒருவரை ஆட்சேர்ப்பதற்குத் தேவையான ஆரம்ப நடவடிக்கைகளை எடுத்தல். ➢ தொழில்நுட்ப உதவியாளர் பதவிக்காக வெளிவாரி விண்ணப்பதாரி ஒருவரை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பின்னர் நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு நியமனம் வழங்கப்பட்டது. ➢ ஆண்டின் போது 02 முகாமைத்துவ உதவியாளர்களுக்கு நியமனங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ➢ ஆண்டின் போது 03 விஞ்ஞான உத்தியோகத்தர்களையும் பணிப்பாளர் ஒருவரையும் நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
8. மூலதனச் சொத்துக்களை கொள்வனவு செய்தல்	➢ ஆண்டிற்கான கொள்வனவுத் திட்டத்தின் பிரகாரம், உரிய பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டன. 2021 இற்கான நிதி ஏற்பாடுகளிலிருந்து அலுவலக மற்றும் விஞ்ஞான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. ➢ 2021 இற்கான பாதீட்டின் மூலம் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 10 மில்லியனைப் பயன்படுத்தி கொள்வனவு செய்யப்பட்ட மூலதன உபகரணங்களிற்காக ரூபா 6.278 மில்லியன் செலவாகியது.
10. கணக்குகள் மற்றும் களஞ்சிய நடவடிக்கைகளிற்காக கணனி முறைமையொன்றை ஏற்படுத்துதல்	➢ கணனி முறைமையொன்று தாபிக்கப்பட்டதன் பின்னர் தற்போது கணக்குகள், நிதி, வழங்கல் மற்றும் களஞ்சியம் ஆகிய நடவடிக்கைகளிற்காக அந்தந்தப் பிரிவுகளின் மூலம் அது வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அத்துடன் அது நாளது வரையாக பேணப்பட்டு வருகின்றது.
11. பேரவையின் பயிற்சிப் பாடநெறிகள்/ கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகளை நடாத்துதல்.	பின்வரும் பயிற்சி நெறிகள் ஏற்பாடு செய்யப்பட்டன. • மருத்துவத் துறையில் கதிர்வீச்சு சிகிச்சையளித்தல் இயந்திரங்களை பாதுகாப்பாகவும் கவனமாகவும்

	பயன்படுத்துதல் தொடர்பான தேசிய பயிற்சிப் பாடநெறி (2021.12.13 – 2021.12.17) • என்சல் லங்கா கம்பனியின் கதிர்வீச்சு இயந்திர செயற்படுத்துனர்களிற்காக விசேட பயிற்சிப் பாடநெறி நடாத்தப்பட்டது. (2021.11.15 – 2021.11.17)
12. பெறுமதி பூச்சியமாகவுள்ள சொத்துக்களை மீள விலைமதித்தல்	➢ தொடர்புடைய சுற்றறிக்கைகளின் பிரகாரம், உரிய முறையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு, பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் 2021 ஆம் ஆண்டின் போது 81 பொருட்களின் மீளவிலைமதித்தல்கள் நாளதுவரையாக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டன.
13. கதிர்வீச்சுப் பொருட்களை உள்நாட்டில் போக்குவரத்துச் செய்கையில் கண்காணிப்புக்கு உட்படுத்துதல்	பின்வரும் கதிர்வீச்சு மூலங்களை போக்குவரத்துச் செய்வதற்குத் தேவையான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. • இலங்கை கெம்மா நிறுவனத்திற்கு கதிர்வீச்சு மூலங்களை போக்குவரத்துச் செய்தல்.
14. அனுமதிப்பத்திரங்களை வழங்குதலும் அனுமதிப்பத்திர உரிமையாளர்களின் தகவல்களை உள்ளடக்கிய கணனி தரவுக் களஞ்சியமொன்றை தயாரித்து நாளதவரையாக்குதல்	➢ 421 அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன. அனுமதிப்பத்திர உரிமையாளர்களின் தகவல்களை உள்ளடக்கிய கணனி தரவுக் களஞ்சியமொன்று தயாரிக்கப்பட்டு அனுமதிப்பத்திரங்களை வழங்குவதுடன் இணைந்த வகையில் தரவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.
14. இலங்கையிலுள்ள அனைத்து கதிர்வீச்சு மூலங்களினதும் தகவல்களை உள்ளடக்கி விதத்தில் தேசிய பட்டியலொன்றை தயாரித்தல்	➢ இலங்கையிலுள்ள அனைத்து கதிர்வீச்சு மூலங்களினதும் தகவல்களை உள்ளடக்கிய தேசிய பட்டியலொன்று MS Word இன் துணையுடன் தயாரிக்கப்பட்டு அது நாளதுவரையாக்கப்பட்டது. ➢ பேரவைக்கு தகவல் முறைமையொன்றை நிறுவுவதற்காக வன்பாகமொன்றையும் தேவையான உபகரணங்களையும் சர்வதேச அணுசக்தி முகவர் நிலையத்திடமிருந்து பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இந்த தகவல் முறைமையில் கதிர்வீச்சு மூலங்களின் தேசிய பட்டியலொன்றை தயாரிப்பதற்குத் தேவையான வசதிகள் காணப்படுவதுடன் குறித்த தரவுகள் அவ்வாறான தேசிய திட்டத்தை தயாரிப்பதற்காக தொடர்ந்து உள்ளடக்கப்பட்டு வருகின்றன.
15. உத்தியோகத்தர்களை பயிற்றுவித்தல்	➢ பல்வேறு துறைகளில் வெளிநாட்டு பயிற்சி நெறிகளில் உத்தியோகத்தர்கள் பங்குபற்றச் செய்யப்பட்டனர். 02

	உத்தியோகத்தர்கள் வெளிநாட்டுப் பயிற்சிகளில் பங்குபற்றச் செய்யப்பட்டனர். ➢ கதிர்வீச்சுப் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தொடர்பான துறைகளில் உள்நாட்டு பயிற்சிகள் மூலம் விஞ்ஞான உத்தியோகத்தர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர். ➢ புதிதாக ஆட்சேர்க்கப்பட்ட, 03 விஞ்ஞான உத்தியோகத்தர்கள் சிரேஷ்ட விஞ்ஞான உத்தியோகத்தர்களின் கீழ் தொடர்ந்தும் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றனர்.
16. தேவைக்கேற்ப தீர்மானிக்கப்படுகின்ற இருப்பினும் 2021 ஆம் ஆண்டினுள் திட்டமிடப்படாத நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல்	➢ அமைச்சு, தேசிய கணக்காய்வு மற்றும் ஏனைய நிறுவனங்களின் கோரிக்கைக்கு அமைய செயன்முன்னேற்ற அறிக்கைகள் மற்றும் நிதி அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டன. அவ்வாறே, தேவையான சந்தர்ப்பங்களில் செயல் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய கூட்டங்களில் பங்கேற்றல். ➢ அரசாங்க பயிற்சி வழங்கும் நிறுவனங்களின் கோரிக்கைக்கு ஏற்ப 01 உத்திகோகத்தர் பயிற்சிகளிற்காக அனுப்பிவைக்கப்பட்டு வெற்றிகரமாக பூரணப்படுத்தப்பட்டது. ➢ மாற்றம் செய்யப்பட்ட 22 அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டதுடன், 11 அமுலாக்கல் பரிசோதனைகள், கோரிக்கைக்கு அமைய 15 பரிசோதனைகள் மற்றும் அறிவிக்காது மேற்கொள்ளப்பட்ட 01 பரிசோதனை என்பன நடாத்தப்பட்டன. ➢ அனுமதிப்பத்திரம் பெற்றோரின் தரவுகள் மற்றும் ஏனைய தொடர்புடைய தகவல்களை உள்ளடக்கிய தரவுத்தளம் ஒன்று நாளதுவரையாக பேணப்படுகின்றமை. ➢ பேரவையின் தகவல் முறைமையில் (RAIS) பதிவுசெய்யப்பட்டுள்ள மூலங்களை நாளதுவரையாக்கியமை. ➢ அனுமதிப்பத்திரம் பெற்றோரின் வசதிகள் தொடர்பான தகவல்கள் பேரவையின் இணையத்தினூடாக வெளியிடப்பட்டமை.

	➢ கதிர்வீச்சு மூலங்களின் போக்குவரத்தை பரிசோதித்தல், கோரிக்கையின் பேரில் மேற்கொள்ளும் பரிசோதனைகள் மற்றும் கதிர்வீச்சு பாதுகாப்புச் சேவைகளை வழங்குதல். ➢ பேரவையின் விஞ்ஞான உத்தியோகத்தர்கள் சர்வதேச அணுசக்தி முகவர் நிலையத்தினால் நடாத்தப்படுகின்ற 85 இணையதள கூட்டங்களில் பங்குபற்றினர். ➢ தொழில்நுட்ப ஒத்துழைப்பின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட செயற்திட்ட பிரேரணையொன்றுக்கு சர்வதேச அணுசக்தி முகவர் நிலையத்தின் அங்கீகாரம் கிடைத்தது. ➢ பாதுகாப்பு உடன்பாட்டின் படி சர்வதேச அணுசக்தி முகவர் நிறுவனத்தின் பாதுகாப்பு பரிசோதகர்களால் பாதுகாப்பு பரிசோதனைகள் நடத்தப்பட்டன. ➢ ஒழுங்குபடுத்தல் பேரவையின் அவசர நிலை முகாமைத்துவ எதிர்கொள்ளல் அலுவலர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கான பயிற்சி பாடத்திட்டங்களை தயாரித்தல். ➢ அணு அல்லது கதிரியக்க அவசர அனர்த்த முகாமைத்துவ திட்டத்திற்கு அனர்த்த முகாமைத்துவக் குழுவின் ஒப்புதலை பெறுவதற்காக அது தொடர்பான விளக்கமளித்தல் சமர்ப்பிக்கப்பட்டது. ➢ அதிமேதகு சனாதிபதி மற்றும் பாதுகாப்பு செயலாளர் ஆகியோருக்கு இலங்கையின் அணுவாயுத பாதுகாப்பின் முன்னேற்றம் குறித்த விளக்கக்காட்சி வழங்கப்பட்டது. ➢ இலங்கையில் பயன்பாட்டில் உள்ள வகை 1 கதிரியக்க மூலங்களின் தற்போதைய பாதுகாப்பு பற்றிய பகுப்பாய்வை மேற்கொள்வதற்காக, பணிப்பாளர் நாயகம் தலைமையிலான குழுவொன்றை பாதுகாப்பு அமைச்சு நியமித்தது. அத்துடன், குழுவில் அங்கம் வகித்த அதிகாரி, பகுப்பாய்வை மேற்கொள்வதற்காக சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் கண்காணிப்பு விஜயங்களில் பங்கேற்று, அதற்கான அறிக்கையை தயாரித்து, பாதுகாப்பு அமைச்சிடம் சமர்ப்பித்துள்ளார். ➢ ஒழுங்குபடுத்தல் பேரவையால் நடத்தப்படும் கதிர்வீச்சு பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் தொடர்பான பயிற்சி பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டது.

	➢ சர்வதேச அணுசக்தி முகவர் நிலையத்தினால் நடத்தப்படும் EPRIMS, iNET-EPR போன்ற தகவல் பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டங்களுக்கு பங்களிப்பு செய்தல் ➢ "எக்ஸ்பிரஸ் போல்" கப்பல் விபத்தினால் சுற்றுச்சூழலிற்கு கதிரியக்கம் கசியவிடப்பட்டதா என்பதை கண்டறிய மாதிரிகளை சேகரித்து பரிசோதனை செய்தல். ➢ புதிய பதவிகள் உட்பட அத்தியாவசிய பதவிகளை உருவாக்குவதற்கான ஆட்சேர்ப்பு முறையை தயாரித்துச் சமர்ப்பித்தல். ➢ ஒழுங்குபடுத்தல் பேரவையால் நடத்தப்படும் பயிற்சி வகுப்புகளுக்கான பயிற்சி கையேட்டைத் தயாரித்தல். ➢ சர்வதேச சுகாதார ஒழுங்குமுறைகளின் (IHR-2005 ஒழுங்குமுறைகள்) படி உலக சுகாதார நிறுவனத்திற்கு ஆண்டுதோரும் சமர்ப்பிக்கின்ற அறிக்கைகளை அனுப்புதல் மற்றும் அதற்கான கூட்டங்களில் பங்கேற்றல்.

2. கணக்காய்வு ஐயவினாக்கள் மற்றும் கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை அமுல்படுத்துதல்

தொடர் இல.	கணக்காய்வு தொடர்பு இல.	இனங்காணப்பட்ட பிரதான பிரச்சினை அல்லது சிக்கல்	ஐயவினாக்கள் / கருத்துரைகள் தொடர்பில் எடுக்கப்பட்ட அல்லது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள்
01	1. 1.1 1.2	நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையிலுள்ள முனைப்பழியுள்ள அபிப்பிராயம் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்துக்கான அடிப்படை	

	(அ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 07 இன் படி, ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் ஒரு விடயத்தை மீள மதிப்பிடுகையில், குறித்த ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் வர்க்கம் முழுவது மாக மீள விலைமதிக்கப்படுதல் வேண்டிய போதிலும், அதற்கு முரணாக பேரவையால் முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட ரூபா 20,107,066 கிரயமுடைய தேர்ந்தெடுக் கப்பட்ட சொத்துக்கள் மாத்திரமே மீள விலைமதிக்கப்பட்டு ரூபா 4,342,620 விலைமதிப்பீட்டு மிகை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	ஒழுங்குபடுத்தல் பேரவை தொடங்கப்பட்ட திலிருந்து அதாவது 2015 முதல், கணக்கீட்டுக் கொள்கையாக, ஒவ்வொரு ஆண்டும் முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட சொத்துக்களை மட்டுமே மீள்மதிப்பீடு செய்யப்படுகின்றது. ஆனால் நீங்கள் சுட்டிக்காட்டிய படி, மீள்மதிப்பீட்டின் போது ஒவ்வொரு உபகரணமும் அல்லது பொருள் வகையும் அடையாளம் காணப்பட்டு, பணிப்பாளர் சபையின் ஒப்புதலைப் பெற்ற பிறகு, இதனைக் காட்டிலும் சிறந்த முறையில் அனைத்து உபகரணங்களையும் அல்லது பொருள் வகைகளையும் மீள் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
	(ஆ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இல. 07 இற்கு இணங்க ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை மீள் மதிப்பீடு செய்கையில் சொத்துக்களின் நியாய மான பெறுமதிகளை மதிப்பிடுவதற்காக ஒரு சுயாதீன மதிப்பீட்டாளர் பயன்படுத்தப்பட்டமை, பயன்படுத்தப் படும் முறைகள், குறிப்பிடத்தக்க அனுமானங்கள் மற்றும் நியாயமான மதிப்பீடுகள் செயற்பாட்டிலுள்ள சந்தையில் அவதானிக்கக்கூடிய விலைகளை நேரடியாகக் குறிப்பிட்டு சமீபத்திய	இந்த உருப்படிகளை மீள் மதிப்பீடு செய்கையில், 2021 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய உருப் படிகளின் மீள் மதிப்பீடு 2021 இல் பேரவையின் பணிப்பாளர் சபையால் நியமிக்கப்பட்ட மீள் மதிப்பீட்டுக் குழுவால் மேற்கொள் ளப்பட்டுள்ளன. அந்த நோக்கத்திற்காக, பின்வரும் கருதுகோள்கள் குழுவால் பயன்படுத்தப்பட்டது. கருதுகோள்கள் - 1. பொருட்களின் தற்போதைய சந்தை மதிப்பை பொருட்களின் கொள்முதல் விலையுடன் ஒப்பிடுதல். 2. இந்த பொருட்களின் தேய்மான சதவீதத்தின்

		சந்தை கொடுக்கல் வாங்கல்கள் அல்லது பிற மதிப்பீட்டு நுட்பங்களின் அடிப்படையில் சொத்துக்கள் அல்லது எந்த அளவிற்கு நிர்ணயம் செய்யப்பட்டமை என்பது தொடர்பில் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். இருப்பினும், பேரவையால் மீளாய்வாண்டில் முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட ரூபா 13,207,957 கிரயமுடைய 50 விஞ்ஞான உபகரணங்கள், ரூபா 622,800 தொகையான 6 மேசைக் கணினிகள் மற்றும் ரூபா 112,500 கிரயமுடைய மடிக்கணினிகள் முறையே ரூபா 414,425, ரூபா 14,160 மற்றும் ரூபா 2,870 ஆக மீள விலைமதிக்கப்பட்டிருந்ததுடன், இவ்வாறு மீள விலைமதிக்கையில் மேற்படி நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், சுயாதீன மதிப்பீட்டாளர் ஒருவர் நியமிக்கப்படாததால், மீள்மதிப்பீட்டு பெறுமதிகள் தொடர்பாக கணக்காய்வில் திருப்தி அடைய முடியவில்லை:-	அடிப்படையில் 2020 வரை தேய்மானத்தைக் கணக்கிடுதல். 3. அந்த தேய்மான பெறுமதியை அண்மித்த உயர் பெறுமதியாகக் கொண்டு, அதன்படி மீள் மதிப்பீடு செய்தல். நீங்கள் குறிப்பிட்டுள்ளபடி தற்போதைய சந்தை நிலவரமும் கருத்திலெடுக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த ஆண்டுகளில் இந்த பொருட்களின் சந்தைப் பொறுமதி மிகவும் குறைவாக இருந்ததுடன் பொருளின் நிலைமை, ஆயுட்காலம் மற்றும் உற்பத்தி ஆண்டுக்கு ஏற்ப இந்த மீள் மதிப்பீடு செய்யப்பட்டது. எனவே, நீங்கள் சுட்டிக்காட்டியுள்ள அண்மைக் காலத்தில் நடந்த உண்மையான சந்தை கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி அதிகமாக காணப்பட்ட போதிலும், தொடர்புடைய கணக்கு ஆண்டுகளின் பெறுமதி அதிகரித்திருக்கவில்லை. எனவே, அண்மைய அதிகரிப்பை இதற்குப் பயன்படுத்த முடியாது என்பதை நான் சுட்டிக்காட்டுகிறேன். மேலும், 03 வருடங்களுக்கு முன்னர் நாம் மதிப்பீட்டுச் சபைக்கு வெளி நபர் ஒருவரின் சேவையைப் பெறுவதற்கு முயற்சித்த போதிலும், விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தில் பொருத்தமான நபரைக் கண்டறிவது கடினமாக இருந்தது. மேலும் இந்த கருவிகளில் பல விஞ்ஞானக் கருவிகள் என்பதால், அவற்றை

			மீள் மதிப்பிடுவதற்கு குறித்த துறைசார் அறிவுடன் கூடிய சரியான நபர்களைக் கண்டுபிடிப்பது மிகவும் கடினமாகும். ஆனால் உங்களால் அறிவுறுத்தப்பட்டபடி, வெளியில் இருந்து பொருத்தமான ஒருவரைக் கண்டறியும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இல. 07 இன் விதிமுறைகளை கருத்தில் கொண்டு மீண்டும் இந்த கருவிகளை எதிர்வரும் ஆண்டில் மீள் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
	(இ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 07 இன் படி, ஒரு சொத்து பயன்படுத்தக்கூடிய நிலைக்கு உருவாக்கப்பட்ட பின்னர், நிலையான சொத்தாக அங்கீகரிக்கப்பட வேண்டும். இருப்பினும், 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்த முடியுமான நிலைக்கு கொண்டுவரப்படாத ஒரு விஞ்ஞானக் கருவியை இறக்குமதி செய்வதற்காக செலுத்தப்பட்ட ரூபா 1,613,206 தொகை நிலையான சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டு, அதற்காக ரூபா 2,210 தேய்மான ஏற்பாடும் செய்யப்பட்டிருந்தது.	நீங்கள் சுட்டிக்காட்டிய அவதானிப்புகள் தொடர்பில் எங்களின் நிலையான சொத்துப் பதிவேட்டை நாங்கள் பரீட்சித்ததுடன் உங்களிடமிருந்து பெறப்பட்ட தெளிவுபடுத்தல் களின் படி, எதிர்வரும் ஆண்டில் இலங்கை கணக்கீட்டு நியமம் இல. 07 தொடர்பாக முறையான கணக்கீட்டு முறையைப் பின்பற்ற திட்டமிட்டுள்ளோம் என்பதை அறியத்தருகி ன்றேன்.

	(ff)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 07 இன் படி, ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் ஒரு உருப்படியின் முன்கொண்டு செல்லும் தொகையானது, அது விற்கப்படு கையில் அல்லது அகற்றப்படுகையில் அதிலிருந்தான எதிர்கால பொருளாதார நன்மைகள் அல்லது சேவை வாய்ப்புகள் எதிர்பார்க்கப்படாத போது மட்டுமே புத்தகங்களிலிருந்து அகற்றப்பட முடியுமான போதிலும், அதற்கு முரணாக, ஒரு கண்காட்சிப் பொருளாக பயன்படுத்தப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த ரூபா 2,014,303 கிரயமான விஞ்ஞான உபகரண மொன்று மீளாய்வாண்டில் நிலையான சொத்துக்கள் பதிவேட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. அத்துடன், முன்னைய ஆண்டுகளில் நிலையான சொத்துக்கள் பதிவேட்டிலிருந்து கண்காட்சிப் பொருட்களாக பயன்படு த்தப்பட்டிருந்த 9 விஞ்ஞானக் கருவிகள் நீக்கப்பட்டிருந்தன. மேலும், முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட ரூபா 1,117,183 கிரயமான 4 விஞ்ஞான உபகரணங்களும் நிலைய	இங்குள்ள அனைத்து உபகரணங்களையும் மீள் மதிப்பீடு செய்வதற்காக 2021.08.06 அன்று நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்திற்கு ஞாபனப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அதனுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பொருட்களின் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களுக்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. அதன்படி, மேற்குறிப்பிட்ட பொருட்களின் பெறுமதி பூச்சியமாகிவிட்டதால், அவற்றை வேறு எந்த நோக்கத்திற்கும் பயன்படுத்த முடியாது என்பதால், அகற்றுவதற்கான பரிந்துரைகள் மேற்குறிப்பிட்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளன. புத்தகங்களில் இருந்து அகற்றுவதற்காக பொருட்களின் பட்டியல் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்டது. எனவே, 2017 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட பொருட் கணக்கெடுப்பின் போது இந்த பொருட்கள் பயன்படுத்த முடியாத பொருட்கள் என கண்டறியப்பட்டு, இந்த பொருட்களின் பெறுமதி பூச்சியமாக மாறியதையடுத்து இருப்புப் புத்தகங்களில் இருந்து நீக்கப்பட்டது. மேலும் இந்த பொருட்களை மதிப்பிட முடியாது என்பதால், அவற்றை இனி பொருட் பதிவேட்டில் வைத்திருப்பதில் எந்த பயனும் இல்லை என்பது ஒழுங்குபடுத்தல் பேரவையின் அபிப்பிராயமாகும். ஆகையால், கண்காட்சி நோக்கங்களுக்காக

		ான சொத்து பதிவேட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்தன. ஆனால் அவை எந்த அடிப்படையில் அகற்றப்பட்டன என்பது வெளிப்படுத்த ப்படவில்லை:-	ஒதுக்கப்பட்ட பொருட்களுக்கு பெறுமதி இல்லாத போதிலும், அடுத்த ஆண்டு முதல் அவற்றுக்கான நிலையான சொத்துப் பதிவேடு பராமரிக்கப்படும் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.
	(உ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இல. 07 இன் படி, சொத்துக்களுக்குப் பயன்படுத்தப்படும் தேய்மான முறையானது குறைந்தபட்சம் ஒவ்வொரு வருடாந்த அறிக்கையிடல் தேதியிலும் மீளாய்வு செய்யப்பட வேண்டுமென்பதுடன் சொத்தில் உள்ளடங்கியுள்ள எதிர்கால பொருளாதார நன்மைகள் அல்லது சேவையின் நுகர்வு முறையில் குறிப்பிடத்தக்க மாற்றத்திற்கான சாத்தியக்கூறுகள் ஏற்பட்டிருந்தால் அந்த மாற்றமேற்பட்ட வடிவத்தை வெளிப்படுத்தும் விதத்தில் தேய்விடல் முறை மாற்றப்பட்டு, அந்த மாற்றங்கள் கணக்கீட்டு மதிப்பீட்டின் ஒரு மாற்றமாக கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும், பேரவையால் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை:-	நீங்கள் சுட்டிக்காட்டியுள்ளபடி, இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 07 இன் 75 ஆம் பந்தியில், சொத்தில் உள்ளடங்கியுள்ள எதிர்கால பொருளாதார நலன்கள் அல்லது சொத்தில் உள்ள எதிர்பார்த்த சேவை சாத்திய நுகர்வு முறைகளில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டிருந்தால், அந்த மாற்றத்தை பிரதிபலிக்கும் வகையில் தேய்மான முறை மாற்றப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், ஒழுங்குபடுத்தல் பேரவை தொடங்கப்பட்டது முதல் இது வரையிலும் எளிமையான தேய்மான முறையின் கீழ் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் மீது உரிய தேய்மான சதவீதங்களின்படி, சொத்துக்கள் தேய்மானம் செய்யப்பட்டுள்ளன. இது கணக்குகளுக்கான குறிப்புகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், சபையின் தேய்மான முறையை மறுபரிசீலனை செய்வதற்கும் மாற்றுவதற்கும் எதிர்பார்த்த நுகர்வு முறையில்

			குறிப்பிடத்தக்க மாற்றம் எதுவும் இல்லாததால், தேய்மான சதவீதத்தை மாற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கவில்லை. ஆனால் கணக்காய்வில் காட்டப்பட்டுள்ள படி, பொருட்களின் பெறுமதி பூச்சியமாக மாறுவதற்கு முன்னர் அவற்றின் மதிப்பைக் கண்டறிந்து பொருத்தமான தேய்மானக் காலத்தை நிர்ணயிக்கும் பணியை அடுத்த ஆண்டு முதல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
	(ஊ)	மீளாய்வாண்டில், பேரவைக்கு கிடைத்திருந்த ரூபா 6,278,200 மூலதன மானியங்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 11க்கு இணங்க வருடத்திற்கான வருமானமாக இனங்காணப்பட்டு கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	உங்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்பு சரியானதாகும். அதன்படி, எதிர்வரும் கணக்காண்டுகளில் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 11 இற்கு அமைவாக உங்களது வழிகாட்டலின் பிரகாரம் மூலதன மானியத்தை ஆண்டின் வருமானமாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.
	(எ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 20 இன் படி, அருவச் சொத்துகளாக கணக்கிடப்பட வேண்டிய ரூபா 708,958 கிரயமுடைய கணினி மென்பொருளானது அருவச் சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	நீங்கள் சுட்டிக்காட்டிய கணினி மென்பொருள் பொதிக்கான கிரயமானது 2015 முதல் அலுவலக கணினிகள் (உருவச் சொத்துக்கள்) இன் கீழ் எம்மால் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் நீங்கள் கணக்காய்வில் சுட்டிக்காட்டியுள்ள படி, கணினி மென்பொருளுக்கான கிரயத்தை (அருவச் சொத்துக்கள்) இன் கீழ் கணக்கீடு செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை

			எடுக்கப்படும் என்பதையும் மேற்படி சொத்துக்களின் தேய்மான வீதத்தில் மாற்றமேற்படவிலை என்பதையும் தெரிவிக்க விரும்புகிறேன்.
	(ஏ)	2015 ஆம் ஆண்டில் இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை நிறுவப்பட்ட போது, அணுசக்தி அதிகார சபையிடமிருந்து ரூபா 14,044,902 சொத்துக்களும் ரூபா 5,414,755 பொறுப்புகளும் ஒப்படைக்கப்பட்டிருந் தன. அதன்படி, அரசிடமிருந்து பேரவைக்கு கிடைத்த நிகர மூலதன மானியம் ரூபா 8,630,147 என அந்த ஆண்டில் இனங் காணப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இந்த மானியத்திற்கு எதிரான வருடாந்த வருமான அங்கீகாரம் (பெறப்பட்ட மானியத்தின் காலத்தேய்மானம்) மானியத்தின் மொத்த பெறுமதியை விட அதிகமாக செய்யப்பட்டுள்ளதால், 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் அணுசக்தி அதிகாரசபைக்குரிய திரண்ட நிதியின் பெறுமதி ரூபா 3,812,121 வரவு மீதியாகக் காணப்பட்டது.	இது தொடர்பில் கணக்காய்வுடன் கலந்துரையாடுகையில் ஒழுங்குபடுத்தல் பேரவையால் பின்பற்றப்பட்ட கொள்கை மற்றும் திரட்டிய நிதியத்தில் வரவு மீதி காணப்பட்டமை சரியானது என்பதாக கூறப்பட்டது. அதன்படி, அடுத்த ஆண்டில் ஒரு குறிப்பின் மூலம் இந்த நிலைமையை நிதிக் கூற்றுக்களில் குறிப்பி டுவதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதுடன் அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

	2	**ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணத் தேவைப்பாடுகள் மீதான அறிக்கை** ----------	
	2.1.1 <

		அதிகாரச்சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத் திற்கான அடிப்படையின் கீழுள்ள 2.1(ஏ) பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள அவதானிப்புகளைத் தவிர்த்து, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபார்சுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப் பட்டுள்ளன.	
	2.2.2 **(அ)**	**சட்டங்கள் மற்றும் விதிகளுள்ள ஏற்பாடுகளிற்கான தொடர்பு** --- **2014 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை அணுசக்திச் சட்டம்.** **பிரிவு 14(1)** பேரவையானது விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரினால் நியமிக்கப்பட்ட அணு அறிவியல் மற்றும் தொழிநுட்பத்துறையில் அல்லது கதிர்வீச்சுப் பாதுகாப்புத் துறையில் நிபுணத்துவம் பெற்ற மூன்று ஆட்களையும் பேரவையின் குறிக்கோள்களுடன் தொடர்புபட்ட அல்லது	2014 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை அணுசக்திச் சட்டத்தின் பிரிவு 14(1) இன் படி பேரவைக்குரிய உறுப்பினர்கள் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரினால் நியமிக்கப்படுகி ன்றனர். இது தொடர்பில் செய்யப்படுகின்ற நியமனங்களிற்கு எவ்வித பரிந்துரைகளையும் செய்வதற்கு சட்டத்தில் ஏற்பாடுகள் எதுவும் பேரவைக்கு வழங்கப்படவில்லை. இது தொடர்பில் அமைச்சரிடம் அல்லது அமைச்சிடம்

		சம்பந்தப்பட்ட சட்ட அம்சங்களில் அனுபவம் பெற்ற ஆள் ஒருவரையும் சூழல் என்னும் விடயத்திற்கு குறித்தொதுக்கப்பெற்ற அமைச்சரின் அமைச்சினது அத்த கைய அமைச்சர் பெயர் குறித்து நியமிக்கப்படும் மேலதிக செயலாளர் அல்லது பணிப்பாளரொருவர் என்னும் தரத்திற்குக் குறையாத சிரேஸ்ட அலுவலர் ஒருவரையும் பேரவை அதன் பணிப்பாளர் சபையில் உறுப்பின ர்களாக கொண்டிருக்க வேண்டிய போதிலும், அணு அறிவியல் மற்றும் தொழிநுட்பத் துறையில் அல்லது கதிர்வீச்சுப் பாதுகாப்புத் துறையில் நிபுணத்துவம் பெற்ற ஆட்கள் பேரவைக்கு நியமிக்கப்படாததுடன் நான்கு உறுப்பினர்கள் மாத்திரம் நியமிக்கப்பட்டிருந்தனர்.	விசாரிப்பதற்கும் சட்டத்தில் ஏற்பாடுகள் எதுவும் பேரவைக்கு வழங்கப்படவில்லை. தற்போது வெற்றிடமாகக் காணப்படுகின்றன பேரவையின் உறுப்பினர் பதவிக்கு ஒருவரை நியமிக்குமாறு அண்மையில் இடம்பெற்ற அமைச்சின் செயன்முன்னேற்றக் கூட்டத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டது. அது தொடர்பில் மீண்டும் ஞாபகமூட்டிய பின்னர் அமைச்சரால் ஒருவரின் பெயர் முன்மொழியப்பட்டு எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
	(ஆ)	**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் கோவை** **நிதிப்பிரமாணம் 128(1)(கி)** --- சலுகை அடிப்படையில் மோட்டார் வாகன அனுமதிப்பத்திரத்திற்கு உரித்துள்ள திகதிக்கு முன்னர் 01 தொடக்கம் 06 ஆண்டுகளில் பேரவையின்	இந்தக் கணக்காய்வு அவதானிப்பு தொடர்பில் கடந்த பல வருடங்களாக இவ்விதம் இந்த விடயம் சுட்டிக் காட்டப்பட்டிருந்ததுடன், அந்த விடயங்களிற்காக பேரவையால் அவ்வப்போது

		5 உத்தியோகத்தர் களால் முதலாவது அனுமதிப்பத் திரம் பெறப்பட்டிருந்தமை கடந்த இரண்டு ஆண்டுகளின் கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக் காட்டப்ப ட்டிருந்தது. இருப்பினும், நிதிப் பிரமாணம் 128(1)(கி) இன் பிரகாரம் இது தொடர்பாக நிறுவனத்தின் கணக்கீட்டு உத்தியோகத்தரால் இதனை சரிப்படுத்துவதற்கான நடவ டிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பதிலளிக்கப்பட்டுள்ளது என்பதை சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். மேலும் அதற்கான பதிலளிப்பை பின்வருமாறு மீண்டும் குறிப்பிட விரும்புகின்றேன். அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டத்திலும் பேரவையின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டத்திலும் இது தொடர்பில் கலந்துரை யாடப்பட்டதுடன் அதன்போது நீதி மன்றத்தால் வழங்கப்பட்டுள்ள தீர்ப்பு மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள விளக்க மளித்தல்களின் பிரகாரம் செயற்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. அத்துடன், பணிப்பாளர் சபையில் இது தொடர்பில் மீண்டும் கலந்துரையாட முடியாது என பணிப்பாளர் சபை தீர்மானித்துள்ளது. அந்த உயர்மட்ட கட்டளைகளிற்கு புறம்பாக செயற்படுவதற்கு எமக்கு முடியாதுள்ளது என தயவுசெய்து அறியத்தருகின்றேன்.
	(இ)	**2017 திசெம்பர் 21 ஆந் திகதிய 02/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை** --- ஒவ்வொரு அரசாங்க நிறுவனமும் பயன்படுத்தும் அரசுக்கு சொந்தமான ஒவ்வொரு வாகனமும் அந்தந்த நிறுவனத்தின்	JZ-622 ஆம் இலக்க வாகனம் 2020 ஜூன் 16 முதல் ஒழுங்குபடுத்தல் பேரவையால் பயன்படுத்தப்படுவது டன், அது மின்வலு அமைச்சால்

		பெயரில் பதிவு செய்யப்பட வேண்டுமென்றும், பிற நிறுவனங்களுக்கு சொந்தமான சொத்துகள் பயன்படுத்தப்படுவதாயின், அவை முறைப்படி கையகப்படுத்தப்பட வேண்டுமென்றும் வலியுறுத்தப்பட்டுள் ளது. ஒழுங்குபடுத்தல் பேரவையால் மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சுக்குச் சொந்தமான JZ – 6200 ஆம் இலக்க பிராடோ வாகனம், 2020 யூன் 16 ஆந் திகதி முதல் பயன்படுத்தப்பட்டு வருவதுடன் மீளாய்வாண்டில் இந்த வாகனத்தின் பராமரிப்பு திருத்த மற்றும் சேவைபார்ப்பு நடவடிக்கைகளிற்காக ரூபா 2,144,396 செலவிடப்பட்டிருந்த போதிலும், இந்த வாகனம் இது வரையிலும் உரிய விதத்தில் ஒழுங்குபடுத்தல் பேரவைக்கு கையேற் கப்பட்டிருக்கவில்லை.	ஒழுங்குபடுத்தல் பேரவைக்கு ஒப்படைக்கப்பட்டதாகும். இந்தக் கணக்காய்வு அவதானிப்பு தொடர்பில் கடந்த வருடத்திலும் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. அதற்காக உங்களுக்கு தெளிவான பதில்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், வாகனத்தின் உரிமையை மாற்றுவதை தீர்மானிக்க நீதிமன்றத்தின் முடிவைப் பெறுதல் வேண்டும். பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராக வாகனத்தை பராமரிக்க அமைச்சின் செயலாளர் ஒப்புதல் அளித்துள்ளார். கண்டி உயர்நீதிமன்றத்தில் வழக்கு முடிந்தவுடன் இந்த வாகனம் ஒழுங்புகடுத்தல் பேரவைக்கு ஒப்படைக்கப்படும் என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது. எனவே, நீதிமன்ற வழக்குத் தீர்ப்பு நீதிமன்றத்திடமிருந்து அமைச்சகத்திற்கு பெறப்படும் வரை இந்த பணி தாமதமாகின்றது. இந்த வழக்கு குறித்து கண்டி உயர்நீதிமன்றத்தில் இருந்து அமைச்சகம் விசாரித்ததுடன், வழக்கு இன்னும் முடிவடையவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. வழக்கு இருக்கும்போது அதை வேறு கட்சிக்கு மாற்ற முடியாது என்பது தெளிவாகிறது. நீதிமன்றத்தின் கூற்றுப்படி, வாகனம் சட்டப்பூர்வமாக ஒப்படைக்கப்படும் என்று இதற்குப் பொறுப்பான அமைச்சின் மேலதிக

			செயலாளரால் ஒழுங்குபடுத்தல் பேரவைக்குத் தெரிவிக்கப்பட்டு ள்ளது.
	2.2.3 (அ)	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுக ளுக்கு இணங்க பின்வருவனவற்றைத் தவிர்த்து, பேரவையின் அதிகாரங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணக்கமற்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என 2014 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை அணுசக்திச் சட்டத்தின் பிரிவு 10(இ) பிரகாரம், இலங்கையினால் இணங்கியொழுக்கப்படுவத ற்கு தேவைப்படுத்தப்பட்டுள்ள அணுசக்தி என்னும் துறையுடன் தொடர்புடைய சர்வதேச நியமங்களுடனும் கடப்பாடு களுடனும் இணங்கியொழுகப்படுவதை உறுதிப்படுத்துதல் பேரவையின் குறிக்கோளான போதிலும், சர்வதேச நியமங்களிலுள்ள தேவைப்பாடுகளை இலங்கைக்குப் பொருத்தமான விதத்தில் பயன்படுத்துவதற்கு விதிகள் தயாரிக்கப்பட்டு	சட்டத்தின் 10 வது பிரிவில் சட்டத்தின் நோக்கங்கள் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், இந்த நோக்கங்களிற்காக வேறுவிதமான சட்ட ஏற்பாடுகளை வகுக்க முடியாதுள்ளது. சட்டத்தில் உள்ள பிற உட்பிரிவுகளின் நோக்கங்களை வகுக்க சட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. நீங்கள் குறிப்பிட்டுள்ளவாறு சட்டத்தின் 10(இ) பிரகாரம் இணங்கியொழுகுவதற்கு சட்டத்தின் பிரிவு 12 (இ) இன் கீழ் இந்த நோக்கத்தை உறுதிப்படுத்த ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளது. இந்த விதிகளின்படி, இலங்கை இணங்கியொழுக வேண்டிய நியமங்கள் மற்றும் கடப்பாடுகளை உறுதிப்படுத்த ஒழுங்குபடுத்தல் பேரவை நடவடிக்கை எடுத்துள்ளது.

		பாராளுமன்ற அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை.	
	(ஆ)	2014 இன் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்தி சட்டத்தின் 11 (ஊ) பிரிவின் படி அயனாக்கல் கதிர்வீச்சுக்கு எதிரான பாதுகாப்பு, மூலங்கள் மற்றும் அணு கதிரியக்கப்பொருளின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு, கதிரியக்க கழிவு முகாமைததுவம் என்பவற்றிற்கான தேசியக் கொள்கையினை வகுத்தமை ப்பின் மீது உரிய அமைச்சருக்கு விதப்புரைகளைச் செய்தல் பேரவை யின் பிரதான பணியாக காணப்பட்ட போதிலும், இதுவரை அப்பணி பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	சட்டத்தின் பிரிவு 11 (ஊ) இன் பிரகாரம், கதிரியக்க கழிவு முகாமைத்துவம் குறித்த தேசிய வரைவுக் கொள்கை தயாரிக்கப்பட்டு ஏற்கனவே பணிப்பாளர் சபையின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இப்போது அதற்கு ஆர்வமுடைய தரப்பினர்களின் கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகளை பெறப்பட்ட வேண்டியுள்ளதால் அதற்காக நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், அமைச்சின் ஒப்புதலைப் பெறுவதற்காக வரைவை அமைச்சகத்திற்கு அனுப்புவதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன், கதிர்வீச்சு பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு குறித்த வரைவுகள் மற்றும் உத்திகளைத் தயாரிக்க ஏற்கனவே அடிப்படை திட்டங்களை உருவாக்கப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் சர்வதேச அணுசக்தி முகவர் நிலையத்தின் தொழில்நுட்ப ஒத்துழைப்பை பெற்று அவற்றை மீளாய்வு செய்து உரிய அங்கீகாரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.
	(இ)	சட்டத்தின் 18 ஆம் பிரிவின் பிரகாரம்	இந்தக் கணக்காய்வு வினவல் தொடர்பாக கடந்த சில

		பேரவையால் சபை உள்ளிட்ட அனைத்து நபர்களாலும் மேற்கொள்ள ப்படும் அயனியாக்கும் கதிர்வீச்சு தொடர்பான நடைமுறைகள்)Practices) உரிமம் வழங்கப்பட்டு ஒழுங்குபடுத்தப் பட வேண்டிய போதிலும், பேரவையால் அயனியாக்கும் கதிர்வீச்சு பயன்படுத்த ப்படும் இடங்களுக்கு மட்டுமே உரிமம் வழங்கப்பட்டு ஒழுங்குபடுத்தல் இடம்பெற்று வருகின்றது. அதன்படி, சபையால் வழங்கப்படுகின்ற கதிரியக்க நிலை அளவீடு, கதிர்வீச்சு அளவீட்டு உபகரண அளவுத்திருத்த சேவை, டோசிமெட்ரி சேவை மற்றும் பணி கண்காணிப்பு சேவைகள் போன்ற சேவைகளை பேரவை ஒழுங்குபடுத்தி யிருக்கவில்லை. இந்த நோக்கத் திற்காக, சட்டத்தின் பிரிவு 12 (ஒள) இன் படி, கதிர்வீச்சு அளவீடு மற்றும் கதிர்வீச்சு அளவீட்டு கருவிகளின் அளவுத்திருத்த சான்றிதழ்களை வழங் குவதில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்கு அல்லது நபர்களுக்கு ஒப்புதல் வழங்குவதற்கான நடைமுறைகள் மற்றும் வழிமுறைகளை பேரவை	ஆண்டுகளில் நீங்கள் வினவல்களை சமர்ப்பித்துள்ளீர்கள் என்பதுடன், அனைத்து வினவல்களுக்கும் ஒழுங்குபடுத்தல் பேரவை உங்களுக்கு பதிலளித்துள்ளது. ஆனால் 2022 ஆகஸ்ட் 08 ஆந் தேதியிட்ட NR/B/AERC/AERC/ AERC/AERC ஆம் இலக்க கடிதத்தின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ள அவதானிப்புகளிற்கு பின்வருமாறு பதிலளிப்பதற்கு விரும்புகிறேன். 2014 இன் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்தி சட்டத்தின் 3(ஈ), 5(ஈ) மற்றும் 5(உ) பிரிவுகளின் படி ஒழுங்குபடுத்தல் தேவைகளுக்கு கதிர்வீச்சு பாதுகாப்பு சேவைகளை வழங்க அணுசக்தி சபை நடவடிக்கை எடுக்கலாம். இதற்காக மேற்குறித்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சபைக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளதால், ஒழுங்குபடுத்தல் பேரவையிடமிருந்து விசேட ஒப்புதல் பெற வேண்டிய அவசியமில்லை. சட்டத்தின் பிரிவு 18 இன் படி, ஒழுங்குபடுத்தல் பேரவை அயனியாக்கும் கதிர்வீச்சைப் பயன்படுத்தும் இடங்களுக்கே உரிமம் வழங்குவதுடன் சேவை வழங்குநர்களுக்கு உரிமம் வழங்குவதற்கான

		உருவாக்கியிருக்க வேண்டிய போதிலும், அத்தகைய நடைமுறைகள் மற்றும் வழிமுறைகள் இதுவரை வரைவு செய்யப்பட்டிருக்கவில்லை. சர்வதேச அணுசக்தி முகவர் நிறுவனத்தால் வெளியிடப்பட்ட தொழில்சார் கதிர்வீச்சு பாதுகாப்பு பற்றிய மதிப்பீட்டு அறிக்கை (ORPAS mission report) இன் பரிந்துரையாக, பேரவையால் சபைக்கு அளவுத்திருத்த சேவைகள் உள்ளிட்ட தொழில்நுட்ப சேவைகளை வழங்கு வதற்குத் தேவையான அனுமதியை வழங்க வேண்டும் என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது:-	அதிகாரம் வழங்கப்படவில்லை. அதன்படி, சபை வழங்கும் சேவைகளிற்காக பேரவை உரிமம் வழங்குவதில்லை. ஆனால் சபையால் கதிரியக்க பொருட்களைப் பயன்படுத்துவதற்காகவும் அவற்றை வைத்திருப்ப தற்காகவும் பேரவையால் உரிமம் வழங்கப்பட்டு கட்டுப்படுத்தப்படுகிறது. எனவே, மேற்படி கருமங்களை நிறைவேற்று வதற்காக ஒழுங்குபடுத்தல் பேரவையின் ஒப்புதல் அணுசக்திச் சபைக்குத் தேவையில்லை என்பதுடன் சட்டத்தின் பிரிவு 12 (ஓ) இன் பிரகாரம் பிற கதிர்வீச்சு பாதுகாப்பு சேவை வழங்குநர்கள் காணப்படுமிடத்து அவற்றைப் பயன்படுத்துவ தற்கான பொறிமுறையொன்று எதிர்காலத்தில் உருவாக்கப்படும்.
	(ஈ)	சட்டத்தின் 49 ஆம் பிரிவின் படி பேரவையானது, பாதுகாப்பு உடன்படி க்கையின் கீழ் அடங்கியன உள்ளிட்ட சர்வதேச கடப்பாடுகளுக்கும் பொறுப்பு டைமைகளுக்கும் இணங்கியொழுகி, இச்சட்டத்தின் கீழான கட்டுப்பாட்டுக்கு அமைவாக இலங்கைக்குள் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செய்யப்படும் அணு பொருள், சாதனங் கள் மற்றும்	இந்தச் சட்டத்தின் கட்டுப்படுத்தப்பட்ட உருப்படிகளாக கருதப்படுவது மேலதிக நெறிமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டுப்படுத்தப்பட்ட உருப்படிகளாகும். மேலதிக நெறிமுறையில் இதுவரை இலங்கை கையெழுத்திடவில்லை என்பதுடன் அவ்வாறு கையொப்பமிடுவதன் மூலம் இலங்கைக்கு ஒரு விசேட வரப்பிரசாதம் கிடைப்பதில்லை. இந்த

		தொழினுட்பவியல் அடங்கிய நிரலொன் றைத் தயாரித்தல் வேண்டும். மேலும், அவ்வாறு தயாரிக்கப்பட்ட நிரலுக்கு போதியளவு பிரசித்தப்படுத்தலை பேரவையால் தீர்மானிக்கப்படுகின்ற முறையில் வழங்குதல் வேண்டுமென்ப துடன், அத்தகைய நிரல் வர்த்தமானியில் வெளியிடப்படுதலும் வேண்டும். இருப்பினும், ஒழுங்குபடு த்தல் பேரவையால் இதுவரையிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட் டிருக்கவில்லை. இலங்கையினால் 2018 ஆம் ஆண்டில் மேலதிக சாசனத்திற்காக அனுமதி வழங்கப்பட்டதாக சர்வதேச அணுசக்தி முகவர் நிலையம் அதன் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ள போதிலும், அந்த நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்து பேரவையால் பின்தொடர் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவி ல்லை.	நெறிமுறையில் கையெழுத்திடுவதற்கு சர்வதேச அணுசக்தி முகர்வ் நிறுவனம் உள்ளிட்ட சில நாடுகள் எமது நாட்டடைக் கோரியிருந்த போதிலும், இந்த நெறிமுறையில் கையெழுத்திடுவதன் மூலம் அதிலுள்ள தேவைப்பாடுகளை பூர்த்தி செய்ய முற்படுகையில் நிதி ரீதியாகவும் நிறுவன ரீதியாகவும் எமது நிறுவனத்திற்கும் இது தொடர்பில் செயற்பட வேண்டிய பிற அமைப்புகளுக்கும் ஒரு பாரிய பொறுப்பு ஏற்படும். மேலும், இது தொடர்பில் சட்டங்களை உருவாக்காமல் இதனை இலங்கையில் செயல்படுத்த முடியாது. எனவே, இந்த நெறிமுறையில் கையெழுத்திடுவதை துரிதப்படுத்துமாறு கோருவது ஒழுங்குபடுத்தல் பேரவைக்கான முக்கிய பணியாக காணப்படவில்லை. எனவே, கட்டுப்படுத்தப்பட்ட பொருட்களை வர்த்தமானியில் வெளியிடுவதை இந்த மேலதிக நெறிமுறையில் கையொப்பமிடப்படுவதற்கான தீர்மானம் எடுக்கப்படும் வரை செய்ய முடியாதுள்ளது. இருப்பினும், இதற்கான ஏனைய விதிகளைத் தயாரிக்க அதிக காலம் எடுக்கும் என்பதுடன், இதனை முன்னுரிமை பணியாக பேரவை அடையாளம் காணவில்லை.

	(உ)	சட்டத்தின் 69 வது பிரிவின்படி, அயனியாக்கும் பொருட்களின் அகழ்வுகள் மற்றும் செயலாக்க நடவடிக்கைகளில் ஈடுபடுத்தும் நபர்களால் இணக்கப்பாடு வழங்கப்பட்ட வேண்டிய அனைத்து தொழிலாளர்கள், பொதுமக்கள் மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கான தேவைகள் பேரவையால் விதிகளின் மூலம் வகுக்கப்பட வேண்டிய போதிலும், அத்தகைய விதிகள் எதுவும் உருவாக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 1999 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க அணுசக்தி பாதுகாப்பு ஒழுங்கு விதிகளிலுள்ள அயனியாக்கும் கதிர்வீச்சு பாதுகாப்பு குறித்த 4 ஆவது ஒழுங்குவிதியின் படி கதிரியக்க படிவுகளை அகழ்தல், அரைத்தல் மற்றும் செயலாக்குவதற்காக பேரவை யின் முன் அனுமதியை பெற்றுக் கொள்ள வேண்டும். ஆனால் அத்தகைய இடங்களுக்கு உரிமம் வழங்குவதற்கு தேவையான பணிகளை பேரவை செய்திருக்கவில்லை. இதன் விளைவாக, உரிமக் கட்டணம், ஆய்வுக் கட்டணம் மற்றும் கதிர்வீச்சு நிலை பரிசோதனை ஆகியவற்றிலி ருந்து அரசாங்கத்திற் கு கிடைக்க	2014 இன் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்தி சட்டத்தின பிரிவு 69 இலுள்ள விடயங்கள் தொடர்பில் விதியொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், தற்போது இவ்வாறான செயற்பாடுகள் இலங்கையில் குறைவாக இருப் தால் அவ்வாறான விதியைத் தயாரிப்பது முன்னுரிமை பணியாக இனங்காணப்படவில் லை. எவ்வாறாயினும், இவ்வாறான செயற்பாடு கள் இடம்பெறுகின்ற இடங்க ளில் சுற்றாடல், பொதுமக்களம் மற்றும் ஊழியர்களைப் பாதுகாப்பதற்காக அயனியாக்கல் பாதுகாப்பு விதிமுறைகள் அயனி பாதுகாப்பு விதிமுறைகளின் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதுடன், சில ஆய்வுகளை மேற்கொண்டு பொதுமக்கள், ஊழியர்கள் மற்றும் சுற்றாடலின் பாதுகாப்புக் கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் அந்த அறிவுறுத்தல்கள் செயற்படுத்தப்படுகின் றன. இவ்வாறான இயற்கை கதிரியக்க நடவடிக்கைகளுக்கான உரிமம் வழங்குதல் சட்டத்தின் படி செய்யப்பட முடியாததால் உரிமம் வழங்குதலின் வருமான இழப்பு எதுவும் ஏற்படவில்லை. இருப்பினும், நிறுவனங்களின்

		வேண்டிய வருவாயை இழக்கப்பட்டு ள்ளதுடன் அவ்வாறே சுற்றுச்சூழல், பொதுமக்கள் மற்றும் தொழிலாளர் களின் பாதுகாப்பை சட்டப்பூர்வமாகப் பாதுகாக்க பேரவை தவறியிருந்தது.	கோரிக்கைக்கு ஏற்ப அவ்வாறான இடங்கள் பேரவையால் பரீட்சிக்கப்படுகையில் கட்டணம் அறவிடப்படுகின்றமையால் வருமானம் உழைக் கப்பட்டுள்ளது. தற்போது இலங்கையில் அவ்வாறான இரண்டு இடங்க ள் மட்டுமே உள்ளன. மேலும் நீங்கள் சுட்டிக் காட்டியுள்ள படி அயனியாக்கல் பிரமாணங்களிலுள்ள 4 ஆம் பிரிவின் பிரகாரம் கதிரியக்க படிவுகளை அகழ்தல், அரைத்தல் மற்றும் பொதியிடுவதற்காக பேரவையின் முன்கூட்டிய அனுமதி பெறப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், இதுவரை இல ங்கையில் கதிரியக்க படிவுகளின் அகழ்வுகள் இடம்பெறவில்லை. எனவே, கணக்காய்வில் இது தொடர்பில் குறிப்பிடுவது பொருந்தாது. மேற்கூறிய அயனியாக்கல் படிவுகளை அகழ்தல் மற்றும் அரைத்துப் பொதியிடுதல் நடவடிக்கைகளை செயல்படுத்துதல் தொடர்பில் விதிகளைத் தயாரிப்பதற்காக எமது நிறுவனத்தில் இந்தத் துறையைப் பற்றிய அறிவு படைத்த ஆட்கள் முகவர் இல்லாததால், எதிர்காலத்தில் சர்வதேச அணுசக்தி நிறுவனத்திடமிருந்து நிபுணத்துவ உதவியைப்

			பெறுவதற்கு எதிர்பார்க்கின்றோம்.
	(ஊ)	சட்டத்தின் பிரிவு 86(1) இன் படி, அமைச்சர் 86(2)(அ) முதல் (ஏ) வரையிலான விடயங்கள் தொடர்பாக ஒழுங்குவிதிகளைத் (Regulations) தயாரித்து, பிரிவுகள் 86(3) மற்றும் 86(4) இன் படி வர்த்தமானியில் வெளியிடப்பட்டு, அவை பாராளுமன் றத்தின் ஒப்புதலுக்காக பாராளுமன்ற த்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதி வரையிலும் சட்டத்தில் குறிப்பிடப்பட்டு ள்ள எந்தவொரு விடயம் தொடர்பி லான கட்டளைகள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில் லை:-	2014 இன் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்தி சட்டத்தின் பிரிவு 86(2) முதல் (ஏ) வரையிலான விடயங்களைத் தவிர்த்து ஏனைய அனைத்துக் கட்டளைகளும் தயாரிக்கப்பட்டு முடிவுறுத்தப்படும் நிலையில் உள்ளன. பிரிவு 86 (எ) இன் பிரகாரம் உரிய பிரமாணங்கள் வரையப்பட்டு சட்டமியற்றுவோரின் அங்கீகாரத்திற்காக அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. 86(2) (அ) (ஆ) (இ) (ஈ) (உ) (ஊ) ஆகிய பந்திகள் மூலம் சொல்லப்படுகின்ற அனைத்துக் கட்டளைகளும் தற்போது தயாரிக்கப்பட்டுள்ள கதிர்வீச்சு பாதுகாப்பு மற்றும் கதிர்வீச்சு மூலங்களின் அவதானம் தொடர்பான கட்டளைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது டன் இந்த கட்டளைகள் பூரணப்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தக் கட்டளைகள் இறுதிக் கட்டத்தில் காணப்பட்ட சந்தர்ப்பத்தில் சர்வதேச அணுசக்தி முகவர் நிறுவனத்தின் ORPAS அறிக்கையிலுள்ள பரிந்துரைகள் மற்றும் கதிர்வீச்சு பொருட்களை அகற்றல் நிலைகள்)Liquid Radioactive Discharge Levels) என்பவற்றை இந்தக்

			கட்டளைகளில் உள்ளடக்க வேண்டிய தேவை ஏற்பட்டதால் இந்த பிரமாணங்கள் மீள தயாரிக்கப்பட்டு வருவதுடன், 2023 ஆம் ஆண்டின் போது முடிக்கப்பட்டு அமைச்சுக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மேலே குறிப்படப்பட்டுள்ள 86 (2) (ஏ) இலுள்ள கட்டளை முன்னுரிமைப் பணியாக அடையாளம் காணப்படவில்லை.
	(எ)	சட்டத்தின் பிரிவு 87(1) (அ) முதல் (ஏ) வரை குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக பேரவை விதிகளை (Rules) உருவாக்கி, பிரிவுகள் 87(2) மற்றும் 87(3) இன் படி வர்த்தமானியில் வெளியிடப்பட்டு, அவை பாராளுமன் றத்தின் ஒப்புதலுக்காக பாராளுமன்ற த்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதி வரையிலும் சட்டத்தில் குறிப்பிடப்பட்டு ள்ள எந்தவொரு விடயம் தொடர்பி லான விதிகள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில் லை. அதற்குப் பதிலாக, 1969 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க அணுசக்தி அதிகாரசபைச் சட்டத் தின்	மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு 2014 இன் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்தி சட்டத்தின் பிரிவு 87(1) (ஈ) உடன் தொடர்புடைய விதியான கதிர்வீச்சு தொழிலாளர்களின் தகுதிக்கான கருதுகோள் விதி ஏற்கனவே வரையப்பட்டு சட்ட வரைவுத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேலும், சுகாதார அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது எழுந்த கருத்துக்கள் முற்றும் முன்மொழிதல்கள் காரணமாக வரையப்பட்ட விதிக்கு சில திருத்தங்களையும் விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள கதிர்வீச்சு ஊழியர்களின் பதிவேட்டிற்கு சில திருத்தங்களையும் செய்ய வேண்டி இருப்பதனால் தற்போது அந்தத் திருத்தங்களும் செய்யப்பட்டு அமைச்சிற்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளது. பிரிவு 87(1) (உ) மற்றும் (ஊ) இல் காட்டப்பட்டுள்ள விதிகள்

		கீழ் தயாரிக்கப்பட்டு நீக்கப்பட்டிருந்த 1999 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க அணுசக்தி பாதுகாப்பு ஒழுங்குவிதி களிலுள்ள அயனியாக்கும் கதிர்வீச்சு பாதுகாப்பு குறித்த விதிமுறைகள் திரும்பப் பெறப்பட்டு தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டிருந்தன. அந்த ஒழுங்குவிதிகளை உருவாக்க பயன்படுத்தப்பட்ட 22 ஆண்டுகளுக்கும் மேல் பழமைவாய்ந்த சர்வதேச கதிர்வீச்சு பாதுகாப்பு பரிந்துரைகள் தற்போது மாற்றமடைந்து காணப்படு கின்றன.	முன்னுரிமையானவையாக கருதப்படாமையால், இதில் உள்ளடங்க வேண்டிய விதிகள் இதற்கு முன்னர் காணப்பட்ட 1969 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க அணுசக்தி அதிகாரசபை சட்டத்தின் பிரிவு 18 இன் கீழ் செய்யப்பட்ட சட்டத்தால் மேவுகை செய்யப்படுகின்றது. மேலும், சட்டத்தின் (ஒ) மற்றும் (ஓ) இன் கீழ் உள்ள விதிகள் முன்னுரிமையாக அடையாளம் காணப்படவில்லை என்பதுடன், இங்கு (ஆ) இன் கீழ் தரப்பட்டுள்ள விடயம் தொடர்பான விதி வரைவுப் பிரமாணத்தில் குறிப்பிடப்படவில்லை. எனவே, இந்த விடயம் ஒரு விதியை உருவாக்க போதுமானதல்ல. இங்கு (அ) மற்றும் (இ) இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளைத் தயாரிக்க அறிவுபடைத்த உத்தியோகத்தர்கள் இல்லை என்பதால் சர்வதேச அணுசக்தி முகவர் நிலையத்தின் ஒத்துழைப்புடன் முன்னுரிமை அடிப்படையில் இவற்றை தயாரிப்பதற்கு பேரவை நடவடிக்கை எடுத்துவருகின்றது என்பதை இங்கு தயவுடன் குறிப்பிடுகின்றேன். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள 87(அ) இற்குரிய ஒழுங்புபடுத்தல் நடவடிக்கைகள் தற்போது சர்வதேச அணுசக்தி முகவர் நிலையத்தின் கதிர்வீச்சுப் பொருட்களை பாதுகாப்பாக போக்குவரத்துச் செய்ய வேண்டிய பிரமாணத்தின் படி செயற்படுத்தப்படுவதுடன், 87(இ) பிரிவுக்குரிய

			நடவடிக்கைகள் தேசிய அணு மற்றும் கதிர்வீச்சு அனர்த்த முகாமைத்துவத் திட்டத்தின் படி செயற்படுத்தப்படுகின்றன.
	3 (அ)	**ஏனைய அவதானிப்புகள்** 1992 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் சட்டத்தின் பிரிவு 33 மற்றும் 2009 ஆம் ஆண்டின் 66 ஆம் இலக்க சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் திருத்தச் சட்டத்தின் படி, அமைச்சர் மற்றும் வேறு எந்த அமைச்சரின் ஒப்புதல் இன்றி கதிரியக்கத் தனிமங்களைக் கொண்ட எந்தவொரு கனிமத்தையும் ஏற்றுமதி செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது. அதற்கமைய, இரண்டு பொதுத்துறை மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு கனிய மணல் ஏற்றுமதிக்கான உரிமத்தை பெற விண்ணப்பிக்கும் போது கனிய மணலில் கதிரியக்க பொருட்கள் இல்லை என்ற பேரவையின் பரிந்துரையுடன் விண்ணப்பிக்குமாறு புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்க பணியகம் குறித்த நிறுவனங்களை அறிவுறுத்தி யிருந்தது. அதன்படி கனிய மணலில் கதிரியக்க பொருட்கள் உள்ளதா இல்லையா என்பது குறித்து பேரவை தனது பரிந்துரையை	2014 இன் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்தி சட்டத்தின் பிரிவு 90(2) ஐ பிரிவின் பிரகாரம் 1999 இன் அயனியாக்கல் பாதுகாப்பு தொடர்பான பிரமாணங்கள் அமுலாக்கப்பட்டுள்ளதுடன், அந்தப் பிரமாணங்களிலுள்ள 51 ஆம் பிரிவின் கீழ் எவரேனும் ஆளொருவர் பேரவையின் அங்கீகாரமின்றி கதிர்வீச்சு மூலங்களை போக்குவரத்துச் செய்யக் கூடாது. போக்குவரத்துக்கான அங்கீகாரம் இந்தப் பிரமாணத்தின் படி வழங்கப்படுவதுடன், கதிர்வீச்சுப் பொருட்களின் போக்குவரத்துக்குத் தேவையான விபரமான தெவைப்பாடுகள் தற்போது தயாரிக்கப்பட்டிராமையால் சர்வதேச கதிர்வீச்சுப் பொருள் போக்குவரத்து பாதுகாப்பு பிரமாணத்தின் (IAEA SSR -6) சட்டவிதிகள் இதற்காகப் பயன்படுத்தி அதன் கீழ் அங்கீகாரம் வழங்கப்படுகின்றது. நீங்கள் குறிப்பிட்டுள்ளவாறு சட்டத்தின் 05(ஈ) இன் கீழ் அணுசக்தி சபைக்கு பரிசோதனைச் சேவைகளை வழங்குவதற்காக அனுமதி வழங்கப்பட்டிருப்பது அது ஒழுங்குபடுத்தும் நிறுவனமாக

		செய்திருக்க வேண்டும். இலங்கை அணுசக்திச் சட்டத்தின் 87(2) மற்றும் 87(3) பிரிவின்படி, பேரவையானது சர்வதேச நியமங்களின் ஒழுங்குவிதிகளை தனது விதிகளாகப் பயன்படுத்துவதாயின், அந்த விதிகள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட வேண்டும். ஆனால் அத்தகைய ஒப்புதல் இல்லாமல், சர்வதேச கதிர்வீச்சுப் பொருட்களின் போக்குவரத்திற்கான ஒழுங்குவிதியி லுள்ள)IAEA SSR - 6) விதியினைப் பயன்படுத்தி கதிரியக்கம் கொண்ட கனிய மணல்களை ஏற்றுமதி செய்வதற்கு மீளாய்வாண்டின் போது 33 சந்தர்ப்பங்களில் பேரவை ஒப்புதல் அளித்திருந்தது. மேலும், இலங்கை அணுசக்தி சட்டத்தின் பிரிவு 5(ஈ) இன் படி, ஒரு பொருளின் அயனியாக்கும் கதிர்வீச்சு அளவை தீர்மானிக்க பரிசோதனை (testing) நடத்தும் அதிகாரத்தை அணுசக்தி சபையே கொண்டுள்ளது. ஆனால் மணலிலுள்ள கதிரியக்க அளவுகளை பேரவை அங்கீகரிப்பது தரப்புகளுக்கிடையில் நல்லுறவு மோதலை)conflict of interest)	காணப்படாமையினாலாகும். ஆதன்மூலம் ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைக்குத் தேவையான அனைத்துப் பரிசோதனை நடவடிக்கைகளும் அதனைக் கொண்டு செய்யவேண்டிய அவசியம் காணப்படுவதில்லை. மேலும், சட்டத்தின் எந்தவொரு இடத்திலும் பேரவைக்கு மாதிரிகளை பரிசோதிக்க முடியாது எனக் குறிப்பிடப்படாததுடன் சட்டத்தின் 12 (க) இன் கீழ் மாதிரிகளை சேகரித்து பரிசோதனை மேற்கொள்ள முடியும். மேலும் சட்டத்தின் 10(ஆ) இன் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி பேரவைக்கு கதிர்வீச்சிலிருந்து ஆட்களையும் சுற்றாடலையும் பாதுகாப்பதற்கு எந்தவொரு நடவடிக்கையினையும் மேற்கொள்ள முடியும். அதற்கமைய தேவையான விடத்து மாதிரிகளைப் பெற்று பகுப்பாய்வு செய்யும் பொறுப்பு பேரவைக்கு வழங்கப்பட்டுள்ளது. விசேடமாக இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செய்யப்படுகின்ற உணவுப் பொருட்கள் சாராத பொருட்களில் கதிர்வீச்சுக்கள் காணப்படும் என்ற ஐயப்பாடு நிலவுமாயின் அது தொடர்பில் எமக்கு அறிவித்த பின்னர் பொருத்தமான மாதிரிகளைப் பெற்று சட்டத்தின் 12 (க) இலுள்ள ஏற்பாடுகளின் படி பரிசோதனைகளை மேற்கொண்டு அதற்கான அங்கீகாரத்தை துரிதமாக

		உருவாக்கும் என்பது அவதானிக்கப்பட்டது.	வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செய்யப்படுகின்ற இவ்வாறான பொருட்களிற்கு மூன்று நாட்களிற்குள் அங்கீகாரம் வழங்க வேண்டியிருப்பதால் இதற்காக தாமதங்கள் ஏற்படுமாயின் அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய வருமானம் இழக்கப்படுவதுடன், நாட்டிற்கு கிடைக்கக் கூடிய கட்டளைகளும் கிடைக்காது போவதற்கான சாத்தியம் நிலவுகின்றது. ஆகையால் இவ்வாறான மாதிரிகளைப் பரிசோதிப்பதற்காக போதிய உபகரணங்களுடன் கூடிய தனியான ஆய்வுகூடமொன்று பேரவையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. உணவுப் பொருட்களில் உள்ளடங்கியுள்ள கதிர்வீச்சுத் தன்மையை பரிசோதிக்கும் அதிகாரம் தற்போது ஒழுங்குபடுத்தல் பேரவைக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆகையால் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்வதற்கான அங்கீகாரங்களை வழங்குவதற்காக மேற்கொள்ளப்படுகின்ற ஆரம்பப் பரிசோதனைகளிற்காக கட்டணம் அறவிட வேண்டிய தேவை அணுசக்தி சபைக்கு இல்லை. ஆகையால், இவ்வாறான ஏற்றுமதி மற்றும் இறக்குமதிகளிற்காக பேரவையால் பரிசோதனைகளை

			மேற்கொள்வது தொடர்பில் சட்டரீதியான சிக்கல்கள் ஏற்படுவதில்லை.
	(ஆ)	சர்வதேச பாதுகாப்பான கதிரியக்கப் பொருள் போக்குவரத்து ஒழுங்கு விதிகளின் (IAEA SSR - 6) படி ஒரு பொருட் கொள்கலனில்)consignment) இருக்கக்கூடிய அயனியாக்கும் கதிர்வீச்சின் அளவு எல்லை விஞ்சியுள்ள போது, தொடர்புடைய பொருட் கொள்கலனின் கதிர்வீச்சு மூலம் சாரதிக்கு, சாரதியின் உதவியாளருக்கு, சாலைகளில் பயணிக்கும் பொதுமக்கள் மற்றும் சுற்றுச்சூழலுக்கு வெளிப்படும் கதிர்வீச்சின் அளவை அளவிடுவத ற்காக குறித்த மண்ணிலிருந்து பெறப்பட்ட மாதிரிகளின் ஆய்வக பரிசோதனை அறிக்கைகளிலிருந்து பெறப்பட்ட அதே அளவு மணல் அந்தந்த கொள்கலன்களில் ஏற்றப்பட் டுள்ளது என்பதை பரிசோதிப்பதற்கா கவும் கொள்கலன்களிலுள்ள கதிர் வீச்சின் அளவை பரிசோதிப்பதற்கா கவும் தேவையான களப்பரிசோத னைகள் மேற்கொள்ளப்பட்டிரு க்கவில்லை. இதன்	சர்வதேச பாதுகாப்பான கதிரியக்கப் பொருள் போக்குவரத்து ஒழுங்கு விதிகளின் (IAEA SSR - 6) படி ஒரு பொருட் கொள்கலனில்)consignment) இருக்கக்கூடிய அயனியாக்கும் கதிர்வீச்சின் அளவு எல்லை விஞ்சியுள்ளதாக கணக்காய்வு அவதானிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் பொருளிருப்பு இயற்கையான கனிய மணலாக இருப்பதால் அவ்வாறான கதிர்வீச்சு எல்லை மீறல்கள் இதுவரை எமக்கு அறிவிக்கப்படவில்லை. சர்வதேச பாதுகாப்பான கதிரியக்கப் பொருள் போக்குவரத்து ஒழுங்கு விதிகளின் படி ஒரு பொருட் கொள்கலனில் இருக்கக்கூடிய அயனியாக்கும் கதிர்வீச்சின் அளவு எல்லை மீறப்படாதுள்ள சந்தர்ப்பங்களில் அதனைக் கதிர்வீச்சுப் பொருளாக வியாக்கியாணம் செய்ய வேண்டிய தேவை இல்லை என்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து வகையான கணிய மணல்களிலும் காணப்பட்ட அயனியாக்கல் கதிர்வீச்சு எல்லை நியமத்திலும் பார்க்க குறைவாகக் காணப்பட்டமையால் இந்த பொருளிருப்பு கதிர்வீச்சற்ற பொருளிருப்பாக கருதப்பட்டது. இது விஞ்ஞான ரீதியான

		விளைவாக பரிசோதனைக் கட்டணமாக (Inspection fee) பேரவைக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 15,770,000 கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை .	விடயமாக காணப்படுவதுடன் அதனை தெளிவாக புரிந்து கொள்ளாமல் கணக்காய்வின் மூலம் எடுக்கப்பட்ட முடிவு என்பது தெளிவாகின்றது. இந்தப் பொருளிருப்பு கதிர்வீச்சற்றதாக காணப்பட்டமையால் அதன் பின்னர் அது தொடர்பில் எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்வதற்கு ஒழுங்குபடுத்தல் பேரவைக்கு நட்டரீதியான அதிகாரம் இல்லை. ஆகையால் கணக்காய்வின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ள அனைத்து விடயங்களும் எமது நிறுவனத்துடன் தொடர்பற்றவையாகும்.
	(இ)	சர்வதேச அணுசக்தி முகவர் நிலையத்தால் வெளியிடப்பட்ட தொழில்சார் கதிர்வீச்சுப் பாதுகாப்பு மதிப்பீட்டு (ORPAS mission report) அறிக்கையின் படி தற்போதுள்ள வெளிப்பாட்டு சூழ்நிலைகள், திட்டமிட்ட வெளிப்பாடு சூழ்நிலைகள் மற்றும் அவசரகால வெளிப்பாடு சூழ்நிலை களை உள்ளடக்கியதாக கதிர்வீச்சு பாதுகாப்பு விதிமுறைகள் உருவாக்க ப்பட வேண்டுமாயினும், பேரவையால் உருவாக்கப்பட்ட விதிமுறைகளில் தற்போதுள்ள வெளிப்பாடு சூழ்நிலை கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.	தற்போது வரையப்பட்டுள்ள கதிர்வீச்சுப் பாதுகாப்புடன் தொடர்புடைய பிரமாணங்கள் IAEA இன் திட்டமிடல் பிரமாண வெளிப்பாட்டு நிலைமைகளின்)Planning Exposure Situation) அடிப்படையில் அமைந்தவையா கும். அவசர வெளிப்பாட்டு நிலைமைகளுடன்)Emergency Exposure Situation) தொடர்புடைய தேவைப்பாடுகள் தற்போது அங்கீகரிக்கப்பட்டுள்ள அணுவியல் அல்லது கதிரியக்கப் பொருட்கள் அனர்த்த முகாமைத்துவ திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அவ்வாறே நிலவுகின்ற வெளிப்பாட்டு நிலைமைகள்

			(Existing Exposure Situation) நாட்டில் காணப்படாமையால் அதற்குத் தேவையான பிரமாணங்களைத் தயாரித்தல் முக்கியத்துவம் வாய்ந்த பணியாக பேரவை இனங்காணவில்லை. இருப்பினும், தற்போது வரைவு செய்யப்பட்டுள்ள கதிர்வீச்சுப் பாதுகாப்பு தொடர்பான பிரமாணங்கள் மீண்டும் மீளாய்வு செய்யப்படுவதனால் பொருத்தமானவாறு மேற்குறிப்பிட்ட மூன்று வெளிப்பாட்டு நிலைமைகளையும் உள்ளடக்கும் விதத்தில் பிரமாணங்களை பூரணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
	(ஈ)	இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருட்களில் பொது சுகாதாரத்திற்கு தீங்கு விளைவிக்கும் அயனியாக்கும் கதிரியக்க பொருட்கள் இருப்பதை பரீட்சிப்பதற்காக 1995 ஜூலை 21 அன்று வெளியிடப்பட்ட வர்த்தமானி, தற்போதைய நுகர்வு முறைகளிற்கு ஏற்றவாறும் அணுசக்தி வெளியீட்டு நிலைமைகளுக்கு ஏற்றவாறும் திருத்தப்பட்டு வெளியிடப்பட்டிருக்க வில்லை. இதன் காரணமாக, தற்போது இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் பால் மாவுகளில் மாத்திரமே அயனியாக்கும்	தற்போது பிரசித்தப்படுத்தப்பட்டுள்ள ஒழுங்குபடுத்தல் விதிகளின் மூலம் அனைத்து உணவுப் பொருட்களுக்குமான கதிர்வீச்சு நிலைகள் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், எந்தவொரு அணு வெளிப்படுத்தல் காணப்பட்டாலும் எவ்வாறான நுகர்வு காணப்பட்டாலும் இந்த நிலைகளை மாற்றுவதற்கு தேவையேற்படுவதில்லை. இதற்கான காரணம் யாதெனில் எமது வலயத்திற்கு உட்பட்ட நாடுகளில் காணப்படுகின்ற கதிர்வீச்சு மட்டங்களைக் காட்டிலும் இலங்கையிலுள்ள கதிர்வீச்சு மட்டம் குறைந்ததாக காணப்படுகின்றமையாகும். மேலும், சர்வதேச சந்தையில்

		கதிரியக்கப் பொருட்கள் இருக்கின்றனவா என பரிசோதிக்கப்படு கின்றன.	எமது மட்டத்தைக் காட்டிலும் குறைந்த மட்டத்தில் உணவுப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய நிலைமை காணப்படுவதால் இந்த மட்டங்களை திருத்துவதற்கு கருதப்படுவதில்லை. உண்மையாகவே தற்போதைய நுகர்வு முறைமைக்கு ஏற்றவாறான மற்றும் அணுகதிரியக்க வெளிப்பாட்டு நிலையுடன் பொருந்துகின்ற திருத்தங்களை மேற்கொள்கையில் இந்த மட்டங்களை உயர்த்த வேண்டிய தேவை ஏற்படுவதால் அதனை அவ்வாறு செய்ய வேண்டிய தேவை இதுவரை இலங்கையில் ஏற்படவில்லை. எந்த உணவுப்பொருள் தொகுதிக்காக பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை ஒழுங்குபடுத்தல் பேரவையே தீர்மானிக்க வேண்டியிருப்பதால் அது நிலைமைக்கேற்ப அந்தந்த சூழ்நிலைகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய விஞ்ஞான ரீதியான தீர்மானமாகும். துற்போது பால்மா தவிர்ந்த ஏனைய உணவுப் பொருட்களின் இறக்குமதியின் போது அவற்றை கதிர்வீச்சுப் பரிசோதனை செய்ய வேண்டிய தேவை ஏற்படாததுடன், தேவையற்ற பரிசோதனைகளை மேற்கொள்வதனால் சர்வதேச

			வர்த்தகத்திற்கு இடையூறு ஏற்படலாம்.
	(உ)	கதிரியக்க தொழில்நுட்பத்தைப் பயன்ப டுத்தி நோய்களைக் கண்டறிவதற்கும் (diagnosis) சிகிச்சையளிப்பதற்கும் (therapeutic) பயன்படுத்தப்படும் இயந்தி ரங்களின் அளவுத்திருத்தம் மற்றும் தரக்கட்டுப்பாட்டுத் தேவைகள் உரிம நிபந்தனைகளால் கட்டாயப்படுத்தப்ப டாததால், அந்த இயந்திரங்களிலிருந்து சேவைகளைப் பெறும் நோயாளிகள் தேவையற்ற முறையில் அயனியாக்கம் செய்யப்படுவதற்கான அபாயம் உள்ளதுடன் அது தொடர்பான சேவைகளை வழங்குவதன் மூலம் அரசாங்கத்திற்கு பெறக்கூடிய வருமானம் இழக்கப்படுகின்றமையும் அவதானிக்கப்பட்டது.	கதிர்வீச்சு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நோய்களைக் கண்டறிவதற்கும் சிகிச்சையளிப்பதற்கும் பயன்படுத்தப்படும் இயந்திரங்களின் அளவுத்திருத்தம் மற்றும் தரக் கட்டுப்பாட்டை உரிமதாரர் ஒழுங்கமைக்க வேண்டும் என்று கதிர்வீச்சு பாதுகாப்பு பிரமாணங்களின் 43 (ஈ) மற்றும் 48 இன் கீழ் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இதற்காக, நோய்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகின்ற மற்றும் அணு கதிரியக்க பரிசோதனைகள் நடத்தப்படும் நிறுவனங்களின் அலுவலர்களுக்கு சர்வதேச பயிற்சிகளின் மூலமும் உள்நாட்டில் நடத்தப்படும் பயிற்சி வகுப்புகள் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. தற்போது இதற்கு மேலதிகமாக, இந்த நடவடிக்கைகள் சுகாதாரத் திணைக்களத்தின் உயிரியல் மருத்துவப் பிரிவினாலும், தொடர்புடைய உபகரணங்களைப் பராமரிக்கும் தொடர்புடைய சேவை பிரதிநிதியினாலும் மேற்கொள்ளப்படுகின்றன. எனவே, இதற்காக பிரமாணங்கள் தயாரிக்கப்படவில்லை என்று கூறுவது சரியானதல்ல. மேலும் இந்த நடவடிக்கைகள் அந்த நிறுவனங்களின் பயிற்சி பெற்ற அதிகாரிகள் மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களால்

			விதிமுறைகளின்படி செய்யப்பட வேண்டுமென்பதுடன் அரசாங்கத்திற்கு எந்த வருமானமும் கிடைக்கவில்லை என்பது சிக்கலாக உள்ளது. வழங்கப்படுகின்ற உரிமங்களில் இயந்திரங்களை அளவீடு செய்து அவற்றின் தரக் கட்டுப்பாடு செய்யப்பட வேண்டும் என்று ஏற்கனவே நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.
	(ஊ)	2021 ஆம் ஆண்டில், கதிரியக்க பாதுகாப்பு குறித்த திட்டமிடப்பட்ட தேசிய பயிற்சி செயலமர்வுகள் மற்றும் கதிரியக்க அவசரநிலைகள் மற்றும் ஆர்வமுள்ள தரப்பினர்களின் எதிர்கொள்ளல் குறித்த தேசிய பயிற்சி செயலமர்வுகள் எதுவும் மேற்கொள்ளப் பட்டிருக்காததுடன், அதே நேரத்தில் மீதமுள்ள திட்டமிடப்பட்ட பணிகளின் செயல் முன்னேற்றம் 60 முதல் 70 சதவீதம் வரை மாத்திரமாக இருந்தது.	2021 ஆம் ஆண்டில் நிலவிய கொரோனா தொற்று காரணமாக அரசாங்கம் நீண்ட காலமாக நாட்டை மூடிவைந்திருந்ததாலும், ஊழியர்களை அழைப்பதை நிறுவனம் மட்டுப்படுத்த வேண்டியிருந்ததாலும், வெளித் தரப்பினரை அழைத்து வருவதற்கு அரசாங்கம் சட்டங்களை இயற்றியிருந்ததாலும், இந்தப் பாடநெறிகளை நிகழ்நிலை மூலம் நடத்துவது நடைமுறைச் சாத்தியமற்றதாக காணப்பட்டதாலும் ஒழுங்குபடுத்தல் பேரவையால் திட்டமிடப்பட்ட கதிர்வீச்சு பாதுகாப்பு பயிற்சி வகுப்புகளை எதிர்பார்த்தபடி நடத்த முடிந்திருக்கவில்லை. ஆனால், 2020 ஆம் ஆண்டில், கொரோனா தொற்றுநோயால் ஒத்திவைக்கப்பட்ட மருத்துவத் துறையுடன் தொடர்புடைய ஒரு பாடநெறியையும் தேவையின் அடிப்படையில் 2021 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்ட தொழில்துறை தொடர்பான ஒரு பாடநெறியையும் 2021 ஆம் ஆண்டில் நடத்துவதற்கு ஒழுங்குபடுத்தல் பேரவைக்கு முடிந்திருந்தது.

			2021 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் நடத்த திட்டமிடப்பட்டிருந்த கதிர்வீச்சு அவசரநிலை முகாமைத்துவம் குறித்த ஆர்வமுடைய தரப்பினர்களிற்கான பயிற்சி வகுப்பு, 2021 ஆம் ஆண்டில் நிலவிய கொரோனா தொற்றுநோய் காரணமாக ஆர்வமுள்ள தரப்பினர்களின் பங்கேற்பு குறைந்ததாலும், சர்வதேச அணுசக்தி நிறுவனத்தின் நிபுணர்களின் கோரிக்கையின் காரணமாகவும் நடத்த முடியவில்லை. ஆனால் 2023 ஆம் ஆண்டின் 1 வது காலாண்டில் இந்த ஆர்வமுள்ள தரப்பினர்களிற்கான பயிற்சி வகுப்பை நடத்த ஏற்கனவே ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. சர்வதேச அணுசக்தி முகவர் நிலையத்தின் நிபுணர்கள் வருகை தருவதும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

3. செயலாற்றலை அதிகரிப்பதற்காக இடைக்கால மட்டத்தில் எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள்

அதிகரிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள்	திட்டமிடப்பட்டுள்ள செயற்பாடுகள்
பிரமாணங்கள், விதிகள் மற்றும் நடைமுறைகளை வரைதல்	➢ தேசிய அயனாக்கல் அல்லது கதிர்வீச்சு நிலைமைகளிற்குத் தயாராகுதல் மற்றும் எதிர்கொள்ளல் திட்டம் பூரணப்படுத்தப்பட்டு அதற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது. அந்த அங்கீகாரத்தின் பின்னர் 2023 ஆம் ஆண்டில் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளிற்கு மொழிபெயர்ப்புச் செய்யப்படும். ➢ கதிர்வீச்சுத் தொழிலாளர்கள் தொடர்பான தகைமைகளிற்காக வரைவு விதிகளை மீளாய்வுக்காக உரிய தரப்பினர்களிற்கு சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் 2023 ஆம் ஆண்டில் அங்கீகாரத்தின் பின்னர் செயற்படுத்துதல்.

	➢ கதிர்வீச்சு மூலங்களின் பாதுகாப்பு மற்றும் கதிர்வீச்சுப் பாதுகாப்பு சம்பந்தமான பிரமாணங்களை வரைதல் பூரணப்படுத்தப்பட்டுள்ளதுடன் அதனை சட்டமாக்கி நடைமுறைப்படுத்துதல் 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும். ➢ கதிர்வீச்சு மூலங்களின் அவதானம் மற்றும் கதிர்வீச்சுப் பாதுகாப்பு சம்பந்தமான பிரமாணங்களை வரைந்து 2023 ஆம் ஆண்டில் அங்கீகாரத்திற்காக அனுப்பிவைத்தல். ➢ சட்டத்தின் 11 (ஊ) பிரிவின் பிரகாரம் கதிர்வீச்சு கழிவு முகாமைத்துவம் தொடர்பிலான தேசிய கொள்கையினை வரைந்து அதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தை 2022 இல் பெற்றுக் கொள்வதுடன், ஆர்வமுள்ள தரப்பினர்களின் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தலும் அமைச்சின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக இந்த வரைவை அமைச்சுக்கு அனுப்பிவைத்தல்.
அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் மற்றும் அவற்றை பரிசோதித்தல்	➢ அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளாது பயன்படுத்தப்பட்டு வருகின்ற கதிர்வீச்சு இயந்திரங்களை கண்டுபிடிப்பதற்கான களப் பரிசோதனைகளை அதிகரித்து அந்த இடங்களை ஒழுங்குபடுத்தி கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருதல் ➢ அனுமதிப்பத்திரம் பெறப்படாத இடங்களை கண்டுபிடித்து அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் சட்டரீதியான நடவடிக்கைகளை எடுத்தல் ➢ பரிசோதனை எண்ணிக்கையினை அதிகரித்து நியமத்திற்கு முரணான இடங்களிற்கு தேவையான ஆலோசனைகளை வழங்கி அந்த ஆலோசனைகளை பின்பற்றாத இடங்களிற்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுத்தல். ➢ கதிர்வீச்சு இயந்திரங்களின் தொடர் இலக்கங்கள் அனுமதிப்பத்திரங்களில் குறிப்பிடப்படாதிருப்பின் உரிய விதத்தில் இலக்கங்களை குறிப்பிடுவதற்கு தேவையான நடவடிக்கைகளை தொடர்ச்சியாக மேற்கொள்ளல்

பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்	➢ புதிதாக ஆட்சேர்க்கப்பட்ட 03 விஞ்ஞான உத்தியோகத்தர்களை சிரேஷ்ட விஞ்ஞான உத்தியோகத்தர்களின் கீழ் ஒழுங்குபடுத்தல் பணிகளை மேற்கொள்வதற்காக தொர்ந்தும் பயிற்றுவித்தல். ➢ எமது நிறுவனத்தில் அணு அல்லது கதிர்வீச்சு அவசர நிலைமைகளை எதிர்கொள்ளும் குழுக்களை தாபித்தல் மற்றும் ஏனைய அவசர நிலைமைகளை எதிர்கொள்ளும் நிறுவனங்களிலும் கதிர்வீச்சு எதிர்கொள்ளும் குழுக்களை தாபித்தல் மற்றும் அவற்றை மேம்படுத்தலை தொடர்ச்சியாக மேற்கொள்ளல் ➢ கைத்தொழில்கள் மற்றும் ஆராய்ச்சிகளின் போது கதிர்வீச்சு விபத்துக்கள் தொடர்பில் ஒவ்வோர் 02 ஆண்டுகளிற்கு ஒருமுறை தேசிய பயிற்சிப் பாடநெறிகளை நடாத்துதல். ➢ கதிர்வீச்சு மூலங்களைப் பயன்படுத்துகின்ற மருத்துவ மற்றும் கைத்தொழில் துறைகளிலுள்ள உத்தியோகத்தர்களிற்காக கதிர்வீச்சுப் பாதுகாப்பு மற்றும் மீட்சி தொடர்பில் பயிற்சிப் பாடநெறிகளை நடாத்துதல். ➢ TLD அட்டைகளை பயன்படுத்துவது தொடர்பில் உரிய தரப்புக்களை அறிவுறுத்தல் மற்றும் அது தொடர்பில் கவனம் செலுத்துவதற்கு தொடர்ந்தும் நடவடிக்கை எடுத்தல் ➢ பேரவையில் காணப்படுகின்ற மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து பொதுமக்களிற்கு வழிப்புணர்வு ஊட்டுவதற்கான பிரச்சார நடவடிக்கைகளை திட்டமிடுதல .
அனுமதிகளை வழங்குதல், கதிர்வீச்சு பொருட்களின் போக்குவரத்து தொடர்பில் கண்காணித்தல்	➢ கதிர்வீச்சு பொருட்களின் போக்குவரத்துக்காக அனுமதியினை வழங்குதல் மற்றும் கதிர்வீச்சு பொருட்களின் போக்குவரத்து தொடர்பில் கண்காணித்தல். ➢ இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுகின்ற அனைத்து எக்ஸ் கதிர் இயந்திரங்களிற்காக அங்கீகாரம் வழங்குதல் பேரவையின் தொழிற்பாடாகும். அந்த இயந்திரங்களிற்கான அனுமதியினை விரைவாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. ➢ எதிர்காலத்தில் போக்குவரத்துச் செய்யப்படவுள்ள உயர் வீரியம் கொண்ட கதிர்வீச்சுப் பொருட்களை விசேட அதிரடிப்படையின் உதவியுடன் பாதுகாப்பாக உரிய இடங்களிற்கு போக்குவரத்துச் செய்தல். ➢ சர்வதேச அணுசக்தி முகவர் நிலையத்திடமிருந்து பேரவைக்குக் கிடைத்துள்ள கணனித் தகவல் முறைமையில் பேரவையின் தகவல்களைப் பேணுவதற்கும் அவற்றை நாளதுவரையாக்குவதற்கும் தொடர்ச்சியாக நடவடிக்கை எடுத்தல்.

	➢ பேரவையின் இணையதளத்தின் ஊடாக அனுமதிப்பத்திரங்கள் மற்றும் வசதிகள் தொடர்பான தகவல்களை பொதுமக்கள் அறிந்து கொள்வதற்காக வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
குணனி தரவு முறைமையொன்றை பேணிவருதல்	➢ நிறுவனத்தின் நிதி மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை முறைமைப்படுத்துவதற்காக தரவு முறைமையொன்றை ஸ்தாபித்து பேணிச்செல்லப்படுவதுடன், அதனை மேலும் முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
சான்றிதழ்களை வழங்குதல் மற்றும் அனுமதிகளை வழங்குதல்	➢ கதிர்வீச்சு வசதிகள் கட்டிடத் திட்டங்களிற்கு அனுமதிகளை வழங்குதலின் கீழ் 2022 ஆம் ஆண்டில் 100 கட்டிட வசதிகளிற்கான அனுமதிகளை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டது. ➢ உணவுப் பரிசோதனைகளிற்கான சான்றிதழ்களை வழங்குவதனை வினைத்திறமையாக மேற்கொள்ளல். ➢ 400 புதிய மற்றும் புதுப்பித்தல் கதிர்வீச்சு அனுமதிப்பத்திரங்களை 2023 ஆம் ஆண்டில் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.
புதிய ஆட்சேர்த்தல் நடவடிக்கைகள்	➢ 2023 ஆம் ஆண்டில் சட்ட உத்தியோகத்தர் பதவியினை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல். ➢ கோரப்பட்டுள்ள பணிப்பாளர் (நிதி மற்றும் நிர்வாகம்) பதவி அங்கீகரிக்கப்படாமையால் 2023 ஆம் ஆண்டில் பிரதி நிர்வாகப் பணிப்பாளர் பதவியை தோற்றுவிப்பதற்கு மீண்டும் கோரிக்கை விடுத்தல் ➢ 2022 ஆம் ஆண்டில் இரண்டு (02) சாரதிகளை ஆட்சேர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுத்தல் ➢ பேரவையின் பதவியணியை அதிகரித்துக் கொள்வதற்காக பிரேணைகளைத் தயாரித்து பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பித்தல் மற்றும் அவற்றை பொதுத் திறைசேரிக்கு அனுப்பிவைத்தல். ➢ எதிர்காலத்தில் வெற்றிடமாகின்ற பதவிகள் தொடர்பில் பணிப்பாளர் சபைக்கு அறிவித்து அவற்றை நிரப்புவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்

மனித வள முகாமைத்துவம் (உள்நாடு மற்றும் வெளிநாடு)	➢ சர்வதேச அணுசக்தி முகவர் நிலையம் மற்றும் ஐக்கிய அமெரிக்க குடியரசின் எரிசக்தி திணைக்களம் என்பவற்றின் கீழான விசேட விடய பயிற்சிகளில் விஞ்ஞான உத்தியோகத்தர்களை பங்குபற்றச் செய்தல். ➢ உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சியளித்தல் நிறுவனங்களினால் நடாத்தப்படுகின்ற தொடர்புடைய பயிற்சிகள் மற்றும் செயலமர்வுகளிற்காக நிர்வாக உத்தியோகத்தர்களையும் கணக்கீட்டு உத்தியோகத்தர்களையும் பங்குபற்றச் செய்தல். ➢ புதிதாக ஆட்சேர்க்கப்பட்ட விஞ்ஞான உத்தியோகத்தர்களிற்கு சிரேஷ்ட விஞ்ஞான உத்தியோகத்தர்களின் கீழ் ஒழுங்குபடுத்தல் பணிகளை மேற்கொள்வது தொடர்பில் பயிற்சியளித்தல் ➢ புதிய முகாமைத்துவ உதவியாளர்களை விசேடமாக உள்வாரி மற்றும் வெளிவாரி பயிற்சிகளிற்கு அனுப்பிவைத்தல். ➢ கிடைக்கின்ற நிதி ஒதுக்கீடுகளின் படி ஏனைய அனைத்து அதிகாரிகளுக்கும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பயிற்சிகளை வழங்குதல். ➢ சர்வதேச அணுசக்தி முகவர் நிலையத்துடன் இணைந்து அங்கீகரிக்கப்பட்ட கதிர்வீச்சு பாதுகாப்பு ஒழுங்குமுறை உட்கட்டமைப்பு வலுப்படுத்தும் செயற்திட்டத்தின் செயல்பாடுகளை அமுல்படுத்துதல் மற்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளபடி அதிகாரிகளுக்கு பயிற்சி அளித்தல். ➢ 120 கதிர்வீச்சுப் பாதுகாப்பு உத்தியோகத்தர்களிற்கும் செயற்பாட்டாளர்களிற்கும் தேசிய மட்டத்தில் பயிற்சிகளை வழங்குவதற்கு திட்டமிடுதல்
அலுவலக இடவசதியினைப் பெற்றுக்கொள்ளல்	➢ அமைச்சின் ஆலோசனைக்கு ஏற்ப கட்டிடமொன்றைப் பெற்றுக் கொள்வதற்காக செத்சிறிபாய 03 ஆம் கட்டத்தின் கீழ் கோரிக்கை விடுக்கப்பட்டமை தொடர்பில் ஆய்ந்தறிதல் மற்றும் அதற்குத் தேவையான பாதீட்டு நிதி ஏற்பாட்டை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல். ➢ அலுவலக இடவசதிக்கான கோரிக்கைகள் தொடர்பில் அமைச்சின் கவனத்தை ஈர்ப்பதற்கு தொடர்ந்தும் நடவடிக்கை எடுத்தல்.
மூலதன மற்றும் பௌதீக வளங்களை பெற்றுக் கொள்ளல்	➢ பேரவைக்கு போதாதுள்ள கணனிகள் உள்ளிட்ட பௌதீக வளங்களை தேவைக்கேற்ப கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

எச். எல். அணில் ரன்ஜித்
பணிப்பாளர் நாயகம்
இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை.